
கல்கி
KALKI
5-5-1963
30

1863 1963

இந்திய பாங்க் தொழிலின் 100 ஆண்டுகள்

நேஷனல்

அண்டு

கிரிண்ட்லேஸ்

உங்கள் பணியில்



நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸின் விரிவான பாங்கிங் தொழில் இப்பொழுது இந்தியாவில் மட்டும் 40 கிளை ஸ்தாபனங்கள் மூலம் பணியாற்றுகிறது. ஒவ்வொரு கிளை ஸ்தாபனமும் எல்லாவிதக் கணக்குகளையும — அவை சிறியதாயிருந்தாலும் அல்லது பெரியதாயிருந்தாலும் — கவனிக்கும் நிலையிலிருக்கிறது.

உங்கள் பகுதியிலுள்ள கிளை அலுவலகத்திற்குச் சென்று பாருங்கள் அங்கு திறமையும், மரியாதையான கவனிப்பும் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. உங்களுடைய பாங்கிங் பிரச்சினை எப்படிப் பட்டதாக இருந்தாலும் சரி, நேஷனல் அண்டு கிரிண்டலேஸ் ஆலோசனையைப் பெறுங்கள்.

நேஷனல் அண்டு கிரிண்ட்லேஸ் பாங்க் லிட்.

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது
(அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தலைமை ஆபீஸ் : 26, பிஷப்ஸ் கேட், லண்டன், இ.ஸி. 2

கிளைகள்: சென்னை: 3, நார்த் பீச் ரோடு, 378, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ரோடு. (லாயிட்ஸ் கிளை) 6, அரமனைக்காரத் தெரு 158, மவுண்ட் ரோடு. தூத்துக்குடி: 44, பீச் ரோடு ஹைதராபாத்: அபித் ரோட்

NGB/50/D TAM

அமிர்தாஞ்சனம் இப்பொழுது புதியதொரு சிக்கன உறையில் கிடைக்கிறது



நாட்டின் சக்திகள் எல்லாம் தற்போது தேசப் பாதுகாப்பிற்காகத் தேவைப்படுகிறது. இக் காரணத்தினால் அமிர்தாஞ்சனம் பாக்கிங்கில் ஓரிரண்டு சிறு மாறுதல்கள் ஏற்படுத்தியுள்ளோம். இதுவரை வெள்ளீய டப்பாவில் பாக் செய்யப்பட்டு வந்த அமிர்தாஞ்சனம் சீசா இனி சாதாரண அட்டைப் பெட்டியில் பாக் செய்யப்படும். மேலும், சீசாவினுள்ளே இருக்கும் அமிர்தாஞ்சனத்தின் இரட்டிப்பு பாதுகாப்புக்காக 'அலு-காப்' ஸீல் செய்யப்பட்டுள்ளது. ■ தலைவலி, சுளுக்கு, மார்பில் ஜலதோஷம், கீல் வாயுவினால் ஏற்படும் வலிகள் மற்றும் எல்லா விதமான வலிகளையும் அமிர்தாஞ்சனம் போக்குகிறது. இந்த உபாதைகள் உங்கள் உடல் நலனை பாதிப்பதனால் தொழில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. ஆகவே தொழில் உற்பத்தியைப் பெருக்கவேண்டிய இந் நிலையில் எப்போதையும்விட அமிர்தாஞ்சனம் இன்று அதிகமாகத் தேவைப்படுகிறது.

அதிக சக்திவாய்ந்தது, சிக்கனமானது, பல உபாதைகளுக்கு சிறந்தது

இன்று விற்பனையாகும் வலி நிவாரணிகளுள் அமிர்தாஞ்சனம் குறிப்பிடத்தக்க குணாதிசயங்களுடன் கூடியது. ஏனெனில், மற்ற மருந்துகளைவிட இதில் அதிக சக்தி வாய்ந்த மூலிகை சத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ■ அமிர்தாஞ்சனத்தின் இக் கூடுதலான சக்தி, சருமத்தினுள் உடனடியாக ஊடுருவிச் சென்று, ரத்த ஓட்டத்தை ஊக்கப்படுத்துவதன் மூலம் சீக்கிரத்தில் குணமளிக்கிறது. சிறிதளவு அமிர்தாஞ்சனமே வலிகளை அகற்றப் போதுமானது. வீட்டில் அனைவரும் உபயோகப்படுத்தும்போதுகூட ஒரு பாட்டில் அமிர்தாஞ்சனம் பல மாதங்களுக்குவரும்.




அமிர்தாஞ்சனம்

உபாதைகளிலிருந்து
உங்களைப் பாதுகாக்கிறது

அமிர்தாஞ்சன் லிமிடெட், 14/15 லஸ் சர்ச் ரோடு, மதராஸ் 4.

JWT/AM-2225a


மக்கள்
மலரும்
விரும்புவது
தங்கபஸ்பம்
புகையிலை
டி.ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
BS


தொடர்ந்து
உபயோகிப்பதால்
Vicco
GULKAND
விக்கோ
குல்கந்து
அஜீர்ணக் கோளாறுகளைத்
தடுக்கிறது
குங்குமப்பூ, ஏலம், பவழம் ஆகியவை கலந்து கொண்டு தயாரிக்கப்பட்டது. இனிமையான சுவை உடையது. சிறுவர்களுக்கும், முதியவர்களுக்கும் மிகவும் உபயோகமானது!
மலச்சிக்கலுக்கு கைகண்டது
குடல்களைச் சரிவர இயங்கச் செய்கிறது
Vicco
LABORATORIES
BOMBAY 14
விக்கோ லாபரடரீஸ், பம்பாய்-14
ஸ்டாக்கிஸ்டுகள்:
சென்னை: ஆர். எஸ். கவுடர் & கோ. 59, பந்தர் தெரு — சென்னை-1
கோயமுத்தூர்: N. தேசாய் கவுண்டர் & கோ. அவினாசி ரோடு — கோயமுத்தூர்
பெங்களூர்: கே. எஸ். கவுடர் & கோ கபேதார் சத்திரம் தெரு, பெங்களூர்

கல்கி



விளக்கம் 21-ம் பக்கம்

பொருளடக்கம்

சோபகிருது, சித்திரை 22உ ★ மே, 5உ 1963

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



நன்றி கூறுகிறோம் உமது நல்லாதரவுக்கு!



தரத்தையும் தன்னகத்துப் பற்றையும்
பெரிதெனக்கருதி, தாய்நாட்டுத்
தயாரிப்பாகிய எமது ரகத்தையே
தேர்ந்தெடுத்தது தங்கள் கரம்.
வற்புறுத்தலோ, கண்டனமோ எந்நிலையிலும்
விரும்பிய ரகத்தை விடாது பெருமையோடும்
துணிவோடும் பிடித்துவருகிறீர்கள்.

தந்திரமான பிரசாரங்களால் மதிமயங்கி-
விடவில்லை தாங்கள். இந் நாட்டில் தயாரிக்
கப்படும் சிகரெட்டுக்கள் சில, வேற்றுநாட்டு
ரகங்களோ என்று தவறாகக் கருதப்படு
கின்றன; அவற்றின் விலை உயர்வாக
இருப்பதுபோல தரமும் உயர்வாக இருந்து
விடுவதில்லை என்பதை உணர்ந்துள்ளீர்கள்.
தரமான சிகரெட்டுக்களை—ஆம், இன்றி
யமையாத அயல்நாட்டு நாணயமாற்றினைக்
காப்பாற்றித் தர உதவும் அசல் இந்திய
சிகரெட்டுக்களை - உற்பத்தி செய்வதற்கான
ஆள்பலம், நிதி, பொருள்வளம் யாவும்
படைத்ததே நம் நாடு என்பதை
நன்கறிந்துள்ளீர்கள்.

நீங்கள் காட்டும் வழியையும், புகை
பிடிப்பதிலே உங்களைப் பின்பற்றிப் பெருகி
வரும் மக்கட் திரளையும் பொறுத்துள்ளது
இவ் விளம் தொழிலின் வருங்காலம்.

அதிலே எமது பங்கை உணர்ந்து, செவ்வனே
தங்களுக்குப் பணிபுரிவதன்மூலம்
தாயகத்தின் தொழில்வளத்தை மேம்படுத்தும்
கடமையிலே எம்மை அர்ப்பணித்துக்
கொள்கின்றோம்.



கோல்டன் டுபாக்கோ கம்பெனி ப்ரைவேட் லிட்.,
பம்பாய்-56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT 61 TAM Greens' Advtg.



மலர் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 40

சொன்ன சொல் தவற வேண்டாம்!

கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவது என்பது ராமாயண காலத்துக்கும் முன்பிருந்து பாரத நாட்டைப் பரிபாலனம் செய்தவர்களின் தனிப் பெருமையாக இருந்திருக்கிறது. இந்தப் பூர்விகமான சத்திய சம்பத்தை நமது பிரதமர் கைவிடுமாறு செய்யும் பெரும் பாபத்துக்கு ஹிந்திப் பித்தர்கள் அடிகோலி வருகிறார்கள்.

'ஆங்கிலம் எவ்வளவு காலத்துக்கு இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்கவேண்டும் என்பதையும், ஹிந்தி எப்போது ஆட்சிமொழியாவது என்பதையும் ஹிந்தி மொழி பேசாதவர்கள்தான் நிர்ணயிக்கவேண்டும்' என்பதை மீண்டும் மீண்டும் பிரதமரவர்கள் கடந்த சில ஆண்டுகளாக வலியுறுத்தி வந்திருக்கிறார். இதுவே அரசாங்கத்தின் மொழிக் கொள்கை என்பதையும் தெளிவு படுத்தி வந்தார். அப்படிப்பட்டவரை இன்று ஹிந்தி பதேச்சாதிகாரிகள் குழம்ப வைத்திருக்கிறார்கள். 'நான் சொன்னதெல்லாம் என் சொந்த அபிப்பிராயம்தான்; சர்க்கார் கொள்கை அல்ல' என்று பிரதமர் முதலில் கூறினார். பிறகு அசத்தியத்துக்குப் பயந்து, 'இது சர்க்காரின் வாக்குறுதியே; வாக்குறுதியைக் காப்பாற்றுவோம்' என்று கூறினார். பேச்சளவில் இப்படிச் சொன்னாலும் இந்த வாக்குறுதியைச் சட்டமாக்கவும், இதற்கேற்ப அரசியல் நிர்ணயச் சட்ட ஷரத்தைத் திருத்தவும் மறுக்கிறார்.

'ஹிந்தி பேசாத மக்கள் மட்டும் இவ்விஷயத்தில் முடிவெடுப்பது என்றால் அது பூரணமான பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்குப் பங்கம் விளைவிப்பதாகும்' என்கிறார். இது சாரமற்ற வாதம். பாராளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு எதிர்ப்பு இருந்தாலும் அரசியல் நிர்ணயச் சட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வர முடியாது என்ற நியதியை அனுசரித்து வருபவர்கள் நாம். அதோடு, ஆட்சி மொழி விஷயம் மற்றச் சட்டங்களினின்று தனித்தன்மை பொருந்தியதாகும். இதன் சாதக பாதகங்கள் வடநாட்டில் ஒருவிதமாகவும், தென்னாட்டில் அதற்கு முற்றிலும் மாறுபட்டும் இருக்கும். எனவே, இவ்விஷயத்தில் பாதிக்கப்படுபவர்களின் கருத்துக்கு முதலிடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். பழைய நடைமுறையைக் காட்டி தர்மத்தைத் தள்ளுவது கிரமமல்ல.

ஹிந்தி ஆட்சிமொழியாக வேண்டும் என்று ஹிந்தி வழங்காத ராஜ்ய சட்டசபைகள் ஒவ்வொன்றிலும் நான்கில் மூன்று பங்கினர் ஒப்புதல் அளித்தாலொழிய ஆங்கிலத்தின் இப்போதைய அந்தஸ்தை மாற்றக் கூடாது. இப்படி ஒரு ஷரத்தை ஆட்சிமொழி மசோதாவில் சேர்த்தேயாகவேண்டும்.

தேசத்தின் ஐக்கியம் மிகவும் முக்கியமாக உள்ள இன்றைய நிலைமையில், அந்த ஐக்கியத்துக்கு ஊறு விளைவிக்காதிருக்க வேண்டுமானால் இதைத் தவிர வேறு வழியில்லை. 'வாக்குறுதியைக் காப்பாற்றுவோம்; ஆனால் அதைச் சட்டமாகச் செய்ய மாட்டோம்' என்ற 'வழவழ குழகுழ' சமாதானங்கள் பயன் தரா. வாக்குறுதி சட்டமாகாவிடில் எதிர்காலத்தில் ஹிந்திமொழி பேசாதவர்களின் கதி என்ன ஆகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதிருஷ்டவசமாக இன்று மொழி விஷயத்தில் விசால மனப்பான்மை கொண்ட நேருஜி பிரதமராக இருக்கிறார். எனவே அவருடைய ஆட்சிக்

காலத்திலேயே நமது நியாயமான கோரிக்கை சட்டமாக வேண்டும்.


மேற்கு வங்காளம், மைசூர் முதலிய ராஜ்ய அரசாங்கங்கள் இவ்விஷயமாகப் பேசிய அளவுக்குக்கூட நம்முடைய தமிழக அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிக்காதது வேதனையும் வெட்கமும் அளிக்கிறது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட விஷயங்களிலும்கூடப் பிரதேச நலன்களை ஒரு ராஜ்ய சர்க்கார் கவனிக்கவில்லை என்றால் அதன் பயங்காளித்தனத்தை என்னென்பது?

'நெருக்கடி காலமாகிய தற்போது நாம் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும்' என்று தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் சில 'ஹிதோபதேசம்' செய்கின்றன. இது நெருக்கடி காலம் என்று உண்மையாகவே அரசாங்கம் கருதினால், சர்ச்சைக்குரிய ஒரு மசோதாவை இப்போது கொண்டு வந்திருப்பார்களா? நெருக்கடி காலம் என்பதற்காக நம் தலையில் நாம் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ள வேண்டுமா, என்ன? ஆட்சி மொழி மசோதா சட்டமானால்தான் பெரிய நெருக்கடி உண்டாகும். தேசத்தின் ஐக்கியம் குலைய அதுவே ஆக்கம் அளிக்கும். நியாயமான எதிர்ப்பைக் கண்டித்துச் சத்தியத்தின் குரலை ஒடுக்கப் பார்ப்பது ஆபத்தில் முடியும்.

சங்கீதத் திருநாள்

ஸ்வாதித் திருநாளின் நூற்றி ஐம்பதாவது பிறந்த தினம் நிகழும் மே 8-ந் தேதி சங்கீத ரஸிகர்களுக்கெல்லாம் ஒரு திருநாள்.

ஸ்ரீ ராமன் நாட்டை மட்டும் பரிபாலனம் செய்யாமல் இசை மரபையும் வழுவாது பரிபாலனம் செய்ததாக, அவனை 'சங்கீத சாம்ப்ரதாயகன்' என்று நாதயோகி ஸ்ரீ தியாகராஜர் வாழ்த்தியிருக்கிறார். நீதி சாஸ்திரம், தநுர் வேதம் இவற்றோடு, காந்தர்வ வேதம் என்று மதிக்கப்பட்ட லலித கலைகளையும் பயிலுவது பாரத மன்னர்களின் வழக்கமாகும். இந்தத் தொன்று தொட்ட வழக்குக்குச் சமீப காலத்தில் சான்றாகத் திகழ்ந்தவர் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள். அவரது இசைத் தொண்டு பற்றிச் சென்ற வார 'கல்கி' இதழில் செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யர் அவர்களும் இவ்விதழில் டாக்டர் நாராயண மேனன் அவர்களும் கூறியிருப்பதற்கு மேல் நாம் ஏதும் சொல்லத் தேவையில்லை. பாட்டரசராக இலங்கிய இந்த நாட்டரசருக்கு நமது அஞ்சலியைத் தெரிவிக்கு முகமாக மேலட்டையில் அவரது திரு உருவத்தை வெளியிடுகிறோம்.



தீரம் எங்கே போயிற்று?


ஸ்ரீ ஸ்வாதித் திருநாளுக்கு இந்தியக் கலை உலகம் முழுவதும் அஞ்சலி செலுத்தும் பாங்கு பெருமையூட்டுவதாக இருக்கிறது. முக்கியமாக இவ்விஷயத்தில் வானொலியினர் எடுத்துக் கொண்டுள்ள சிரத்தை குறிப்பிட வேண்டியதாகும். ஆங்கிலக் காலண்டர்படி ஸ்வாதித் திருநாளின் பிறந்த நாளான ஏப்ரல் மாதம் 16-ந் தேதியிலிருந்து பற்பல வானொலி நிலையங்களிலும் இசை விழாக்கள் கொண்டாடுவதோடு, எல்லா நிலையங்களுக்கும் பொதுவான அகில பாரத ஒலிபரப்புக்களுக்கும் ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுதற்குரியது. ஸ்ரீமான்கள் செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர், ஜி.என்.பாலசுப்பிரமணியம், ஆலத்தூர் சகோதரர்கள், அண்ணுஸ்வாமி பாகவதர், கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, மாயவரம் கோவிந்தராஜப் பிள்ளை, கே. வி. நாராயணஸ்வாமி, டி.எம். தியாகராஜன், எம்.ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதர், சீர்காழி கோவிந்தராஜன், என். ராதாகிருஷ்ண நாயுடு, கே. எஸ். நாராயணஸ்வாமி முதலியவர்கள் இசை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றனர். ஸ்வாதித் திருநாளின் ஹிந்துஸ்தானி சங்கீத சேவைக்கு டாக்டர் ரதன் ஜங்கர், கஜானன் ஜோஷி ஆகியோர் நன்றி செலுத்துகிறார்கள். நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்த வானொலி மந்திரி ஸ்ரீ கோபால ரெட்டி, மற்றும் திருவிதாங்கூர் இளைய மகாராஜா மார்த்தாண்ட வர்மா, டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், டி. எல். வேங்கடராமய்யர், டாக்டர் வே. ராகவன், முசிரி சுப்பிரமணிய அய்யர், ஸ்ரீமதி ருக்மிணிதேவி, பேராசிரியர் ஆர். ஸ்ரீநிவாசன், டாக்டர் குஞ்சுண்ணி ராஜா ஆகியோரின் உரைகளும் ரஸிகர்களுக்கு நல்விருந்தாகக் கிடைக்கின்றன.

சென்னை வானொலியின் ஸ்வாதித் திருநாள் விழாவை ஏப்ரல் 16ந் தேதி 'பாவயாமி' பாடலுடன் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தொடங்கி வைத்தார். மே 8ந் தேதி இரவு 9-30லிருந்து 11 மணி வரை மியூஸிக் அகாடமியில் ரஸிகர்களின் முன்னிலையில் ஸ்ரீமதி எம். எஸ். நிகழ்த்தும் கச்சேரியின் வானொலி அஞ்சலுடனேயே சென்னை நிலைய விழா நிறைவுறுகிறது. ராமாயணத்தைச் சுருக்கித் தரும் 'பாவயாமி' பாடலின் சில கட்டங்களை இவ்விதழில் மணியத்தின் வண்ண மடலாக அளித்து நேயர்களை மகிழ்விக்கிறோம்.

என்ன சேதி?

வேத விற்பன்னருக்கு விருது

பாரதத்தின் ஆத்மீக மொழியான சம்ஸ்கிருதத்தைக் கௌரவிப்பது என்ற நல்ல வழக்கத்தை மேற்கொண்டுள்ள இந்திய அரசு இவ்வாண்டு மூன்று வடமொழி வல்லுநர்களுக்குப் பாராட்டிதழ் வழங்கியுள்ளது. இவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த அக்னிஹோத்திரம் ஸ்ரீராமானுஜ தாதாசாரியார் அவர்கள் ஒருவர் என்பது நமது நாகரிகத்தை மதிக்கத் தெரிந்தவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் விஷயமாகும். குடந்தையில் வித்வத்துக்குப் பெயரெடுத்த ஒரு வைணவக் குடியில் பிறந்த ஸ்ரீ தாதாசாரியர் விசிஷ்டாத்வைதத்தில் மட்டுமின்றிப் பாரதத்தின் சிறப்பான தத்துவங்கள் யாவற்றிலும் அளப்பரும் தேர்ச்சி பெற்றவராவார். பரந்த கல்வி பெற்றதன் பயனைப் பரந்த உள்ளமும் பெற்றவர் அவர் என்பதை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளிடம் அவருக்குள்ள ஈடுபாட்டிலிருந்து அறியலாம். ஆங்கிலத்தில் தமக்குள்ள ஞானம் காரணமாகத் தமது சம்ஸ்கிருதக் கல்வியின் பயனை அவர் நாட்டின் படிப்பாளிகளுக்கெல்லாம் அளித்து வருகிறார். அக்னி ஹோத்திரம் ஸ்ரீ ராமாநுஜ தாதாசாரியார் அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து பாரதப் பண்புக்குத் தொண்டு புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.



ஸ்ரீ தாதாசாரியார்

செங்கல் பிரச்னை

செங்கலுக்கு விலைக் கட்டுப்பாடு வந்துவிட்டது. சென்னையிலும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் உடனடியாக அமுல். பின்னல் மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்படலாம். கட்டுக்கடங்காமல் உயர்ந்துவிட்ட செங்கல் விலை இனி ஓரளவுக்குக் குறையுமா குறையாதா என்று போகப் போகத்

தான் தெரியும். கூலி அதிகம், கரி கிடைக்கவில்லை, மற்றச் செலவு அதிகம் என்று ஏற்கத் தகுந்ததும் ஏற்கத் தகாததுமான பல காரணங்களைச் செங்கல் உற்பத்தியாளர்கள் சொல்கிறார்கள். இவற்றுக்கும் செங்கல் விலை ஒரேயடியாக ஏறியதற்கும் சம்பந்தம் இல்லை என்பது மக்களின் அபிப்பிராயம். செங்கல் உற்பத்தியாளர்கள் இப்போது வீடு கட்டும் மத்தியதர வகுப்பினர்களின் சாபத்துக்கு ஆளாகியிருக்கிறார்கள். கண்ட்ரோல்களினால் இரு தரப்புக்கும் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும். இனி செங்கல் உண்மையிலேயே கண்ட்ரோல் விலைக்குக் கிடைக்குமா, அல்லது செங்கல்லில் கூடக் கறுப்பு மார்க்கெட் உருவாகுமா என்று சொல்ல முடியாது.

ஹிந்தியும் கம்யூனிஸ்டுகளும்


ஊருக்கெல்லாம் ஒரு வழி என்றால் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் தனி வழி. ஹிந்தி மொழி பேசாத மக்கள் மீது ஹிந்தியைத் திணிக்கக் கூடாது என்று அறிஞர்கள் எல்லோரும் ஒருமுகமாகக் கருதும்போது கம்யூனிஸ்ட் கட்சியினர் மட்டும் ஹிந்திதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆங்கிலம் அந்நியர்களுடைய மொழி; அதை ஏற்றால் நாட்டின் தன்மானத்துக்கு இழுக்கு; ஆகவே, ஆங்கிலத்தை நீடிக்கக்கூடாது என்று வாதிக்கின்றனர். இதில் சுதேச - விதேச வாதத்தை இழுப்பது பொருத்தமற்ற செயலாகும். ஆங்கிலம் உலக நடப்புக்களுக்கே ஒரு சாளரம். ஆங்கில ஆதிக்கத்தில் ஒருபோதும் இருந்திராத நாடுகளும் அதன் விஞ்ஞான முக்கியத்தைக் கருதி அதைக் கற்று வருகின்றன. அந்நியர் ஆட்சி என்ற துரதிருஷ்டத்தின்போதே நமக்கு ஒரு நல்லதிர்ஷ்டமாக ஆங்கிலம் கிடைத்தது. நாட்டின் எல்லா அறிஞர்களையும் இணைத்தது ஆங்கிலமே.

காங்கிரஸ் கட்சியை ஆதரித்துப் பேசுவது கம்யூனிஸ்ட்களுக்கு அநுகூலமாக இருக்கிறது என்பது மட்டும் அவர்கள் போக்குக்குக் காரணமன்று. நாட்டில் சீன ஆக்கிரமிப்புக்குப் பின் ஏற்பட்ட எதிர்பாராத ஒற்றுமையை எவ்விதத்திலேனும் குலைக்க முடியுமானால் அதைக் கம்யூனிஸ்ட்கள் வரவேற்கவே செய்வார்கள். நாடு இரண்டுபட்டுக் கலவரமான சூழ்நிலை ஏற்பட்டால் கம்யூனிஸ்டுகளுக்கு அது சாதகமான நிலை.

நேபாவும் தங்கக்கட்டுப்பாடும்

சீன எதிர்ப்பைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எடுத்துக்கொண்ட தங்கக் கட்டுப்பாடு முறைகள் சீனர்களுக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கும் வரவேற்பாக இருக்கிறது என்பது நேபா பகுதியில் சுற்றி விட்டு வந்த திரு டி. எஸ். பட்டாபிராமன் அவர்களின் வானொலிப் பேச்சிலிருந்து தெரிய வருகிறது.

நேபா பகுதி மலைஜாதியினர் ஒரு வகை பொன்னாபரணங்களை மிக முக்கியமாகக் கருதுகிறார்களாம். இந்தத் தங்கக் கட்டுப்பாடு காரணமாக அவற்றின் விலை ஏறியும் கிடைக்காமலும் போகவே, சீனர்கள் அந்த ஆபரணங்களைக் குறைவான விலையில் அப்பகுதிகளில் விற்கிறார்களாம். இதைப்பற்றி டி. எஸ். பட்டாபிராமன் அவர்களே கூறுவதைப் பாருங்கள்: ''திருமணம் ஆகும்போது மணமகன் பெண்ணிற்கு Deo Kahis Deo Chandis என்கிற தங்க ஆபரணங்கள் பரிசாக அளிக்க வேண்டும். முன்பெல்லாம் சுமார் ரூ. 100 அல்லது ரூ. 150க்கு இந்த நகைகள் கிடைத்து வந்தன. ஆனால் இந்தியாவில் அமுலாக்கப்பட்ட தங்கக்கட்டுப்பாட்டினால் சமீப காலத்தில் இந்த ஆபரணத்தின் விலை ரூ. 300 அல்லது ரூ. 400 ஆக உயர்ந்து விட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு இந்த ஆதிவாசிகளின் நல்லெண்ணத்தைச் சம்பாதிப்பதற்காகச் சீனர்கள் திபெத்தின் எல்லையில் இந்த ஆபரணத்தை ரூ. 100 அல்லது அதற்கும் குறைவாகவே இவர்களுக்கு விற்று ஏமாற்றி வருகிறார்கள்.''





புகழ் பெற்ற கடிதங்கள்

1. கெடுவார் கேடு நினைப்பார்

ரோம ஏகாதிபத்தியத்தின் சக்கரவர்த்தியாகக் கி. பி. 54 முதல் 68-ம் வருஷம் வரை ஆண்ட நீரோ என்பவன், பிறர் துன்பத்திலே இன்பம் நுகரும் தன்மையன்; காமக் குரோதங்களில் அழுந்தியவன். இவன் தாயார் அக்ரிப்பினா என்பவள், ஒழுக்கத்துக்குப் புறம்பானவள்; தான் நினைத்ததைச் செய்து முடிக்க இழிதகைமையின் ஆழத்துக்குத் துணிந்து சென்றவள்.

தன் மகன் நீரோ, அரசு கட்டிலில் அமர வேண்டுமென்பதற்காக இவள் செய்த சூழ்ச்சிகள் பல.

நீரோ ஆளத் தொடங்கிய சில ஆண்டுகளுக்குப் பிறகு, தன் ஆஸ்தான பிரபுக்களில் ஒருவனாயிருந்தவனும், தனக்குப் பின்னால் பட்டத்துக்கு வரப் போகிறவனுமாகிய ஆத்தோவின் மனைவி ஸபீனா என்பவளின் மோக வலையிலே சிக்கிக்கொண்டு அவள் இஷ்டத்துக்கெல்லாம் ஆடி வந்தான். அவள், நீரோவினிடத்தில் தன் செல்வாக்கு நிலைத்திருக்க வேண்டுமென்பதற்காக, அவனுக்கும் அவன் தாயார் அக்ரிப்பினாவுக்கும் மனஸ்தாபத்தை உண்டு பண்ணினாள்; அவனைக் கொல்ல அவள் சூழ்ச்சிகள் பல செய்து வருகிறாளென்று கோள் மூட்டினாள். நீரோவும் இதற்குச் செவி கொடுத்தான். தாயார் மீது வெறுப்புக்கொண்டு அவளை மரணத்துக்குட்படுத்தி விடும்படி உத்தரவிட்டான். இதன் பிரகாரம், பொழுது போக்குக்காகக் கடலில் சிறிது தூரம் சென்று வரலாமென்று காரணம் சொல்லி, அவளை, வெடி மருந்து வைக்கப்பட்ட ஒரு கப்பலில் அழைத்துச் சென்றார்கள். அது கடலில் சிறிது தூரம் சென்றதும், வெடித்துச் சுக்குநூறாகப் போய் விட்டது. ஆனால் அக்ரிப்பினா தப்பி விட்டாள். நீந்திச் சென்று கரையடைந்தாள். அடைந்ததும், நீரோவின் கட்டளைப் படியே தன்னை மரணத்துக்குள்ளாக்கும் முயற்சி நடைபெற்றிருக்கிறது என்று ஊகித்துக் கொண்டாள். இதற்கு உடந்தையாக இருக்கக் கூடுமென்று நீரோவின் அத்தை சிலானாவின் மீது என்ன காரணத்தினாலோ சந்தேகங் கொண்டாள். நீரோவுக்கு, தான் நிரபராதி என்பதைக் கட்டிக் காட்டி உருக்கமானதொரு கடிதம் எழுதினாள். அது வருமாறு:—


மலடியான (உன் அத்தை) சிலானாவுக்குத் தாய்ப் பாசம் இன்னதென்று தெரியாமல் இருப்பது குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. பிள்ளையே பெறாத ஒருத்திக்கு, பிள்ளையை இழந்துவிட்டதனால் ஏற்படக் கூடிய துக்கத்தை எப்படிச் சகித்துக் கொள்வது என்பது பற்றித் தெரியாமல் இருப்பது சகஜமே. இயற்கையானது, நாம் அனுபவிக்காத ஒன்றின் மீது வெறுப்புக் கொள்ளச் செய்கிறது; அல்லது அதனை அலட்சியமாகக் கருதும்படி செய்கிறது.

பொதுவாகத் தாய்மார்கள் தங்கள் சந்தானங்களின் விஷயத்தில் எவ்வளவு அன்பு உடையவர்களாக இருக்கிறார்கள் என்பது மகனே, உனக்குத் தெரியாதா? அவர்களுடைய அன்பு இயற்கையாகவே உள்ளது; எல்லையற்றது. அவர்களுடைய மென்மையான சுபாவமானது அந்த அன்பைப் போஷித்து வளர்க்கிறது.

ஒரு தாய், தன் உயிரைப் பணயமாக வைத்து எதைப் பெற்றாளோ, அதைக் காட்டிலும் அருமையானது வேறொன்றும் அவளுக்கு இருக்க முடியாது. எதைப் பெறுவதற்காக அவள் துக்கத்தையும் துன்பத்தையும் சகித்துக் கொண்டாளோ, அதைக் காட்டிலும் மதிப்புடையது வேறொன்றும் அவளுக்கு இருக்க முடியாது. சுகப்பிரசவம் ஆகும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருப்பதனால்தான், அவள், பிரசவ வேதனையைப் பொறுத்துக் கொள்கிறாள். அப்படி அவள் பொறுத்துக் கொள்ளாமற் போனால் வம்ச விருத்தி யென்பது இல்லாமலே போகுமல்லவா?

மகனே, ஒன்பது மாத காலம் உன்னை என் வயிற்றிலே வைத்துக் காப்பாற்றினேன். என் ரத்தத்தைக் கொண்டு உன்னைப் போஷித்து வந்தேன். இவைகளை நீ மறந்து விட்டாயா? உன்னைப் பெற்றெடுக்க எவ்வளவோ கஷ்டப்பட்ட நான் உன்னைக் கொல்ல முயல்வேனா? ஒருகால், உன்மீது அளவுகடந்த பாசம் வைத்திருந்ததற்காக, தெய்வங்கள் என் மீது கோபித்துக் கொண்டு என்னை

வெ. சாமிநாதசர்மா



இந்தத் தண்டனைக்குள்ளாக்கி யிருக்கின்றனவா ? அப்படித் தானே நினைக்க வேண்டி யிருக்கிறது?

'துரதிர்ஷ்டக்காரியான அக்கிப்பினே, உன்னைக் குற்றவாளி என்று யாரும் நினைக்க மாட்டார்கள். அப்படியிருந்தும் நீ குற்றவாளி என்று உன் மகனுலேயே சந்தேகிக்கப்படுகிறாய்!'

கீழ்த்தரமான ஒரு பெண்கூட, தன் மகனைக் கொல்லும் முயற்சியில் இறங்க மாட்டாள். அப்படிப்பட்ட ஒரு குற்றத்தை என் மீது சுமத்தி விட்டு, என்னைச் சக்கரவர்த்தினி என்று அழைப்பதில் எனக்கென்ன பெருமை இருக்கிறது? அரசவையின் காற்றைச் சுவாசிப்போர் மிகவும் துரதிர்ஷ்டக்காரர்கள். மேலான அறிவு படைத்தவர்கள்கூட அந்த அரசவையிலிருந்து உண்டாகும் புயற் காற்றினின்று தப்ப முடிவதில்லை. அங்கு நிலவும் அமைதிகூடச் சில சமயங்களில் ஆபத்தா யிருக்கிறது. ஆனால் அரசவையை நான் ஏன் குறைகூற வேண்டும்?

மகனே, நீயே சொல்; உன்னைக் கொல்ல நான் ஏன் சதி செய்ய வேண்டும்? இன்னும் அதிகமான துன்பத்தை அனுபவிக்கவா? உன்னை வீழ்த்தி விட்டு நான் அடையப்போகிற நன்மைகள்தாம் யாவை?


ஆனால் ராஜ்ய ஆதிக்கம் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள், இயற்கை நியதிகளை மீறி நடக்கத் துணிகிறார்கள். அதற்காக அவர்கள் நியாயமாகப் பெற வேண்டிய தண்டனையைக்கூடப் பெறுவதில்லை. எப்பொழுதுமே பேராசையானது, தான் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள, எந்தத் தீய செயலிலும் இறங்கத் தயங்குவதில்லை.

உன்னைக் கொல்ல" நான் சதி செய்திருப்பேனுகில், நான் எந்தத் தெய்வத்தினிடம் சென்று பாவ மன்னிப்புக் கோருவேன்?

நீ மேலும் புகழ்பெற வேண்டும் என்பதற்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன்? எத்தனையோ கஷ்டங்களைச் சமாளித்திருப்பேன்? ஆனால் அவைகளையெல்லாம் பற்றிச் சொல்லிக் காட்டி, அவைகளுக்காக நீ எனக்கு நன்றி செலுத்தவேண்டுமென்று நான் எதிர்பார்ப்பதாகக் கருத வேண்டாம். அப்படி எதிர்பார்ப்பது, உன் நன்றி உணர்ச்சிக்குப் பங்கம் விளைவிப்பதாகும். நிரபராதி என்று சொல்லி என்னை நான் காப்பாற்றிக் கொள்ள விரும்பவில்லை. நீ நியாயம் வழங்குவாய் என்று நம்புகிறேன்.

இந்த உருக்கமான கடிதத்தைக் கண்டுகூட நீரோவின் மனம் மாறவில்லை. அக்கிப்பினேவைக் கொலை செய்து விடும்படி உத்தரவிட்டான். அவளும் கொலையுண்டாள்.

அக்கிப்பினேவைக் கொலை செய்யுமாறு தூண்டிய பாப்பேயாவின் கதி என்னவாயிற்று? ஒருநாள், நீரோ, அதிக கோபத்துடனிருக்கையில், அவளைக் காலால் உதைத்தான். அவள் அப்பொழுது கர்ப்பமாயிருந்தாள். உதைபட்டதன் விளைவாக இறந்து விட்டாள். அவள் இறந்து ஒன்பது வருஷங் கழித்து, நீரோ, ஜனங்களுடைய வெறுப்புக்குப் பாத்திரமாகித் தற்கொலை செய்து கொண்டான்.



மேலே: ரோமாபுரி தீப்பற்றி எரிந்தபோது மன்னன் நீரோ கிறிஸ்தவர்கள் மீது பழிசுமத்தி அவர்களில் பலரைத் தனது அரண்மனைத் தோட்டத்தில் கம்பங்களில் கட்டித் தீவட்டிகளாக எரியச் செய்தான்.

இடது பக்கம்: ரோமாபுரி சிற்பம். நைல் நதியை ஆஜானுபாகுவான ஒரு மனிதனாக உருவகப்படுத்தியிருக்கிறான் சிற்பி. அந் நதியினால் பயன் பெறும் நாடுகளே குழந்தைகள்!

திருச்சியில் ஓர் எழுச்சி

எத்தனையோ மகாநாடுகளைப் பார்த்திருந்தாலும் திருச்சி சுதந்திரக் கட்சி மகாநாடு போல் இது வரை எங்குமே நடந்தது இல்லையாது என்று சொல்லும்படி அவ்வளவு சிறப்பாக அமைந்தது. அதற்குக் காரணம் அன்று கூடிய மக்கள்தான். சுதந்திரக் கட்சியின் கொள்கைகளும் பேச்சாளர்கள் யார்யார் என்பதும் மக்களுக்குத் தெரிந்ததுதான் என்றாலும், ஏன் இப்படி ஆயிரம் ஆயிரமாக மக்கள் திரளாக வரவேண்டும், சாலைகளில் கூட்டம் கூட்டமாக நின்று மகாநாட்டுப் பிரசங்கங்களைக் கேட்க வேண்டும் என்று யோசிக்கும் போது, ஒரு விஷயம் புலனாகிறது. இன்று மக்களுக்குச் சுதந்திரக் கட்சியினிடம் முன்பு இருந்ததை விட அதிகமான பரிவும் ஈடுபாடும் ஏற்பட்டிருக்கின்றன. அதன் கொள்கைகளில் புது நம்பிக்கை பிறந்திருக்கிறது. இன்று மக்களுக்கு வாழ வழிசெய்ய ஒரு கட்சி உண்டென்றால் அது சுதந்திரக் கட்சிதான் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டது. தங்கக் கட்டுப்பாடும், பட்ஜெட்டும் சுதந்திரக் கட்சி சொல்லி வந்ததை மெய்ப்பித்து விட்டன! அதனால்தான் கோவை மகாநாட்டைவிட, நாகை மகாநாட்டை விடத் திருச்சி மகாநாடு மிகச் சிறப்பாக அமைந்தது.

21-ம் தேதி காலை ராஜப்பா குழுவினரின் இனிய நாகஸ்வர ஒலி வந்ததைக் கேட்டதும், தஞ்சை, கோவை, சென்னை, ராமநாதபுரம், மற்றும் பல மாவட்டங்களிலிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளுக்கு இது தான் மகாநாடு நடக்கும் 'தேவர் ஹால்' என்பது தெளிவாகிவிட்டது. ஆகவே ஒன்பது மணிக்கு முன்னதாகவே பிரதிநிதிகள் குழுமி விட்டார்கள். சரியாக ஒன்பது மணிக்கு, ராஜாஜியும் மகாநாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

கடவுள் வாழ்த்துடன் தொடங்கியது, மகாநாடு. வரவேற்புக் கமிட்டித் தலைவர் திரு பா. பொன்னம்பலக் கவுண்டர் அரிய வரவேற்புரை வாசித்து எல்லாரையும் வரவேற்றார். திருநெல்வேலி ஜில்லா சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ராமசாமிக் கோனார் கொடி ஏற்றி வைத்து ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். விவசாயத் துறையில் சர்க்கார் பிரவேசித்து எப்படி நஷ்டத்தை விளைவித்து வருகிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்து விளக்கினார்.

தலைமை வகித்த திரு ஜி. கே. சுந்தரம் தொழிலதிபர். அவர் தக்க புள்ளி விவரங்களோடு இன்று ஆளும் கட்சியின் அதிகார பாஷை வித்தியாசங்களின்றி எடுத்துரைத்த போது, சபையோரின் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதிந்தது. "இது நெருக்கடியான காலம். பணத்தை விரயம் செய்யாதீர்கள்!" என்று மக்களுக்கு உபதேசம் செய்யும் இன்றைய சர்க்கார் சமீபத்தில் கோவையில் ஜனாதிபதியின் சில நிமிஷ வருகைக்காக லட்சக்கணக்கில் சாலை மராமத்துக்காகச் செலவழித்தது என்று ஒரு சிறிய உதாரணம் கூறியபோது சபையோர் திடுக்கிட்டனர்.


இந்த மகாநாட்டில் பலர் பல தீர்மானங்களின் மீது அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். அவற்றை யெல்லாம் இங்கு கூறிக் கொண்டிருக்க இயலவில்லை. முக்கியமாகச் சுதந்திரக் கட்சி பொருளாளர் சித்ரா ஸ்ரீ எஸ். நாராயணசுவாமி அவர்கள் தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றியும் இன்றைய வரித் திட்டத்தைப் பற்றியும் மிக வன்மையாகக் கண்டித்துப் பேசினர். 'பணக்காரர்களுக்கு வரி விதிப்பதாகச் சொல்லிக் கொண்டு கம்பெனிகள் மீது விதிக்கும் அதிக லாப வரி முதலியன எல்லாம் உண்மையில் ஏழை நடுத்தர வர்க்கத்தினரை அழிக்கும் திட்டமாகும். ஏனெனில் கம்பெனிகள் இன்று ஒன்றிரண்டு முதலாளிகள் மட்டும் மூலதனம் போட்டு நடத்தப்படுவன அல்ல. நடுத்தர வர்க்க மக்களின் சிறு சேமிப்புக்களான பத்து ரூபாய், நூறு ரூபாய் சேமிப்புக்களை ஆயிரக் கணக்கான பேர்களிட மிருந்து கோரிப் பெற்று நடத்தப்படுவன இன்றையக் கம்பெனிகள். கம்பெனிகள் பெறும் லாபத்தில் நல்ல பங்கு கிடைக்கும் என்ற எண்ணத்தில்தான் நடுத்தர ஏழை மக்கள் பங்குதாரர்களாகிறார்கள். ஆகவே கம்பெனிகளின் மீது விதிக்கும் வரி உண்மையில் நடுத்தர வர்க்கத்தினரான பங்குதாரர்கள் வாயில் மண்ணைப் போடச் செய்யும் திட்டமாகும். சோஷலிஸபாணி சர்க்கார் எப்படி நடுத்தர வர்க்கத்தினரிடம் இனிக்கப் பேசி மோசம் செய்கிறது என்பதை இதைவிடத் தெளிவாக எப்படித்தான் கூற முடியும்?

சுதந்திரக் கட்சித் தலைவர் திரு சா. கணேசன் அவர்கள் 'நகர்ப்புற நிலவரி' என்று சென்னை சர்க்கார் புதிதாகப் போட்டுள்ள வரி சென்னை நகரத்தோடு மட்டும் நின்று விடுவதல்ல. ஒவ்வொரு நகரத்துக்கும் பரவி மக்களை வதைக்கப் போகிறது என்று எச்சரிக்கை செய்தார்.

பேராசிரியர் இருதயசாமி அவர்கள் காங்கிரஸ் ஆட்சியில் எவ்வித முன்னேற்றத்தையும் காணவில்லை என்பதைப் புள்ளி விவரங்களுடன் கூறினார்.

அன்று மாலை கடைசியாக ராஜாஜி பேசினார். "யார் எப்படி இருந்தாலும் தென்னாட்டு மக்கள் முக்கியமாகத் தமிழ் மக்கள் சுதந்திரக் கட்சியை ஆதரித்து இந்தக் காங்கிரஸ் ஆட்சியை ஒழிக்க முடிவு கட்டிக்கொண்டால் அது நிச்சயமாகத் தேசம் முழுதும் பரவி வெற்றி பெற்றே தீரும். ஏனெனில் பாரத நாட்டின் நன்மைக்குரிய எல்லாக் காரியங்களுக்கும் தென்னாடே வழிகாட்டி வந்திருக்கிறது. காங்கிரஸ் ஸ்தாபனம் தொடங்கியதே சென்னையில்தான். சத்தியாக்கிரக இயக்கம் நடத்த வேண்டும் என்று தோன்றியதே சென்னையில் காந்திஜி என் வீட்டிலிருந்த போதுதான். இப்படிப் பல காரியங்களுக்கு வழிகாட்டிய தமிழகம், இந்த அதர்ம ஆட்சியை அகற்றவும் வழிகாட்ட வேண்டும்."





சர்க்காரின் தங்கக் கட்டுப்பாட்டைப் பற்றி ராஜாஜி பேசிக் கொண்டிருக்கும்போது ''பிரிட்டிஷ் ஆட்சியின்போது ஒரு வெள்ளைக்கார மாஜிஸ்திரேட், யாரோ ஒரு ஏழைப் பெண்மணியைக் குற்றம் விசாரித்து அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தப் பணமில்லை என்று அழுதாள் அவள். 'அதோ கழுத்தில் ஒரு பொன் ஆபரணம் தொங்குகிறதே, அதைக் கழற்றிக் கொடுத்துவிட்டுப் போயேன்' என்றார் மாஜிஸ்திரேட்.

''வெள்ளைக்கார மாஜிஸ்திரேட்டுக்கு அந்தப் பொன், தாலிப் பொன் என்பதும் அந்தத் தாலியை எவ்வளவு புனிதப் பொருளாக நாம் கருதுகிறோம் என்பதும் தெரியாது. அதனால் அவ்விதம் கூறினார். எனினும் பொதுமக்களிடமிருந்து அப்போது பெரும் கிளர்ச்சி மூண்டது. ஆனால் ஸ்ரீ மொரார்ஜி தேசாய் வெளியூர்க்காரரா என்ன? அவருக்கு நம் பழக்க வழக்கம் தெரியாதா? இருப்பினும் தாலிக்குக்கூட நல்ல பொன் கொடுக்க மறுக்கிறார். பதினாலு காரட் தங்கம்தான் தர முடியும் என்கிறார். அதாவது பித்தளை கலந்த தங்கம். தங்கத்துக்கு ஆடகம் என்று சொல்வதுண்டு. பித்தளையும் ஆடகமும் சேர்த்துப் பித்தலாடகம் செய்யச் சொல்கிறார்கள் இந்தப் பித்தலாட்ட சர்க்கார்'' என்று சொன்ன போது சபையில் பலத்த கரகோஷமும் பெருத்த சிரிப்பும் எழுந்தன.

இப்படிச் சுமார் ஐம்பது நிமிஷங்கள் உணர்ச்சி மயமான பிரசங்கம் செய்தார். கடைசியில் ஸ்ரீ சுப்பையா செட்டியார் நன்றி கூற மகாநாடு இனிது முடிந்தது.

இந்த மகாநாட்டில் ஸ்ரீ எஸ். எஸ் மாரிசாமி, குளித்தலை ராமதாஸ் பாரதி, கோவை வெங்கடராம் அவர்கள் முதலிய பலர் அருமையான உரைகள் நிகழ்த்தினர்.

இம்மகாநாடு இவ்வளவு வெற்றிகரமாக முடிந்ததற்குக் காரணம் டாக்டர் காளமேகம் அவர்களும், திரு சுப்பையா செட்டியார் எம். எல். ஸி. அவர்களும் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியேயாகும். அவர்களை மனதாரப் பாராட்டிக் கொண்டே உள்ளத்தில் ஓர் எழுச்சியுடன் மக்கள் கலைந்தனர்.

1. கோவை திரு வெங்கட்ராம் ஒரு தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறார். 2. டாக்டர் காளமேகம் மகாநாட்டுக்கு வந்திருந்த வாழ்த்துரைகளை வாசிக்கிறார். 3. திரு சுப்பையா செட்டியார் எம். எல். ஸி. பேசுகிறார். 4. ராஜாஜி பேசுகிறார். 5. எஸ். எஸ். மாரிசாமி, சித்ரா நாராயணசாமி அவர்களின் ஆங்கில உரையின் கருத்தைத் தமிழில் தருகிறார். 6. மாநாட்டுத் தலைவர் ஜி. கே. சுந்தரம் பேசுகிறார். 7. குளித்தலை ராமதாஸ் பாரதி. 8. சித்ரா நாராயணசுவாமி. 9. பேராசிரியர் இருசுப்பசாமி. 10. முத்துசாமி கவுண்டர். 11. மகாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் திரு பா. பொன்னம்பலக் கவுண்டர் வரவேற்புரை வாசிக்கிறார். 12. திருநெல்வேலி திரு ராமசாமிக் கோனார் கட்சிக் கொடி ஏற்றிவிட்டுப் பேசுகிறார்.



பல்லவி ஸாவேரி

பாவயாமி ரகுராமம் பவ்ய ஸுகுணாராமம்

அநுபல்லவி

பாவுக விதரண பராபாங்க லீலா லஸிதம்

சரணங்கள் நாட குறிஞ்சி

தினகரான்வய திலகம் திவ்ய காதிஸுத ஸவன
வனரசித ஸுபாஹுமுக வதம் அஹல்யா பாவனம்
அனகமீச சாபபங்கம் ஜனகஸுதா ப்ராணேசம்
கனகுபித ப்ருகுராம கர்வஹரம் இத ஸாகேதம்

தன்யாஸி

விஹதாபிஷேகமத விபினகதம் ஆர்யவாசா
ஸஹித ஸீதா ஸௌமித்ரிம் சாந்ததம சீலம்
குஹநிலய கதம் சித்ரகூடாகத பரத தத்த
மஹித ரத்னமய பாதுகாம் மதனஸுந்தராங்கம்

மோஹனம்

விதத தண்டகாரண்யக கத விராத தலனம்
ஸுசரித கடஜதத்தாநுபமித வைஷ்ணவாஸ்த்ரம்
பதகவர ஜடாயுநுதம் பஞ்சவடி விஹிதாவாஸம்
அதிகோர சூர்பணகா வசனகத கராதிஹரம்

முகாரி

கனகம்ருகரூபதர கலமாரீச ஹரமிஹ
ஸுஜன விமத தசாஸ்ய ஹ்ருத ஜனகஜான்வேஷணம்
அனக பம்பாதீர ஸங்கதாஞ்ஜநேய நபோமணி
தநுஜ ஸக்யகரம் வாலிதனு தலனம் ஈசம்

பூர்விகல்யாணி

வானரோத்தம ஸஹித வாயுஸூனு கரார்பித
பானுசத பாஸ்வர பவ்ய ரத்னாங்குலீயம்
தேன புனரானீதான்யூன சூடாமணி தர்சனம்
ஸ்ரீநிதிம் உததி தீராச்ரித விபீஷண மிளிதம்

மத்யமாவதி


கலிதவர ஸேதுபந்தம் கல நிஸ்ஸீம பிசிதாசன
தலனம் உரதசகண்ட விதாரம் அதி தீரம்
ஜ்வலனபூத ஜனகஸுதா ஸஹிதயாத ஸாகேதம்
விலஸித பட்டாபிஷேகம் விச்வபாலம் பத்மநாபம்
(பாவயாமி ரகுராமம்)



ராமாயண ராகமாலிகை — ஸ்வாதித் திருநாள்



ஸ்ரீ ராமாயண கதை தொடங்கும் 'தினகரான்வய திலகம்' - சூர்யகுலத் தோன்றல் - என்பதிலிருந்து 'விபினகதம் ஆர்யவாச' - தந்தை சொற்படி வனமேகினான் - என்பது வரை.



'குஹநிலய' - குகனைக் கண்டது - முதல் 'ஜடாயுநுதம்' - ஜடாயுவைச் சந்தித்தது வரையில். மேலே அகஸ்தியர் ராமனுக்கு அநுக்கிரகிக்கிறார்.



'கனகம்ருக' - பொன்மானைத் தொடர்ந்தது - முதல் 'சூடாமணி தர்சனம்' - தேவியின் சூடாமணியை அநுமனிடமிருந்து ராமன் பெற்றது வரை.



'கவிதவர சேதுபந்தம்' - சமுத்திரத்தில் இலங்கைக்கு அணை கட்டியது - முதல் ராக மாலிகை நிறைவுறும் ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் வரையில்.

நாடாண்ட





நாதவித்தகர்

டாக்டர் நாராயண மேனன்

சங்கீத சரித்திரத்தில், இசையையும் இசைக் கலைஞர்களையும் ஆதரித்து இசை வளர்ச்சியில் முக்கியமான பங்கு கொண்டவர்களில் எத்தனையோ அரசர்களையும், பிரபுக்களையும், சீமான்களையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். என்றாலும் ராஜ குலத்தவர்களில் தமது மேதையை ஆக்க ரீதியில் வெளிப்படுத்தியவர்கள் உண்டா எனப் பார்க்கும்போது ஸ்வாதித் திருநாள் ஒருவரையே என்றால் சிறப்பாக நினைக்க முடிகிறது. அவர் வெறும் சங்கீத போஷகர் மட்டுமல்ல; கானம் செய்யத் தெரிந்தவர் மட்டுமல்ல; அவரிடம் சங்கீதத்தில் நவநவமான அம்சங்களைச் சிருஷ்டிக்கும் மேதாவிலாஸத்தின் மிக உயர்ந்த தரத்தைக் காண்கிறோம். அவர் தலைசிறந்த நாத உபாஸகர்களிடையே இடம் பெறும் சாகித்திய கர்த்தா ஆவார்.

இது எனக்கு ஒரு மகத்தான அற்புதமாகவே தோன்றுகிறது. சில அம்சங்களில் இது உலகத்தின் ஏழு அதிசயங்களைப் பார்க்கிலும் அதிக அதிசயமாகத் தோன்றுகிறது. இந்த அதிசயம் எவ்வாறு நிகழ்ந்தது? இப்படிப்பட்ட ஒரு மேதையின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் சூழ்நிலை அனுகூலமாக இருந்ததா?

ஸ்வாதித் திருநாள் வாழ்ந்த காலம் 1813லிருந்து 1847ம் ஆண்டு வரையில். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன் பாதி பாரத சரித்திரத்தில் மிகவும் கொந்தளிப்பும், அமைதி யின்மையும் நிறைந்த ஒரு காலமாகும். இதற்குப் பெரும்பாலும் ஆங்கிலேயர்களின் கிழக்கிந்தியக் கம்பெனியே காரணமா யிருந்தது. தேசத்தை ஒருங்கிணைப்பதாகவும் ஸ்திரப்படுத்துவதாகவும் சொல்லிக் கொண்டு ஆங்கிலேயர் கம்பெனி நம் நாட்டைச் சீர்குலைத்து வந்தது. அதன் மானக்கேடான செய்கைகள் தான் எத்தனை? இந்திய தேசப் படத்திலிருந்து இரவோடு இரவாக மறைந்த

ராஜ்யங்கள் பல; எல்லைக் கோடுகள் இஷ்டப்படி மாற்றப்பட்டன; மெல்ல மெல்ல — ஆனால் எதிர்க்க வொண்ணாத படி — சமூக அமைப்பு நொறுங்கியது; பலவீனர்களும், கோழைகளும், கொள்கையற்றவர்களும், அடிவருடிகளும் அற்புதமான வெகுமதிகளை அடைந்தார்கள். தீரம் நிறைந்த மக்கள் போர் புரிந்து உயிர் துறந்தார்கள்.

இவ்வாறு அலை எறியும் கடலின் மையத்திலே திருவனந்தபுரம் ராஜ சபை மட்டும் ஒரு சாந்தப் பொய்கையாக இருந்தது. கழிவுநீர்க் குட்டை அமைதியாகத்தான் இருக்கிறது; பொங்கி வரும் கடலில் எஞ்சி வடிந்த கடற்கழி அமைதியாகத்தான் இருக்கிறது — ஆனால் திருவனந்தபுர ராஜ சபையின் அமைதி இவற்றைப் போன்றதல்ல. புத்தம் புதிய நீரூற்றின் அமைதியே அது. அந்த ஊற்றில் புஷ்பங்கள் மலர்ந்தன; பொன்னிறக் கெண்டைகள் துள்ளி விளையாடின.

வெளி உலகம் முழுவதிலும் தவிப்பு நிறைந்திருந்த போது திருவனந்தபுரத்தின் யௌவன மன்னர் பன்மொழிகளைப் பயில ஓய்வு பெற்றிருந்தார். சம்ஸ்கிருதம், ஆங்கிலம், பாரசீகம், அரபு இம் மொழிகளையும் தென் இந்திய பாஷைகளையும்கற்றார். கலைகளை அப்பியசித்தார். நாத வித்தையைஊக்கத்துடன் பயின்றார். ரயில்கள் இல்லாத காலத்தில் — பிரயாணம் என்பது ஒரு சாகஸச் செயலாக இருந்த காலத்தில்—நாட்டின் பற்பல கோடிகளிலிருந்து இசைக் கலைஞர்களும், அறிஞர்களும் திருவனந்தபுரத்தை நாடி வந்தனர். வங்காளத்திலிருந்தும், வாரணசியிலிருந்தும், மஹாராஷ்டிரத்திலிருந்தும் பாஞ்சாலத்திலிருந்தும் அவர்கள் வந்திருந்தனர். தஞ்சாவூரின் புகழ் பெற்ற நட்டுவனார் நால்வரும் திருவிதாங்கூர்த் தலைநகரத்துக்கு வந்து சேர்ந்தனர். தென்னிந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்து பாகவதர்களும், ஓவியர்களும், சிற்பிகளும் வந்தனர். அவர்களை ஸ்வாதித் திருநாள் வரவேற்றார்—முடி மன்னருக்குரிய படாடோபத்துடனும், டாம்பீகத்துடனும் அல்ல; கலையார்வம் மிக்க மாணாக்கனை, இன்பத் துடிப்புடனும், எளிமையுடனும் வரவேற்றார். எங்கு கௌரவம் அளிக்கவேண்டுமோ அங்குகௌரவத்தை வழங்கத் தயாராக வரவேற்றார்.

ஸ்வாதித் திருநாளின் காலத்தில் கலைகள் செழித்தன; அவர் இசைக்குத் தம்மையே அர்ப்பணித்துக் கொள்ளும் பேரவாக் கொண்டிருந்தார்; எனினும் இதனால் ராஜாங்க அலுவல்கள் பாதிக்கப்பட வில்லை. தமது முதல் அன்பை அவர் ராஜ்யத்துக்குத்தான் செலுத்தினார் என்று சொல்ல முடியாவிடினும் தமது முதல் கடமையை அவர் ராஜ்யத்துக்கே செலுத்தினார் என்பது நிச்சயம்.

அவருடைய காலத்தில் ஏனைய ராஜ்யங்கள் காணாத பல சீர்திருத்தங்களைத் திருவிதாங்கூர் கண்டது. உதாரணமாக வான ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அவர் தொடங்கினார். உயர்ந்த ஜாதி கால்நடைகளை வெளியிலிருந்து வரவழைத்துச் சம்ஸ்தானத்தின் கால்நடைச் செல்வத்தை அபிவிருத்தி செய்ய முயன்றார். பொது மக்களுக்கு நூல் நிலையமும், அரசினரின் ஆங்கிலப் பள்ளி ஒன்றும் அவர் ஏற்படுத்தினார். நீதி முறையைச் செப்பம் செய்தார்; நிலங்களை ஸர்வே செய்து, உரிமைகளை வரையறை செய்தார்.

உழைப்பதில் அவர் அதிசயமான ஆற்றல் படைத்திருக்க வேண்டும். இல்லா விடில் தமது அற்பமான ஆயுள் காலத்துக்குள் அவர் எப்படி இவ்வளவு சாதனைகளைப் புரிந்திருக்க முடியும்? பிறந்ததிலிருந்து அவரது ஜீவிய தசையின் ஒவ்வொரு கணமும் பொருட்செறிவு நிறைந்திருந்தது.

பதினாறுவது பிராயத்தில் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அந்த நாளில் அரசர் மீதுதான் ராஜ்யபாரம் சுமந்திருந்தது. அப்போது திருவிதாங்கூரில் ஆலோசனை கூறவும், வழிகாட்டவும் சட்ட சபை, மந்திரி சபை இவை இருக்க வில்லை. அரசியல் நிபுணர்கள் இல்லை. அதற்குப் பதிலாக ராஜ சபையில் ஏராளமான பண்டிதர்கள் இருந்தார்கள். கல்விமான்கள், தத்துவ சாஸ்திரிகள், கவிகள், சங்கீத வித்துவான்கள், நாட்டிய ஆசிரியர்கள், வானசாஸ்திரிகள் என்றிப்படிப் பலர் இருந்தனர். போஜனும் ஹர்ஷனும் எத்தகைய ராஜசபையைப் பெற்றிருந்தார்களோ அத்தகைய ஒன்றாக ஸ்வாதித் திருநாளின் அவை விளங்கிற்று. தம்மை நெருங்கிப் பொங்கிய அந்த வித்தை முழுவதையும் இளவரசர் மிச்சம் மீதியின்றித் தமக்குப் பயனாக்கிக் கொண்டார்.

அரசராக இருந்து அவர் ஆற்றிய சாதனைகளை யெல்லாம் சரித்திரம் பொதிந்து வைத்துக் கொண்டிருக்கிறது. எனினும் இன்று ஸ்வாதித் திருநாள் நம்மை முக்கியமாகக் கவருவது சாகித்திய கர்த்தா என்ற முறையிலேயேஆகும். ஓர் அம்சத்தில் தனக்கு இணை இல்லாதவர் ஸ்வாதித்திருநாள். ஹிந்துஸ்தானி சங்கீதம், கர்நாடக சங்கீதம் இரண்டிலும் அவர் போல் சரளமான பரிசயம் கொண்டுள்ள சாகித்தியகர்த்தா வேறு யாருமே கிடையாது. மற்றப் பத்ததி

ராட்சதப் பல்லி



இந்தோனேஷியாவை அடுத்துள்ள 'கொமோடோ' என்ற தீவில் இந் நூற்றாண்டிலும் வாழ்வதும் டைனோஸாரின் சந்ததியுமான ராட்சதப் பல்லிதான் இது. அத்தீவு வாசிகள் நிலத்தில் வாழும் முதலை என்று இதை அழைக்கின்றனர். பத்தடி நீளமும் இருநூறு பவுண்டு எடையுமுடையது. இந்தப் பல்லியின் தோற்றம் பயங்கரமாகத்தான் இருக்கும். மான், காட்டுப் பன்றி இவைகளைக் கபளீகரம் செய்யும். பாம்பைப் போலவே இதற்கும் காது கேட்காது. ஆகாரத்துக்காகத் தன் இனத்தவனோடு சண்டை யிடும்போது ஒருவிதப் பெருமூச்சுப் போன்ற ஒலி எழுப்புவதைத் தவிர இது வேறு எவ்வித ஒலியையும் எழுப்புவதில்லை. கூரிய பார்வையும் வாசனையை நுகரும் சக்தியும் இதற்கு உண்டாம்.

களிலிருந்து சில அம்சங்களைக் கிரகித்துக் கொண்டு அவற்றைத் தங்கள் பாணியில் இணைத்த பாடலாசிரியர் பலருண்டு. உதாரணமாகக் கர்நாடக சங்கீத வாகேயகாரர்களில் வட இந்தியாவுக்குச் சென்று ஹிந்துஸ்தானி ராகங்களை அங்கிருந்து கொண்டு வந்து தங்கள் பாடல்களை அந்த ராகங்களில் அமைத்தவர்களைப் பற்றி நாம் அறிவோம். ஆனால் ஸ்வாதித் திருநாளைத் தவிர, தக்ஷிண சங்கீதம், உத்தர சங்கீதம் இரு பத்ததிகளிலுமே தனித் தனியாகப் பாடல்கள் இயற்றிய வேறெந்த இந்திய சாகித்திய கர்த்தரையும் நான் அறிந்ததில்லை. கர்நாடக சங்கீதத்தில் கீர்த்தனம், பதவர்ணம், தானவர்ணம், பதம், ஜாவளி, தில்லானா, ராகமாலிகை போன்ற எல்லாப் பிரிவுகளிலும், அவர் தமது கற்பனா சக்தியைக் காட்டியிருப்பதோடு, உபாக்யானம், பிரபந்தம், ஸ்தோத்திரம் இவையும் செய்துள்ளார். ஹிந்துஸ்தானி இசையிலும் அவர் துருவபத், க்யால், தும்ரி, டப்பா, பஜன் ஆகிய பல பத்ததிகளில் பாடல்கள் அமைத்திருக்கிறார். இன்று ஆகாய விமானமும், ரேடியோவும், இசைத் தட்டுக்களும் தென் இந்திய இசையை வட இந்தியாவுக்கும், வட இந்திய இசையைத் தென்னிந்தியாவுக்கும் சுலபமாகப் பரிமாறிய போதிலும் இரு சங்கீத சம்பிரதாயங்களிலும் சமானமான தேர்ச்சி பெற்ற பாடகர் யாரும் இல்லை; சாகித்திய கர்த்தர் நிச்சயமாக இல்லை. இவ்வாறிருக்க, நூற்றியிருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஓர் இளம் அரசர், தென் இந்தியாவின் ஒரு கோடியில் தமது ராஜ்யத்து அரசவை உண்டு தாம் உண்டு என்று வாழும் போது, தமது இசை மரபுக்கு வெகு தூரம் மாறுபட்ட ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் இத்தகைய தேர்ச்சி பெற்றிருந்தது நம்பவொண்ணாத அதிசயமாகும்.

ஸ்வாதித் திருநாளுடைய மேதா விலாஸத்தை எதனால் அளவிடுவது? இதற்கு விடை சொல்வது சற்றுக் கடினமாகும். இன்று அவருடைய சாகித்தியங்களில் சுமார் முந்நூற்றினை ராக தாளத்துடன் அறிந்திருக்கிறோம். இன்னும் எத்தனையோ கிருதிகள் இருக்க வேண்டும். அவற்றுக்கு ஸ்வாதித் திருநாள் கொடுத்திருந்த அதே உருவத்தை ஐயத்துக்கிடமின்றி அழுத்தம் திருத்தமாகக் கண்டுபிடித்து அளிப்பதற்கு இன்னும் ஆராய்ச்சி தேவைப்படும். எனினும் நாம் அவரது பாடல்களில் எவ்வளவை அறிந்திருக்கிறோமோ, அதுவே அவர் நமது சங்கீத சரித்திரத்தில் புதுமைகள் கண்ட மகத்தான சாகித்திய கர்த்தர் என்று உறுதிப்படுத்தப் போதும். 'ஸ்வாதித் திருநாளுடைய சங்கீத எல்லை தியாகராஜருடையதைப் போல் அவ்வளவு பரந்து விரிந்ததா? ஸ்வாதித் திருநாளிடம் தியாகராஜரின் அளப்பற்ற ஜீவ சக்தியைக் காண முடியுமா? அவரிடம் தீக்ஷிதரின் ஆழமும், புத்திபூர்வமான கம்பீரமும் உண்டா? அவருடைய பாடல்களில் சியாமா சாஸ்திரிகளின் நளின கவித்துவத்தையும் லய சூக்ஷ்மங்களையும் காணக் கூடுமா?' என்றெல்லாம் என்னைச் சிலர் அடிக்கடி கேட்பதுண்டு. இதற்கு என்னுடைய பதில் இதுதான்: ஒப்புவமை இல்லாதவர்களை நாம் ஒப்பு நோக்கிப் பார்க்கவே கூடாது. இந்த ஆண்டின் தலைசிறந்த பத்து டென்னிஸ் விளையாட்டுக்காரர்கள் என்றோ குஸ்திப் பயில்வான்கள் என்றோ சிலரைத் தரப்படுத்துவதைப் போல சாகித்திய கர்த்தாக்களை நாம் வரிசைப்படுத்த முடியுமா, என்ன? முடியாது. அப்படிச் செய்ய முயலவும் கூடாது. ஸ்வாதித் திருநாளைப் பற்றி மேலும் மேலும் நாம் அறியும் போது, அவர் கர்நாடக சங்கீத திரிமூர்த்திகளுடன் வைத்து மதிக்கப்பட வேண்டியவர் என்ற எண்ணம் மேன் மேலும் உறுதியாகிறது. அவரது மேதையை நிர்ணயிக்கும் அளவுகோல் இதுவே.

அறிவுக் கனலே, அருட் புனலே! 13

ரா. கணபதி

குமார்புகூரின் நஷ்டம் கல்கத்தாவில் ஜமாபுகூரின் லாபமாயிற்று. ராமகுமார் எதிர்பார்த்தது போல் அவர் நடத்தி வந்த சம்ஸ்கிருத பாடசாலையில் கதாதரர் கல்வி பயிலா விட்டாலும் அவரது பூஜைக் காரியங்களில் பேருதவி புரிந்து வந்தார். தமையன் அர்ச்சகராக இருந்த இல்லங்களுக்குத் தாமும் உடன் சென்று சுற்றுப்படி வேலைகள் செய்து வந்தார். இந்தப் பிரம்மசாரியின் மாதுரியமான தோற்றமும், பேச்சும், செய்கைகளும் அந்த வீட்டினரின் உள்ளங்களை ஆகர்ஷித்தன. 'அவருடைய பணிவும், பதவிசும், பரிசுத்தமும் பாராட்டைத் தேடித் தந்தன. பக்தியே உருவாக விளங்கும் இந்த வாலிபரிடம், செல்வச் சீமான்களின் வீட்டில் பெரும் செல்வமாகிய கற்பு நெறியைக் காத்து வரும் கோஷாக்களும் தயக்கமின்றிப் பழகினர். கமார்புகூரில் ஒலித்த மழலைக் குரல் இப்போது ஜமாபுகூரில் இல்லங்களில் முறுகி ஒலித்தது.

மக்களுடன் பழகுவதிலும், ஆண்டவனைத் தியானிப்பதிலுமே கதாதரரின் பொழுது சென்றதால், அண்ணா நடத்தி வந்த 'டோல்' அவருக்கு ஏதும் பயன் அளிக்கவில்லை.

கற்றதனால் ஆயபயன் என் கொல்
வால் அறிவன்
நற்றாள் தொழா அர் எனின் ?

'கடவுளின் கழலிணைகளைக் காட்டாத கல்வியால் என்ன பயன்?'' என்று வினவுகிறார் வள்ளுவ நாயனார். இறைவனின் இணையடிகளை நினைக்கப் பழகி விட்ட கதாதரருக்கு இனி படிப்பு எதற்கு?

படிப்பினாலும், அது அளிக்கும் இக உலக முன்னேற்றத்தாலும் பயனில்லை என்று பூரணமாக நம்பியே கதாதரர் கல்வி கற்க முற்படாதிருந்தார். ஆனால் ராமகுமார் தம்பியின் துறவற மனப்பான்மையை அறிந்திருக்கவில்லை. அப்பாவும் அம்மாவும் செல்லம் கொடுத்து வளர்த்ததால் கதாதரர் தம் இஷ்டப்படி செல்ல விரும்புகிறார் என்றும் இதனாலேயே கற்க மறுக்கிறார் என்றும் நினைத்தார் அவர். சில நாள் பொறுத்திருந்து பார்த்த ராமகுமார் கடைசியில் ஒரு நாள் தம்பியைக் கண்டித்து விட்டார்.

''எனக்கோ உடம்பு தளர்ந்து






வருகிறது. நான் தலையைச் சாய்த்தபின் என்ன செய்யப் போவதாக உத்தேசம்? நாலு எழுத்துப் படிக்காமல் நடுத் தெருவில் நிற்கப்போகிறாயா?'' என்று சற்றுப் பதற்றத்துடன் கேட்டு விட்டார்.

கதாதரனின் கமல வதனம் அதைக் கேட்டுக் கூம்பவில்லை. மடலவிழ்ந்து முறுவல் புரிந்தது.

''ஏன் அண்ணா, நடுத் தெருவில் நின்றால்தான் என்ன? அப்படியானால், என்னால் வீடு என்றும் வாசல் என்றும் பொருந்தி யிருக்க முடியும் என்று எண்ணுகிறீர்களா, என்ன? பந்தப் படுத்தும் சொந்தங்களுக்காகவும், சொத்துக்களுக்காகவும் என்னால் கல்வி கற்க முடியும் என்று நினைக்கிறீர்கள்? வேண்டாம், அண்ணா, எனக்கு இந்தக் கல்வி! அரிசிக்கும், வாழைக் காய்க்கும் விலை கூற வேண்டிய இந்த வித்தை எனக்கு வேண்டவே வேண்டாம்'' என்றார் கதாதரர்.



மலர்ச்சியுடன் பேசத் தொடங்கியவர் மலங்கிப் போய் முடித்தார்.

ராமகுமாருக்கு ஒன்றுமே புரியவில்லை. 'கதாயி என்ன சொல்கிறான்? கல்வி வேண்டாம், சம்பாத்தியம் வேண்டாம், குடும்பம் வேண்டாம் என்கிறானே—இதெல்லாம் என்ன பேச்சு? நான் கண்டித்ததால் இளம் உள்ளம் ஒடிந்து இப்படியெல்லாம் சொல்கிறானோ?'

அப்போதுகூட அவருக்குத் தம்பியின் இதயம் புரியவில்லை. தாம் சுடுசொல் பேசி விட்டதாகவும் அதனால் கதாதரர் அப்படிப் பேசியதாகவுமே எண்ணினார். கழிவிரக்கம் கொண்டார்.

''கதாயி, நீ அம்மாவுக்கும் ஊரார் எல்லாருக்கும் அருமையாக இருந்தாய்! உன் மனம் போனபடி நம் கிராமத்தில் மகிழ்ச்சியாக இருந்தாய். உன்னை அங்கிருந்து பிரித்து, பறித்து வந்து விட்டேன். எப்படியும் எனக்குப் பிற்காலத்தில் நீ ஏதாவது ஒரு பிழைப்பில் ஈடுபட வேண்டும், அதற்குப் படிப்பு அவசியம் என்பதால் தான் உன்னை இங்கு அழைத்து வந்தேன். என்னைத் தவறாக நினைக்காதே கதாதரா! உனக்குப் படிக்கப் பிடிக்கவில்லையானால் வேண்டாம். ஆனால் 'அண்ணா ஏதோ சுயநலமாக நம்மைக் கடிந்து கொண்டு விட்டார்' என்று மட்டும் நினைத்து விடாதே'' என்று உருக்கமாகக் கேட்டுக் கொண்டார் ராமகுமார்.

அதிலிருந்து தம்பியிடம் முன்னிலும் பாசத்துடன் நடந்து கொண்டார்.

மேலும் இரண்டு ஆண்டுகள் ஓடின. 'டோல்' நொடித்து வந்தது. ராமகுமாரும் நொடித்து வந்தார். பள்ளியை மூடி விட்டு வேறு ஏதாவது தொழில் தொடங்கலாமா என்றுகூட அவர் யோசித்தார். ஆனால் வேறு என்ன தொழில் அவருக்குத் தெரியும்? அதோடு தேக நலமும் குன்றிக்கொண்டு வருகிறதே!

கதாதரருக்குக் குடும்பத்தின் கஷ்டம் நன்றாகத் தெரிந்தது. அதற்காகத் தம்மைத் தியாகம் செய்து கொண்டு, எல்லோரையும் போல ஓர் உத்தியோகம் தேடிக் கொள்ள வேண்டியதுதானா? அது முடிகிற காரியமா? கதாதரரின் உள்ளத்தில் மலை மலையாகப் பேரலைகள் புரண்டன.

'என் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க' என்று மணிவாசகர்பாடிய மன நிலையில் இறைவனை அன்றி வேறு யாருக்கும் பணி புரிய முடியாதவராக இருந்தார் கதாதரர். 'வேள்வியில் வானவருக்கு ஆஹுதியாக வேண்டிய அவியை நரி உண்பது போல, மாலவனுக்கு ஆட்பட வேண்டிய என்னை மானுடர் நெருங்கலாமோ?' என்று நாச்சியார் கேட்டாளல்லவா? ஏறக்குறைய அதுபோன்ற மன நிலையில் கதாதரரும் தவித்துக் கொண்டிருந்தார்.

'நிலை காட்டி விலக்கிடும் தெய்வமாகிய' அம்பிகையின் அழைப்பு அப்போது வந்தது!

கல்கத்தாவில் ஜான் பஜாரில் வசித்து வந்த ராஸமணி பொருட் செல்வத்தையும் அருட் செல்வத்தையும் ஒருங்கே பெற்றவள். மீனவர் வகுப்பைச் சேர்ந்த அவள் தனது செல்வச் செழிப்பின் காரணமாக ராணி என்றே வழங்கப் பட்டாள். நாற்பத்து நாலாவது வயதில் கைம்மையுற்ற அவள் தனது மூன்று பெண்களுடனும் மாப்பிள்ளைகளுடனும் வாழும் போதே உள்ளத்தால் சந்நியாசினியாக இருந்து வந்தாள். அவளுக்கு நாலு பெண்கள். மூன்றாவது பெண் காலமான பின் அவளுடைய கணவர் மதுராநாதருக்கே நாலாவது பெண்ணையும் மணம் செய்வித்தாள்.

தனது ஏராளமான சொத்துக்களைத் திறம்பட நிர்வகித்து வந்த ராஸமணி நிரந்தரச் சொத்தாகிய தெய்வ பக்தியை அவற்றுக்கு மேலாகக் கருதி வந்தாள். 'காளி மாதாவின் கமல பாதத்துக்கு ஏங்கும் ஸ்ரீ ராணி ராஸமணி' என்பது தான் அவளது பண்ணையின் அதிகார முத்திரையாகும்.

ராஸமணியின் வீரம், கருணை, பக்தி, தேசிய உணர்வு முதலிய அருங்குணங்களைக் காட்டும் சம்பவங்கள் பல.

அவளது மாளிகைக்கருகே ஆங்கிலேயச் சிப்பாய்களின் பாளையம் ஒன்று உண்டு. அந்தக் காலத்தில் ஆங்கிலேயச் சிப்பாய்கள் செய்து வந்த அட்டூழியங்களுக்குக் கேள்வி முறையே இல்லாதிருந்தது. அவர்கள் முறைகேடாக என்ன செய்தாலும் அதைப் பொறுத்துக் கொண்டே தீர வேண்டும் என்ற பேதையராக இருந்தனர் நம் நாட்டு மக்கள்.

ஒரு நாள் ஜான் பஜார் பாளையத்தைச் சேர்ந்த சிப்பாய்கள் வஞ்சனையின்றிச் சாராயப் பீப்பாய்களைக் காலி செய்து விட்டு ராணி ராஸமணியின் மாளிகையை நோக்கி விரைந்தனர். வாயில்காப்போரை அடித்து வீழ்த்தி விட்டு உள்ளேயும் பிரவேசிக்கலாயினர். அப்போது ராணியின் மாப்பிள்ளைகள் யாருமே வீட்டில் இல்லை. இருந்திருந்தாலும் அந்த வெறியர்களுக்குப் பொன்னும் பொருளும் கொடுத்துத் 'தாஜா' செய்யத்தான் அவர்கள் நினைத்திருப்பார்கள்.

ஆனால் இந்த அக்கிரமங்களுக்கு இடமளிக்கக் கூடாது என்றே ராணி வீறு கொண்டாள். பாரதப் பெண்களுக்கு இந்தப் பரங்கிப் போர் வீரர்கள் இழைத்து வந்த அநீதி அவளது ரத்தத்தைக் கொதிக்க வைத்தது. உடனே அவள் சற்றும் தயங்காமல் தானே போர்க் கோலம் பூண்டு ஆயுதங்களுடன் மாளிகை வாயிலுக்கு வந்தாள்.

யாருமே எதிர்த்தறிந்திராத வெறி பிடித்த வெள்ளையருக்கு இது ஒரு புது அநுபவமாக இருந்தது. பெட்டிப் பாம்பாக அவர்கள் திரும்பிவிட்டனர்.

இன்னொரு சமயம், கங்கையில் மீன் பிடிப்பதற்கு ஏழைக் கரையர்கள் மீது வரி விதித்தனர் பிரிட்டிஷ் ஆட்சியினர். இந்த அநியாயத்தை ராஸமணியால் சகிக்க முடிய வில்லை. பரமேசுவரன் சிரஸால் வகித்துப் பாரத மக்களுக்கென்றே வழங்கும் புனித பாகீரதியில் ஆங்கிலேயர்களுக்கு என்ன உரிமை? அதுவும் வறிய வலைஞர்களுக்கு வரி விதிப்பதாவது?

அதிகார பலத்தால் ஆட்சி நடத்தும் அரசியலாரைத் தர்மோபதேசத்தால் வெல்ல முடியாது. எதிர்த்துக் கிளர்ச்சி செய்தும் சமாளிக்க முடியாது என்று கண்டாள் ராணி. புத்தி சாதுரியம் மிக்க அவள் ஒரு யுக்தி செய்தாள். கங்கையின் குறிப்பிட்ட ஒரு பகுதியிலுள்ள மீன் அவ்வளவையும் தன் மேல்பார்வையில் பிடித்து வரிசெலுத்துவதாகக் கூறி, அப்பகுதியை அவள் குத்தகை எடுத்துக் கொண்டாள். அரசாங்கத்திடமிருந்து அந்த உரிமையைப் பெற்றதும் முதல் காரியமாக அந்தப் பகுதியின் இரண்டு கோடிகளிலும் நதியின் குறுக்காக வலைச் சங்கிலிகளைப் பொருத்தினாள். இதன் பின் கங்கையில் எப்படிச் சர்க்கார் கப்பல்கள் செலுத்த முடியும்? எனவே அவளது செய்கையை அரசாங்கம் ஆட்சேபித்தது.

அந்த ஆட்சேபணையை ஆட்சேபித்து ராணி தனது குறிப்பை அனுப்பினாள்.

''மேன்மை தங்கிய அரசாங்கத்துக்கு ஏராளமான தொகையைச் செலுத்தியே நான் இந்தப் பகுதியில் மீன் பிடிக்கும் உரிமையைப் பெற்றேன். ஆனால் இந்தப் பகுதியில் சர்க்காரின் கப்பல்கள் அடிக்கடி சென்று வருவதால், நியாயமாக இங்கே இருக்க வேண்டிய மீன்களெல்லாம் வேறு பகுதிகளுக்குச் சென்று விடுகின்றன. அதனால்தான் நான் சங்கிலிகள் போட்டு அவற்றை இடம் பெயராமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன். என் செய்கை சட்டப்படி செல்லும் என்பது மேன்மை தங்கிய அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்கும். எனவே, நான் சங்கிலிகளை அப்புறப்படுத்த வேண்டியதில்லை. என்றாலும், மேன்மை தங்கிய சர்க்காருக்கு இடைஞ்சல் ஏற்படுத்த வேண்டாமே என்பதால் ஒரு நிபந்தனையின் மீது சங்கிலிகளை அகற்ற முன் வருகிறேன். அதாவது: மீன் பிடிப்பதற்காகக் கரையர்கள் மீது விதித்திருக்கும் வரியை மேன்மை தங்கிய சர்க்கார் உடனே ரத்து செய்ய வேண்டும்.''

ராஸமணியின் யுக்தி பலித்தது. வரி ரத்தாயிற்று. சங்கிலிகளும் எடுக்கப்பட்டன. தங்களுக்காகப் பெரும் பொருட் செலவு செய்து குத்தகை எடுத்து, அந்த உரிமையைக் கைவிட்ட ராணியை மீனவர்கள் உளமார வணங்கினர்.

ஆங்கிலேயர் என்றால் அழுத குழந்தையும் வாய் மூடிய நாளில் ராணி ராஸமணி காட்டிய தீரம் அதிசயமானதாகும்.

அவளுடைய ஈகையை உலகுக்குத் தெரிவிக்கும் சந்தைகளும், அநாதை இல்லங்களும், நீர்த் துறைகளும், கால்வாய்களும் பல உண்டு. வங்கத்தில் உள்ள பல திருப்பதிகளுக்கு அவள் யாத்திரை சென்று நிறைய தான தர்மங்கள் செய்திருந்தாள்.

ராணி ராஸமணிக்கு நீண்ட நாட்களாக ஒரு பெரிய ஆசை இருந்தது. காசி க்ஷேத்திரத்துக்குச் சென்று அன்னபூரணியைத் தொழுது வரவேண்டும் என்பதே அது. கணவர் ராஜசந்திர தாஸர் உயிர் வாழ்ந்த வரையில் ஏனோ அந்த ஆசை நிறைவேறாமலே இருந்தது. அவர் மறைந்தபின் சொத்துக்களைப் பரிபாலனம் செய்யும் பொறுப்பு அவள்மீது சுமந்தது. ஒருவாறு இப்போது மாப்பிள்ளைகளெல்லாம் விவரம் தெரிந்தவராகி விட்டனர். முக்கியமாகக் கடைசி மாப்பிள்ளை மதுராநாதர் அவளுடைய பூரண திருப்தியையும் பெற்றுச் சொத்து நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். எனவே, அன்னபூரணி ஆசை அவளிடம் மீண்டும் மேலோங்கியது.

காசிப் பயணத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் ஆகி விட்டன. விடிந்தால் புறப்பட வேண்டியதுதான் என்ற ஆனந்தத் துடிப்புடன் நித்திரை கொண்டாள் ராஸமணி.

அவள் காசி செல்ல அவசியமில்லாமல் தேவியே அவளைத் தேடிக் கொண்டு கனவில் வந்தாள்.

''நீ காசி வரவேண்டிய அவசியம் இல்லை. கங்கைக் கரையில் நீ எங்கே ஆலயம் எடுத்து, அன்னம் நிவேதித்தாலும் அந்த இடமே எனக்குக் காசி; அந்தத் தலமே உனக்கும் காசி'' என்று

கூறினள் 'பாலினும் சொல்லினிய' பகவதி.

உடலும் உள்ளமும் சிலிர்க்க விழிப்புற்றாள் ராஸமணி.

யுக யுகாந்தரமாகப் புனிதம் பெருக்கும் பழைய காசியை மறந்தாள். புதிதாக ஒரு காசியை நிர்மாணம் செய்ய, கங்கைக் கரையில் தகுந்ததோர் இடம் தேடலானாள். தேடிக் கண்டு பிடித்தும் விட்டாள்.

சிவனடியார்களுக்குச் சிதம்பரம்போலவும், ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஸ்ரீரங்கம் போலவும், முஸ்லிம்களுக்கு மெக்கா போலவும், கிறிஸ்தவர்களுக்கு ஜெருஸலம் போலவும் ஸ்ரீ ராமகிருஷ்ண பக்தர்களுக்கு ராஜதானியாக விளங்கப் போகும் தக்ஷிணேசுவரமே அது.

கல்கத்தாவுக்கு வடக்கே ஐந்து மைலில் கங்கையின் கீழ்க் கரையில், 1848ல் ஆலய நிர்மாணப்பணி ஆரம்பித்தது. பவதாரிணி என்ற பெயர் தரித்த ஜகன்மாதாவாகிய காளிக்கு முக்யமான சந்நிதியும், துவாதச லிங்கங்களுக்குப் பன்னிரு சுற்றுக் கோயில்களும், ராதாகாந்தனாக விளங்கும் கண்ணனுக்கு ஒரு மந்திரமுமாக ஆலய வேலை நடைபெற்று வந்தது. ஏழாண்டுகளாகியும் திருப்பணி பூர்த்தியாகவில்லை. அன்னை கனவில் தோன்றி இவ்வளவு காலம் சென்றும் அவளைப் பிரதிஷ்டிக்காதது ராஸமணியின் நெஞ்சை உறுத்தியது.

பவதாரிணியின் திவ்விய மூர்த்தி அடங்கிய பேடகத்தை ராஸமணி திறந்து பார்த்தாள்.

ஆ! அவளுக்கு உடம்பெல்லாம் குப்பென்று வியர்த்து விட்டது!

விக்கிரகத்தை மீண்டும் நோக்கினாள்.

தேவியின் திருமுகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பியிருந்தது!

பௌதிக இறுக்கம் அந்த சூக்ஷ்ம மூர்த்திக்குமா உண்டு? அல்லது சந்திரன் பனியை வெளியே விடுவதாகக் கருதி அவனைப் பனி மதி என்றும், ஹிமகரன் என்றும் கவிகள் கூறுகிறார்களே, அது போல் தேவியின் சந்திர வதனத்திலிருந்தும் பனி முத்திடுகிறதா?

ராஸமணி உடனே சாஸ்திரமறிந்தோரை வரவழைத்தாள்.

''எவ்வளவு விரைவில் சுப தினம் இருக்கிறதோ அவ்வளவு விரைவில் பிரதிஷ்டை செய்துவிட வேண்டியதுதான். இனி ஒத்திப் போடும்ஒவ்வொரு கணமும் என் அன்னைக்குச் செய்யும் அபசாரமாகும்'' என்றாள் ராஸமணி.

அவர்கள் பஞ்சாங்கத்தைப் புரட்டிப் பார்த்து, ''ஜேஷ்டா மாதத்துப் பூர்ணிமை திதி சுப முகூர்த்தமாக உள்ளது. அன்றே பவதாரிணியைப் பிரதிஷ்டை செய்து விடலாம்'' என்றனர்.

விநாயகனுக்குச் சதுர்த்தி, முருகனுக்கு ஷஷ்டி, திருமாலுக்கு ஏகாதசி, சிவபெருமானுக்குப் பிரதோஷம் ஆகியன விசேஷமான திதி. சௌந்தரியமும், தயையும், ஞானமும் பூரணமாக நிரம்பிய அன்ன பூரணிக்கு உகந்த திதி பூர்ணிமை. ஜ்யேஷ்டா பூர்ணிமையின் தனிச் சிறப்பு அன்று பூரி ஜகந்நாதனுக்குத் திருமஞ்சன விழா நடைபெறுவதாகும். அன்னை நாரண சோதரி; அதோடு, தேவியைப் போலத் திருமாலையும் ஈசனின் நாயகியாகக் கருதுவதுண்டு. எனவே, அந்த நன்னாளே ஆலய கும்பாபிஷேகத்துக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆங்கிலக் காலண்டரின்படி அன்று 1855ம் ஆண்டு மே முப்பத்தொன்றும் தேதியாகும்.

புதியதொரு தடங்கல் இப்போது முளைத்தது. கைவர்த்த குலப் பெண்மணியாகிய ராஸமணியின் ஆலயத்தில் அர்ச்சகராக இருந்து அவளது நிவேதனத்தை அம்பிகைக்கு அளிக்க யாரும் முன்வரவில்லை.

ராணி ராஸமணியின் நெஞ்சு நொறுங்கியது.

''தேவி! மக்களுக்குத்தான் நான் கீழ்க் குலத்தவளானேன்! உனக்குமா நான் இழியவளாகி விட்டேன்? புழு பூச்சிகளும்கூட உனக்குக் குழந்தை இல்லையா? என் அன்னையே! அன்னபூரணியாகிய நீ தானாகவே என் கனவில் தோன்றியல்லவா தாழ்ந்தவளாகிய என்னை உனக்கு அன்னம் படைக்கச் சொன்னாய்? இப்போது ஏன் என் ஆசை – அதாவது உன் ஆக்ஞையே – நிறைவேறாதவாறு சோதிக்கிறாய்?'' என்று புலம்பிப் புழுங்கினாள் அவள்.

தனிப்பட ராஸமணி தேவிக்கு அன்னம் நிவேதிக்க யாரும் ஆட்சேபிக்கவில்லை. எனினும் அவள் விதிமுறைப்படி அர்ச்சகரைக் கொண்டு, சாஸ்திர ரீதியில் தேவிக்கு ஆராதனை நடத்த வேண்டும் எனத் துடித்தாள். இதுவே நம் நாட்டின் பண்பு.

கோயிலெல்லாம் எழுப்பியாயிற்று. தேவியின் சிலா பிம்பமோ ராஸமணிக்குத் தனது புழுக்கத்தைக் காட்டி 'என்னை சீக்கிரம் எழுந்தருளச் செய்' என்று தூண்டிக் கொண்டேயிருக்கிறது. இந்நிலையில் இப்படி ஒரு சிக்கல் தோன்றி விட்டது.

பண்டிதர்களுக்கெல்லாம் யோசனை தெரிவிக்குமாறு கோரி விண்ணப்பம் விடுத்தாள் ராணி. அவளுக்கு வந்த

பதில்களெல்லாம்.... ஏமாற்றம், ஏமாற்றம், ஏமாற்றம்தான்.

வேதனையோடு ஒவ்வொரு கடிதமாகப் படித்து வந்த ராணியின் உள்ளம் அந்த ஒரு கடிதத்தைக் கண்டதும் ஒரு துள்ளுத் துள்ளியது.

''ராணி இந்த ஆலயத்தை உயர் குலத்தைச் சேர்ந்த ஒருவர் பெயரில் நிர்வகிப்பாரானால் இங்கு வழிபாடு நடத்த சாஸ்திர விதிப்படி எவ்வித ஆட்சேபமும் இராது'' என்று அதில் கண்டிருந்தது.

'ஆஹா, அப்படியானால் தன் குருவின் பெயரில் கோயிலை அர்ப்பணிக்கலாமே' என்று தீர்மானித்தாள் ராணி.

இந்த யோசனையைத் தெரிவித்திருப்பது யார் என்று பார்த்தாள் அவள். ஜமாபுகூரில் டோல் நடத்தி வந்த ராமகுமார் என்று கண்டாள்.

உடனே அவரையே புதுக்கோயிலில் அர்ச்சகராவதற்குத் தருவித்தாள் அவள்.

அவருடன் அவரது இளைய சகோதரரும் தக்ஷிணேசுவரத்துக்கு வந்தார்.

நதி சமுத்திரத்தை வந்தடைந்து விட்டது !

நதி சமுத்திரத்தை நெருங்கியதும், தான் அடித்து வந்த மண்ணினால் தனக்கும் கடலுக்கும் இடையே ஒரு மேட்டை ஏற்படுத்திக் கொள்வதுண்டு. கதாதரனின் பூர்வீக உணர்ச்சிகளும் இப்படித்தான் அவருக்கும் பவதாரிணிக்குமிடையே முதலில் ஒரு பிரிவு மேட்டை உண்டாக்கி விட்டது. 'என்னதான் சொன்னாலும் கைவர்த்தப் பெண்மணி எழுப்பிய கோயிலில் நிவேதனம் செய்வதும், பிரசாதம் உண்பதும் சரிதானா?' என்று அவரது உள்ளம் வினவிக் கொண்டே இருந்தது.

சம தரிசனத்துக்குப் பெயரெடுத்த பரமஹம்ஸராகப் போகிறவர் இந்த வினாவுடனேதான் ராம குமாருடன் தக்ஷிணேசுவரத்துக்கு வந்தார்.

அண்ட பகிரங்களை எல்லாம் உருள வைத்தும் அவற்றுக்கு ஆதாரமாகிய தான் நிலைத்து நிற்கும் தேவி — 'ஸர்வ ஆதாரா, ஸுப்ரதிஷ்டா' என்று ஸஹஸ்ரநாமம் அடுத்தடுத்துப் போற்றும் அன்னை — தக்ஷிணேசுவரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டாள். எல்லாருக்கும் உயிரை அளிக்கும் அவளுக்குப் பிராணப்ரதிஷ்டை செய்தார்கள். மானுடரைப் பெருமைப்படுத்துவதில் தெய்வங்களுக்கு நிகர் யாருண்டு? நம்மால் இயலாத காரியங்களுக்கெல்லாம் அல்லவா கடவுளர் தாமாகவே கட்டுப்பட்டு, நமக்குப் பெருமிதமும், புண்ணியமும் கூட்டி வைக்கின்றனர்? அந்தப் புண்ணியத்தையும் பெருமிதத்தையும் ராணி ராஸமணியும், அவளது மருகர் மதுரா நாதரும் அடைந்தனர்.

அன்றைய தினம் தக்ஷிணேசுவரம் அல்லோல கல்லோலப்பட்டது. வேத கோஷமும், வாத்திய கீதமும், துதிப்பாக்களும் அந்தச் சூழலில் கூடிய ஆயிரமாயிரம் மக்களின் செவிகளை நிரப்பின. அகிற் புகையும், சாம்பிராணியும், சந்தனமும் அவர்களது நாசிகளை நிரப்பின. தேவியின் திருமூர்த்தம் அவர்களது இதயங்களை நிரப்பிற்று. அவர்களுக்கு வயிறு நிறைய உணவும் படைத்து மகிழ்ந்தாள் ராஸமணி. எட்டாண்டுகளுக்கு முன்பு தனது நிவேதன அன்னத்தைக் கேட்ட அன்னபூரணி இன்று அதனைப் பெற்றது கண்டு பிறவிப் பயன் அடைந்ததாகப் பேருவகை பெற்றாள்.

அன்று மாலை கதாதரர் மட்டும் வாடிய வயிற்றோடு ஆலயத்தை விட்டு வெளியேறினார். அருகில் இருந்த ஒரு பலசரக்குக் கடையில் ஒரு தம்பிடிக்கு அவல் வாங்கிக் கொண்டார். அதனைக் கொரித்தபடியே ஜமாபுகூர் பாடசாலையை நோக்கி நடந்தார். (தொடரும்)

அடுத்த இதழில்


சோமு எழுதும் நெடுங் கதை:
வெனிஸ் ஓவியன்

★

வானவெளி வரவேற்கிறது
— விசேஷக் கட்டுரை

★

மறக்க முடியாத திரைப்படங்கள்
— **பாலயோகினி**



டலால் & கம்பெனி பார்ட்னர் ஸ்ரீ வி. பஞ்சாபகேசன் அவர்கள் சகோதரர்குமாரி செளபாக்கியவதி ஜெயலக்ஷ்மிக்கும், சிரஞ்சீவி கே. வெங்கட்ராமன் B. E., அவர்களுக்கும் எட்வர்ட் எலியட்ஸ் ரோடிலுள்ள 'ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில்'' திருமணம் வெகு சிறப்பாக சமீபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீ காருகுறிச்சி அருணாசலம் & பார்ட்டியின் நாதஸ்வரக் கச்சேரியும், ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் & பார்ட்டி; ஸ்ரீமதி எம். எல். வசந்த குமாரி & பார்ட்டியின் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெற்றன.

எல்லா வகுப்பினருக்கும்
சேமிப்புக்குச் சிறந்த வாய்ப்பு

சென்ட்ரலின்

புக் பாங்க்

விபரங்களுக்கு அண்மையிலுள்ள
பிராஞ்சை அணுகவும்

**தி சென்ட்ரல் பாங்க்
ஆப் இந்தியா லிட்.**

இந்தியாவில் மிகப் பெரிய
ஜாயிண்ட் ஸ்டாக் பாங்க்

டிபாசிட் தொகை ரூ. 236 கோடி

சென்னை நகரில்
8 ஆபீஸ்கள்
உள்பட

இந்தியாவில் 300க்கு மேற்
பட்ட கிளைகள் உள்ளன



குணத்தில் சிறந்தவை

ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலை

ஸ்பெஷல் தயாரிப்பு

13 & 15 ந. பை.

பிளாஸ்டிக் பொட்டலங்கள்

ARUNA

கானமலை

சங்கீதத்தை கானப் பிரவாகம் என்றும் இசைப் பெருக்கு என்றும் சொல்வதுண்டு. ஆனால் ஸ்ரீ தியாகையா ஸ்வாமிகளோ இசையை அசையாமல் நிற்கும் மலையாக உருவகப்படுத்துகிறார். தமது 'ஸாமஜவரகமன' என்ற கிருதியில் ராமபிரானை 'கானக் குன்றின் மீதிட்ட தீபக் கொழுந்து' — நாதாசல தீபன் — என்று வர்ணிக்கிறார். மலையே ஆறாக ஆவதும் உண்டு அல்லவா? இமயம் என்ற பனி மலை கரைந்து கரைந்தே சிந்துவாகவும் கங்கையாகவும் பாய்வது போல், இசைப் பெருக்குக்கும் ஆதாரமாக ஒரு மலை இருக்கக் கூடும் என்று அநுமானிக்கிறோம்.

'இருக்கக் கூடும்' என்ற நமது அநுமானத்தை 'இருக்கிறது' என்ற அநுபவமாக்கித் தந்தார் ஸ்ரீ எம். டி. ராமநாதன் அவர்கள் — ஏப்ரல் 21ந் தேதி மயிலை ஸாயி கான சபையில் நிகழ்த்திய கச்சேரியில். 'நாதாசல தீப' என்ற இடத்தை அவர் பொருளுணர்ந்து பதுக்கிய போது பரவசமாக இருந்தது. ஸ்ரீராமன் நாதாசல தீபம் மட்டுமல்ல, இதோ மலையாக விளங்கும் ராமநாதனுக்கு ஒளி என்ற ஒளியை ஊட்டும் 'ராம நாதாசல தீபமும்' அவனே என்ற உணர்வு ஏற்பட்டது.


அதே கச்சேரியில் 'ஓ ரங்கசாயி' என்ற மகோன்னதமான காம்போதி ராகப் பாடலில் இசையைக் காவிரிப் பெருக்காகவும் கண்டோம். 'ஓ. ரங்கசாயி' என்று அவர் தமது ஆத்மாவின் அடிவாரத்திலிருந்து பாடியது நீர்ப் பெருக்கின் 'ஓ' என்ற நிர்க்கநாதமாகவும், நாதத்துக்கெல்லாம் ஆதாரமான 'ஓம்' என்ற பிரணவமாகவும் ஒலித்தது.

நாதமலையைப் பற்றி நாம் குறிப்பிட்டோம். அதற்கு முற்றிலும் மாறாக, ஈசுவர தரிசனத்தைத் தடை செய்யும் 'பாழ்மலை' என்ற மலையைப் பற்றியும் அன்று 'சிதம்பர நாதன் திருச் சந்நிதானம்' என்ற நந்தமிழ்ப் பாடலில் நெக்குருகப் பாடினார் ஸ்ரீ எம். டி. ராமநாதன். அந்த வினை மலைதான் அன்றைய கச்சேரியில் என்னென்ன பாடுபடுத்திவிட்டது! சரியான இருமலுடன் பாடகர் மல்லுக் கொடுக்கவேண்டியிருந்தது; ஒலிபெருக்கியோ ஸப்தஸ்வரமும் காணாத சப்த ஜாலங்கள் செய்தது; ஸ்ரீ ராமநாதனின் இயல்பிலேயே கலந்து விட்ட 'மானரிஸம்' வேறு.

'மானரிஸம்', 'சேஷ்டை' என்றெல்லாம் சொல்வதை நாம் அப்படியே ஒப்புக் கொள்வதற்கில்லை. டைகர் ஸ்ரீவரதாச்சாரியாரை அவர் காப்பி அடிப்பதாகச் சொல்வதும் சரியாகாது. புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பது பழமொழி. டைகரின் ஞானபுத்திரரான இவரும் இயல்பாகவே டைகராக இருக்கிறார்.

பட்டையைப் பிரித்தால் மரத்துக்கு ஊறு நேருவது போல் அவரது 'மானரிஸ'த்தை அடியோடு ஒதுக்க முயன்றால் பொங்கிவரும் இசைக்கே ஆபத்து நேரக்கூடும். மூலாதாரத்திலிருந்து நாதத்தைக் கொணரும் போது அவரது சரீரத்தில் ஏற்படும் கோணல்களை மறந்து சாரீரத்தை மட்டும் கவனிப்போமானால் சுருதி சுத்தமும், லய சுத்தமும், பக்தியின் ஆத்மசுத்தமும், ராஜ கம்பீரமும், இன்னளிய பொன் நுண்ணிய இழைகளாவது போல் அந்த ராஜகம்பீரமே குளிர்ந்து குழையும் அழகும் கொண்ட மகத்தான சங்கீதத்தை நாம் நுகரலாம். என்றாலும் ரஸிகர்கள் அவருக்காக ஓரளவு விட்டுக் கொடுப்பது போல், அவரும் ரஸிகர்களுக்காகச் சிறிது விட்டுக்கொடுக்கத்தான் வேண்டும். பாட்டின் பொருளை உய்த்துணர்ந்து பாடும் இவர், சில சமயங்களில் அக்ஷரங்களைக் குதப்புவது உதவாது. இசையின் நுட்பமான அழகுகளைத் தேடித் தேடிக் கொய்து தரும் இவர், இசையம்சமே கலக்காமல் தமது குரல் வளத்தை மட்டும் காட்டும் ஆகாசவாணி சங்கதிகளைக் கைவிட வேண்டும். கர்நாடக சங்கீதத்தை, ரொம்ப ரொம்பக் கர்நாடகமாகத் தூய்மையுடன் பாடத் தெரிந்த இவர் ஹிந்துஸ்தானி இசைப் பாணியைக் கலப்பது தயிர் சாதத்துக்கு நெய்போட்டுக் கொள்வது போல இருக்கிறது. 'அபராதி தியாகராஜு' என்று பந்துவராளி கிருதியில் உருக்கத்துடன் நிரவிய ஸ்ரீ ராமநாதன் தமது இசை வழிபாட்டில் எவ்வித அபராதமும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதே நம் விருப்பம்; பார்த்துக் கொள்வார் என்பதே நம் நம்பிக்கை. — கஸ்யா





4

வீதியிலே சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது, உடையவர் ராமானுஜர் வழக்கப்படி உஞ்சவிருத்தியில் அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தார். குழந்தைகள் காலால் தரையிலே கோடு கீறி, "இதோ வெளி மதில்; இதோ உட் பிராகாரம். இதோ எம்பெருமான் படுத்திருக்கிறார்" என்று பேசி விளையாடிக் கொண்டிருந்தார்கள். உடனே, ஆசாரியர் அந்தத் திருவுருவத்துக்குத் தெண்டனிட்டாராம். அந்தக் குழந்தைகளோடு உடையவரும் கலந்து கொண்டார். குழந்தைகள் கொஞ்சம் தெரு மண்ணை எடுத்து, "இதோ பெருமாள் பிரசாதம்!" என்று சொல்ல, அதை வாங்கித் தமது பிட்சா பாத்திரத்தில் சேர்த்துக் கொண்டார் என்பது வைஷ்ணவ கர்ண பரம்பரைக் கதை. பொய்கையாருடைய 'தமர் உகந்தது' என்ற பாடலை உரைகாரர் விளக்கும் போது இந்தக் கதையை மிகுந்த நயத்துடன் சொல்லித் தத்துவத்தை எடுத்துக் காட்டுகிறார்.

தமர்உகந்தது எவ்வுருவம்
அவ்வுருவம் தானே
தமர்உகந்தது எப்பேர்மற்று
அப்பேர் —

[தமர்-தனது அடியார்கள். உகந்தது-மகிழ்ந்து விரும்பியது. எவ்வுருவம் - எந்த வடிவமோ. அவ்வுருவம் தானே - அந்த உருவமே தனது வடிவமாகக் கொண்டு அதில் அவதரிக்கிறான் இறைவன். எப்பேர் - யார் எந்த நாமம் தந்தாலும். அப்பேர் - அந்தப் பெயரையே தனது திருநாமமாகக் கொண்டு பூசையை ஏற்றுக் கொள்வான்.]

பக்தர்கள் எந்த உருவத்தை விரும்பி, அதில் மகிழ்ச்சி பூரித்து ஆராதிக்கிறார்களோ, அந்த உருவமே இறைவனுக்கும் பிரியமான உருவமாகும். அடியார்கள் எந்தப் பெயரைத் தனக்குச் சூட்டுகிறார்களோ அந்தப் பெயரை உகப்போடு சூடிக் கொள்கிறான்.

— தமர்உகந்து
எவ்வண்ணம் சிந்தித்து
இமையாது இருப்பரே
அவ்வண்ணம் ஆழியான்
ஆம்.

[எவ்வண்ணம்-எந்தப் படிக்கு. சிந்தித்து-மனத்தில் நினைந்து. இமையாது இருப்பரே-கண் இமையாமல்; அதாவது இடைவிடு இன்றி, தியானிப்பார்களோ. அவ்வண்ணம் ஆழியான் ஆம்-அதே படி திருமாலும் அருளோடு நிற்கிறான். ஆழியான் - சக்கராயுதம் தாங்கிய திருமால்.]

எந்தக் கலியாண குணங்களைச் சூட்டிப் பகவானைத் தியானிக்கிறார்களோ, அந்தக் கலியாண குணங்களையே கொண்டு பக்தர்களுக்குத் தரிசனம் தருகிறான். அதாவது, ஆழ்வாருடைய உபதேசம், எந்த உருவத்தை வைத்தும், எந்தப் பெயரை வைத்தும், எந்தக் குணங்களை எடுத்துத் தியானித்தும் பகவானைப் பூஜை செய்யலாம் என்பது.

தமர்உகந்த தெவ்வுருவம்
அவ்வுருவம் தானே
தமர்உகந்த தெப்பேர்மற்
றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித்து
இமையா திருப்பரே
அவ்வண்ணம் ஆழியான்
ஆம்.

இறைவனுக்கு என்று ஒரு நாமமோ ஓர் உருவமோ இல்லை. ஒரு நாமத்திலும் ஓர் உருவத்திலும் அவனை அடக்க முடியாது. பக்தர்கள் தங்கள் பக்தியால் அவனுக்குத் தருகிற உருவங்களையும் நாமங்களையும் அவன் அன்போடு ஏற்றுக் கொண்டு அருள்கிறான்.


ஒருநாமம் ஓர்உருவம்
ஒன்றுமில் லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ!

என்று மாணிக்கவாசகர் தெள்ளேணம் கொட்டியதும் இதுவே!

எந்த உருவமும் பக்திக்குத் தரும் என்ற ஆழ்வார் உபதேசத்தைக் குழந்தைகள் கீறிய கோட்டிலும், எடுத்துத் தந்த தெரு மண்ணிலும் கண்டார் உடையவர்! சமயங்களில் பொதிந்துள்ள தத்துவங்களும், பரம்பரைக் கதைகளும், பூஜை முறைகளும் மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து நிற்கின்றன. இந்த மூன்றில் எதையும் சாரமற்றது என்று எண்ணிவிடலாகாது.

படத் திறப்பு விழா

சென்னை, மயிலாப்பூரில் ஸ்ரீ டி. வி. விஸ்வநாதய்யர் அவர்கள் அன்பளிப்பாக அளித்த காலஞ்சென்ற அட்வகேட் ஸ்ரீ எம். சுப்பராய அய்யர் அவர்களின் திருவுருவப் படத்தை சென்ற 22-ம் தேதி டாக்டர் ஸி.பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் திறந்துவைத்தார். இந்தத் திறப்பு விழாவுக்குச் சென்னை உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி எஸ். ராமச்சந்திரய்யர் தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள் டி.எல். வேங்கடராமய்யர், கே. பாலசுப்பிரமணிய அய்யர், டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர், வி.டி. ரங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் ஸ்ரீ சுப்பராய அய்யர் அவர்களின் அரிய ஈகைப் பண்பையும், கல்வித் துறைக்கு அவர் செய்துள்ள மகத்தான சேவையையும் பெரிதும் பாராட்டிப் பேசினார்கள். மயிலாப்பூர் வித்யா மந்திரின் உப தலைவர் ஸ்ரீமதி அம்மு ஸ்வாமிநாதன் அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினர். ராஜாஜி இந்த வைபவத்துக்கு விஜயம் செய்து சிறப்பித்தார்.



கலை அரசி

காந்தன்

கதையைப் பற்றிச் சிந்தியாமல், ரஸிகப் பெரு மக்களின் ஆதரவைப் பற்றிச் சிந்தியாமல், கலையம்சங்களைப் பற்றியோ, டைரக்ஷன், 'டெம்போ' ஆகியவைகளைப் பற்றியோ சிறிதும் சிந்தியாமல் தயாரிக்கப்பட்ட படம் சரோடி பிரதர்ஸின் ''கலையரசி''.

படத்தில் ஒரு கதாநாயகன். இரண்டு வில்லன்கள். ஒருவன் பூலோகத்து வில்லன். இன்னொருவன் வானுலகத்து வில்லன். இருவரும் பழக்கப்பட்ட வில்லன்கள்தான் வீரப்பா, நம்பியார். எம். ஜி. ராமச்சந்திரனுக்கு இரண்டு வேடம். ஒன்று மோகன் என்ற வாலிபன்; மற்றொன்று வானுலகத்துக் கோமாளி. பானுமதிக்கும் இரண்டு வேடம். ஒன்று, வாணி என்ற கலை அரசி; மற்றொன்று வள்ளியென்ற பைத்தியக்காரி. இதற்கு மேல் கதையைப் பற்றி எதுவும் தெரிந்து கொள்ளாமல் இருப்பது நல்லது. பாத்திரங்கள் எல்லாம் சமையல் பாத்திரங்கள்தான்!

வாணியைவிடப் பைத்தியக்கார வள்ளியின் பாத்திரம் பளிச்சென்று இருக்கிறது. பானுமதி ''அன்னை''யில் அடைந்த பெயரை இழப்பதற்குத்தான் ''கலையரசி'' வந்திருக்கிறது என்பது என் அபிப்பிராயம்.

எம். ஜி. ராமச்சந்திரன் ஏன் வந்தார், என்ன செய்தார், படத்தில் அவர் பாத்திரத்துக்கு என்ன வேலை என்பது எதுவுமே விளங்கவில்லை. காதலிக்கிறார், சிறை செல்கிறார், தங்கையைக் காப்பாற்றுகிறார், பறக்கும் தட்டில் பறந்து சென்று காதலியைக் காண்கிறார். கோமாளியாக வந்து குதித்துக் குதித்து நடந்து இறந்து போகிறார். ஏன்தான் இந்தப் படத்தில் நடிக்க அவர் ஒப்புக் கொண்டாரோ! அட, ராமச்சந்திரா!

பானுமதி சொந்தக் குரலில் பாடும் ''நினைக்கும் போது நெஞ்சம் கண்ணும் துடிப்பதும் ஏனோ?'' என்ற பாட்டு இனிமையாக ஒலிக்கிறது. ''கலையே, உன் எழில் மேனி கனியாவதேன்'' என்று சீர்காழி கோவிந்தராஜனுடன் பானுமதி பாடும் பாட்டும் மிக நன்றாயிருக்கிறது. ஆரம்பத்தில் டி. எம். சௌந்தரராஜன் கம்பீரமாகப் பாடும் ''நீல வானப் பந்தலின் கீழே'' என்ற பாட்டு அற்புதமாயிருக்கிறது. ரஸிக்கவோ, பார்க்கவோ, சிரிக்கவோ எதுவுமே இல்லாத இந்தப் படத்தில் கேட்கவாவது நல்ல பாடல்கள் இருக்கின்றனவே என்று ஒருவாறு திருப்திப்பட்டுக் கொண்டேன்.

''கலை அரசி'' விஞ்ஞான சாதனைகளின் அற்புதத்தைச் சித்திரிக்கும் படம் என்று பிரமாதமாக விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் படத்தைப் பார்த்தால், தயாரிப்பாளர்களது அஞ்ஞானத்தின் அசட்டுத்தனம் தான் மிகுதியாக வெளிப்படுகிறது. வானுலக மனிதர்களின் அரச உடைகளுக்கும், பறக்கும் தட்டில் பொருத்தியிருக்கும் நவீன மின்சார விசைகளுக்கும் என்ன பொருத்தமோ, என்ன சங்கடமோ!

படத்தில் நடிப்புக்கு முதல் இடம் தர வேண்டுமானால், பறக்கும் தட்டுக்குத்தான் தர வேண்டும். சமர்த்தாக ஏறிச் சமர்த்தாக இறங்குகிறது!

ஒரு சோதனைக் காட்சி வருகிறது. பறக்கும் தட்டில் நடக்கும் நம்பியார் — எம். ஜி.யார் சண்டையைத்தான் சொல்லுகிறேன். எத்தனை நேரம்! ஹா! ஒரே வேதனை!

ராஜஸ்ரீ, குமாரி சரசுவதி ஆகியவர்கள் நடித்திருப்பதோடு நடனம் வேறு ஆடியிருக்கின்றனர்!

ஏழு ஆண்டுகளாகச் சதி செய்து ''கலை அரசி''யைத் தயாரித்து வெளியிட்டுத் தமிழர் கலையைப் பழி வாங்கி விட்டனர். பொறுமையைச் சோதித்துப் பொங்கியெழச் செய்யும் ''கலை அரசி''க்கு வணக்கம். அதைத் தயாரித்தவர்களுக்கும், அதில் நடித்தவர்களுக்கும் வணக்கம். தமிழ் மக்கள் உங்களுக்கு என்ன தீங்கு செய்தார்கள்! அவர்களுக்கு ஏன் இப்படிக் கொடுமை புரிந்திருக்கிறீர்கள்? இது மன்னிக்க முடியாத குற்றம்.



உங்கள் கூந்தலின் எழிலை எடுத்துக் காட்டுகிறது



நீங்கள் எந்தவிதமான கொண்டை
அலங்காரம் செய்தாலும்

ஸ்வஸ்திக் பர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்

உங்கள் கூந்தலுக்கு மெருகூட்டி அதன் அழகை
இன்னும் கவர்ச்சிகரமாக எடுத்துக் காட்டும்.
இப்பொழுது அழகிய புது மாதிரி
பாட்டிலில் கிடைக்கிறது!


ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட். பம்பாய்.



Shilpi SOM 9A Tam

3, 4-5-5


விபத்தில் இறந்த இமெதாரைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துக் கொண்டு திரும்புகின்றனர்.
கதை கௌசிகன்
சந்திரனே சாட்சி
சித்திரம் விஜு
விமானத்தில் 'சீட் புக்' செய்த லிஸ்டிலிருந்தும் யுத்த இலாகாவினர் கொடுத்த தகவல்களிலிருந்தும் இறந்த இமெதாரான சுந்தரராஜனுக்கு ஏப்ரல் எட்டாம் தேதி தான் முதல் சார்ஜ் கிடைத்திருக்கிறதென்று தெரிகிறது.
ம்... இரு... இரு.. விபத்து நடந்தது என்றைக்கு? ஏப்ரல் பதினொன்றாம் தேதி, இல்லையா?
நாராயணன் வாக்குப்படி அவன் ஏப்ரல் 11ம் தேதி தான் மறுபடி போன் செய்திருக்கிறான்.
பத்திரிகைச் செய்திப்படி ஏப்ரல் 11ம் தேதி அவன் விமான விபத்தில் இறந்து விட்டான். இறந்தவன் எப்படி டெலிபோனில் பேசி இருக்க முடியும்?
இங்கேதான் நமக்குப் பிழை இருக்கிறது. இன்னொரு விஷயத்தையும் நீ யோசிக்க வேண்டும். உயிலைப் பெற்ற பின் தான் இழந்த உரிமையின வழக்காடிப் பெற உடனே வாதையூருக்குப் போயிருப்பார் என்ற முடிவுக்குத்தான் யாரும் சுலபமாக வருவார்கள். சுந்தரராஜனும் அவ்வித முடிவுக்குத் தான் வந்திருக்க வேண்டும். அப்படி இருக்க அவன் சோலையூர் ஹோட்டலுக்கு மறுபடி டெலிபோன் செய்து விசாரிப்பானேன்?
அப்படியானால் இரண்டாம் முறை டெலிபோனில் பேசியது சுந்தரராஜன் இல்லை என்கிறாயா?
உறுதியாகச் சொன்ன பிறகும் கூட அந்தத் தேதியில் தன் பெயரைக் கேட்க வேண்டிய காரணமென்ன?



நளினியா...? வாருங்கள்.
சென்னை சென்ற சந்துரு வழக்கிற்கான தகவல்களுடன் சோலையூர் திரும்புகிறான். நளினி அப்பீல் செய்து கொண்டபடி வழக்கின் விசாரணை நாளும் வருகிறது.


ஆகவே, இப்போது குறிப்பிட்டபடி முதியவரின் சொத்தில்லை என்பதை என் கட்சிக்காரர் ஒப்புக் கொண்டு விட்டார். எந்த ஆதாரமும் இல்லாத இந்த வழக்கைக் கொண்டு வந்து என் கட்சிக் காரரை மிரட்டி பணம் பறிக்கலாம் என்று பகல் கனவு காணுகிறார், வழக்கிலே தோல்வியடைந்த ... அவர்கள். ஆகவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்யும்படி கனம் கோர்ட்டார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
யுவர் ஆனர்! ஐயாசாமி இரண்டாவது உயில் தயாரித்தார் என்பது உண்மை. ஆனால் அதை இப்போது இங்கு ஆஜர்படுத்த முடியாத நிலையிலிருக்கிறேன். ஏனென்றால் தனபால் அந்த இரண்டாவது உயிலை வஞ்சகமாகக் கவர்ந்து மறைத்து விட்டார்.
மிஸ்டர் சேகர்! இந்த வழக்கிற்கு நீங்கள் சொல்லப் போகும் ஆதாரங்களைக் கேட்கத் தயாராக இருக்கிறேன். இனி நீங்கள் வழக்கை ஆரம்பிக்கலாம்.
தாங்க் யூ யுவர் ஆனர்! முதலில் தனபால் அவர்களின் மனைவி மோகனா அவர்களை விசாரிக்க விரும்புகிறேன்.

ஆரோக்ய வாழ்விற்கு

அரிசி, எண்ணெய், நெய், உருளைக்கிழங்கு,
வெல்லம், பழங்கள், முட்டைகள்

இவைகள் வாங்கும்பொழுது **அக்மார்க்** முத்திரையிட்டவைகளையே வாங்குங்கள்


"அக்மார்க்" முத்திரையிட்ட பொருள்கள் மத்திய அரசாங்க விவசாய உற்பத்தி (தரம் பிரித்தல் மற்றும் குறியிடல்) சட்டத்தின்படி சென்னை மாநிலத்தில் அத்தாட்சி பெற்ற பல வியாபாரிகளால் மத்திய அரசாங்க அனுமதி பெற்ற பரிசோதனைகளில் கணிக்கப்பட்டு தயாரித்து விற்பனையாகின்றன.

"அக்மார்க்" குறியீடு தூய்மைக்கும், தரத்திற்கும் உறுதியளிக்கிறது. அத்தாட்சி பெற்ற தயாரிப்பாளர்களிடமும் கூட்டுறவு பண்டகசாலைகளிலும் இதர சில்லரை வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



விவரங்களுக்கு: ஸ்டேட் மார்க்கடிங் ஆபீஸர் விவசாயத்துறை
12- A, ரிட்சித் தெரு, சென்னை-2

B·I



S. S. ரஜுலா

சென்னையிலிருந்து	நாகப்பட்டினத்திலிருந்து
1963 மே 22	1963 மே 23
1963 ஜுன் 15	1963 ஜுன் 16

கம்பெனியின் சென்னைக் காரியாலயத்தின் மூலம் விற்பனை செய்யக்கூடிய பர்த் வசதியற்ற மற்றும் பங்க் வசதியுள்ள டிக்கட்டுகள் எல்லாம் விற்பனை ஆகிவிட்டன. பங்க் வசதியுள்ள மற்றும் பர்த் வசதியற்ற டிக்கட்டுகள் கீழ்க்கண்ட கம்பெனியின் அங்கீகாரம் பெற்ற பாஸேஜ் புரோக்கர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.


C. M. குட்டி	AL. காசி செட்டியார்	கேரளா டிராவல்ஸ்
38, அங்கப்ப நாயக்கன் தெரு சென்னை-1.	கந்தோரிக் சென்டர் பில்டிங் 6, அரமனைக்காரத் தெரு சென்னை-1	மாஸ்காட் ஹோட்டல் திருவனந்தபுரம்

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூர் முதலிய இடங்களுக்கு நேரடியாக ஏற்றிச் செல்லவும், சிங்கப்பூரில் கப்பல் மாற்றி ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து துறைமுகங்களுக்கு அனுப்பவும் சரக்குகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பிரயாணிகள் மற்றும் சாமான்கள் ஏற்றும் விவரங்களுக்குத் தயவுசெய்து எழுதவும்:

பின்னி & கோ., (மதராஸ்) லிட்.	மதுரா கம்பெனி பிரைவேட் லிட்.
7. அரமனைக்காரத் தெரு. சென்னை-1	முதல் லைன் பீச் ரோடு, நாகப்பட்டினம்

ஏஜண்டுகள்: பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்


உங்கள் கூந்தலின் உண்மை
அழகை வெளிப்படுத்த
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
உபயோகியுங்கள்
உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும், கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத் தவறாமல் தேய்த்து வருவது கூந்தல் அடர்த்தியாக அழகுடன் வளர்வதற்கு இன்றியமையாதது!
தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலிலும், கேசத்திலும் தேய்த்துக் கோள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.
எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கூந்தலின் உண்மையழகை வெளிப்படுத்த காஸ்கேட் உதவுகிறது.
COLGATE
HAIR OIL
மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!
காஸ்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
ECHO·G·4·TAJL.

பொன் விலங்கு

பதினேழாவது அத்தியாயம்

அந்த அதிகாலை நேரத்தில் மல்லிகைப்பந்தலின் வீதிகளில் நடந்து செல்வதே உற்சாகமாக இருந்தது. ஏறி இறங்கி, மேடும் பள்ளமுமாக உயர்ந்தும் தாழ்ந்தும் செல்லும் சாலைகளின் இருபுறமும் ஒரே வரிசையாக நேர் கோடு பிடித்து நிறுத்தினாற் போல் நிற்கும் மரங்களும், குளிர்ந்த காற்றும் 'இந்த வீதியில் நாம் மகிழ்ச்சியோடும், பெருமிதத்தோடும் தாராளமாகக் கால்களை வீசி நடக்கலாம்' என்று நடக்கிறவனையே கர்வப்படச் செய்கிற வீதிகளாயிருந்தன அவை. 'லேக் அவென்யூ' என்று சொல்லப்பட்ட பகுதி அழகாக அமைந்திருந்தது. நகரின் நடு மையத்தில் வட்ட வடிவமான ஏரியைச் சுற்றி ஒரே அளவான மாடி வீடுகள் அந்த இடத்தின் வனப்பையே அதிகப்படுத்துவன போல் ஒத்த அமைப்போடு சீராக இலங்கின. நகரின் அழகுக்காக ஏரியைச் சுற்றியுள்ள 'லேக் சர்க்கிளில்' வீடு கட்டுகிறவர்கள் யாராக இருந்தாலும் ஒரே பிளானில் ஒரே திட்டத்தோடுதான் வீடுகளைக் கட்ட வேண்டும் என்று மல்லிகைப்பந்தல் நகரவையில் சட்டம் இருப்பதாகச் சத்தியமூர்த்தி கேள்விப்பட்டிருந்தான். எந்த இடத்தில் ஆரம்பித்தாலும் மறுபடியும் அந்த இடத்துக்கே வந்து முடிகிறாற்போல் வட்ட வடிவமான ஏரியின் கரையில் ஏரிக்கும் வீடுகளுக்கும் நடுவே அகன்ற சாலையோடு அந்த வீதி அமைந்திருந்தது. முழு வட்டமான அந்த வீதியின் மொத்தச் சுற்றளவு பத்து மைல் ஆதலால் அதற்கு 'டென் மைல் ரவுண்டு' என்றும் அந்த ஊரில் ஒரு பெயர் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த அமைப்பின்படி வீதியின் ஒரு சிறகில் மட்டுமே வீடுகள் இருந்தன. எதிர்ச் சிறகில் ஒரே அளவாய் நெடிதுயர்ந்த மரங்களுக்கு அப்பால் பளிங்கு நீர் சலசலக்க ஏரி அகன்று விரிந்திருந்தது. ஒரு சீராக வாய்த்திருந்த ஒவ்வொரு வீட்டு வாயிலிலிருந்தும் மாடி பால்கனியிலிருந்தும் எதிரே பார்த்தால் வெள்ளை அல்லிப் பூக்களும், செவ்வல்லிப் பூக்களுமாக ஏரி நீர்ப்பரப்பும் அதில் அங்கும் இங்குமாக விரைந்து கொண்டிருக்கும் படகுகளும் மனிதர்களும் தெரிவார்கள். மேலை நாட்டுப் பாணியில் நடத்தப்படுகிற பெரிய பெரிய ஓட்டல்களும், திரைப்பட அரங்குகளும் கடைகளும், கம்பெனிகளும் எல்லாம் ஏரியைச் சுற்றி யிருக்கும் இந்தப் பத்து மைல் வட்டத்துக்குள்ளேயே இருந்தன. மல்லிகைப்பந்தல் நகரத்தின் உயிர்நாடியான பகுதி 'லேக் சர்க்கிள்' எனப்படும் இந்த 'டென் மைல் ரவுண்டு'தான். ஒரே வரிசையான அளவொத்த மரம் செடி கொடிகளும் ஏரிக்குக் கரையிட்டாற் போல் பத்து மைல் சுற்றளவும் விளிம்பில் வகுக்கப்பட்டிருந்த சிறு பூங்காவும் எவர் கண்டாலும் மயங்கி விடும்படியான பெருமையை அந்த ஊருக்குக் கொடுத்துக்கொண்டிருந்தன. நான்கு பக்கமும் ஆகாயத்தின் நீல விளிம்போடு போய்க் கலக்கும் மலைகளின் நீலச் சிகரங்களுக்குக் கீழே சுற்றிலும் முத்துப் பதித்துக் குழிந்த கண்ணாடியை நடுவே வைத்தாற்போல் அந்த ஏரியும் வீடு

மணிவண்ணன்



களும் மேலே மலையிலிருந்து பார்க்கிறவர்களுக்குத் தெரியும். பூபதி அவர்களின் கலைக் கல்லூரியும், மாணவர்களின் விடுதிகளும் இருந்த மேட்டிலிருந்து கீழே லேக் சர்க்கிளில் போய்க் கலக்கும் சிறிய சாலை ஒன்றில் அப்போது நடந்து சென்று கொண்டிருந்தான் சத்தியமூர்த்தி. கல்லூரியிலிருந்து புறப்படு முன் தனக்கும் முதல்வருக்கும் இடையே நிகழ்ந்திருந்த உரையாடலை மீண்டும் நினைத்தபோது கல்லூரி எல்லைக்குள் தான் மேலும் ஒரு விநாடி கூடத் தங்கியிருப்பது புத்திசாலித்தனமில்லை என்ற தீர்மானத்துக்கு வந்திருந்தான் அவன்.

''சாயங்காலத்துக்குள் நான் வேறு ரூம் பார்த்துக் கொண்டு போய் விடுவேன் சார்!'' என்று அவன் கல்லூரி முதல்வரிடம் கூறிய போது, ''நோ.... நோ ...... நீங்கள் நம் கல்லூரி எல்லைக்குள் தங்கியிருப்பது எங்களுக்கு வசதிக் குறைவாக இருக்கும் என்பதாக நான் நினைக்கிறேனென்று என்னைத் தப்பாகப் புரிந்து கொள்ளாதீர்கள். நீங்கள் எவ்வளவு நாள் வேண்டுமானாலும் இங்கே தங்கியிருக்கலாம். என் தலையில் கட்டிக் கொண்டு போவது ஒன்றுமில்லை. உங்கள் சௌகரியத்துக்காகத்தான் சொல்ல வந்தேன்....'' என்று மோவாய்க்குக் கீழே நரையும் கருமையுமாகக் கலந்து வளரத் தொடங்கியிருந்த புல்காவின் தாடியைத் தடவிக் கொண்டே உபசாரமாக அவனுக்குப் பதில் சொல்லியிருந்தார் அவர்.

''ஆமாம்! ஆமாம்! நீங்கள் என் சௌகரியத்துக்காகத்தான் சொல்லுவீர்கள் என்பது எனக்குத் தெரியாதா என்ன?'' என்று அவருடைய பேச்சின் போக்கிலேயே அப்போது அவரை மடக்கிப் பேசி அனுப்பியிருந்தான் சத்தியமூர்த்தி. கல்லூரி முதல்வரும் ஹெட் கிளார்க்கும் சரியான ஆஷாடபூதிகள் என்பது காலையில் அவர்களைச் சந்தித்த முதற் பார்வையிலேயே அவனுக்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. அதைப் புரிந்து கொண்ட மறு கணமே அவன் அங்கிருந்து உலாவப் புறப்படுவது போல் வெளியேறித் தங்கி வசிக்க அறை தேடுவதற்காக லேக் அவென்யூவுக்குப் புறப்பட்டு விட்டான். அவசரத்துக்குத் தனி அறையாகக் கிடைப்பதைப் பார்த்துத் தேடித் தங்கிக் கொண்டாலும் வாடகையைப் பகிர்ந்து கொள்வதற்குப் பின்னால் இரண்டொருவரைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினான் அவன். காலை நேரமாகையால் வெய்யில் வருவதற்கு முன்பாகப் படகில் ஏறிச் சுற்றுகிறவர்களும், சுற்றுவதற்குப் படகு காலியாவதை எதிர் பார்த்துக் காத்திருப்பவர்களுமாக ஏரியும் ஏரிக்கரையும் பரபரப்பாக இருந்தது. கரை ஓரமாக நீலப் பட்டுக்குப் பல வண்ணச் சரிகைக் கரையிட்டதைப் போல் ஊதாவும், சிவப்பும், மஞ்சளும், வெள்ளையுமாகப் பூக்கள் கொள்ளை கொள்ளையாய்ப் பூத்திருந்தன. வேறு வேறு நிறங்களில் ஸ்வெட்டரும், மப்ளரும், கம்பளிப் போர்வையுமாக அணிந்து கொண்டு சாலையில் மக்கள் நடமாடத் தொடங்கியிருந்தனர்.

'மாடியில் ரூம்கள் வாறகைக்கு விழப்படும்' என்று கண்ணில் தெரிந்த முதல் விளம்பரப் பலகையே தப்பும் தவறுமாகத் தெரிந்தது. 'ரூயல் பேக்கரி' என்ற பெயர்ப் பலகை மாட்டிய ஒரு ரொட்டிக் கிடங்கின் கதவுகளில் தான் அந்த விளம்பரம் தொங்கிக் கொண்டிருந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு மறுபடியும் நன்றாகப் பார்த்தான் சத்தியமூர்த்தி. 'ரூம்கள் வாறகைக்கு விழப்படும்' என்றுதான் இருந்தது. 'ரொட்டிக் கடைக்காரரோ இல்லையோ மாவை அழுத்திப் பிசைகிற ஞாபகத்தில் போர்டையும் அழுத்தமாக எழுதியிருக்கிறார். ரூம்களும் அழுத்தமாக இருக்கின்றன என்பதைக் காட்டுவதற்காகவோ என்னவோ 'ரூம்கள்' என்று போட்டிருக்கிறார் என வேடிக்கையாக எண்ணிக்கொண்டே விசாரிப்பதற்குப் படியேறினான் சத்தியமூர்த்தி. பாதி மலையாளமும் பாதி தமிழுமாக வந்து பதில் சொல்லியவர் தெளிவில்லாமல் ஏதோ பேசினார். கால் மணி நேரம் தொண்டைத் தண்ணீர் வற்றிய பின்பே அவர் என்ன சொல்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. மாடியில் போய் அறையைப் பார்த்தான் சத்தியமூர்த்தி. அந்த மாடியில் மொத்தம் மூன்று அறைகள் இருந்தன. குளியலறை முதலிய வசதிகள் எல்லாம் மூன்று அறைகளுக்கும் பொதுவாகவே இருந்தன. மாடியின் பின்புறமாகக் கீழே ஏராளமான சண்பக மரங்கள் காடு மண்டிக் கிடந்ததனால் அவற்றின் கிளைகள் பின் பக்கத்து வராந்தாவில் குளியலறைக்கு அருகே வந்து கொஞ்சிக் கொண்டிருந்தன. சண்பக மணமும் ரொட்டிக் கடை நறுமணமும் சேர்ந்து மாடியில் வந்து தவிர்க்க முடியாமல் பரவிக் கொண்டிருந்தன. மாடியின் பின்பக்கத்து வராந்தாவிலிருந்து பார்த்தால் எங்கிருந்தோ வேகமாக இறங்கி வந்து கொண்டிருப்பது போல் மிக அருகே நீல மலைகள் தெரிந்தன. ஆளைப் பிடித்துக்

ஸ்ரீ ஒப்பிலியப்பன் கோடி அர்ச்சனை

முதல் 10 லக்ஷம் பூர்த்தி

11வது லக்ஷம் 21 - 4 - 1963ல் ஆரம்பிக்கப்பட்டது

இக்கோடி அர்ச்சனையில் இதுவரை பங்குகொண்டு பணி ஆற்றிய பக்தர்களுக்கும், வரும் மாதங்களிலும் ஒரு வருஷத்திற்குத் தொடர்ந்து அர்ச்சனை செய்ய முன்வந்துள்ளவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதோடு, அர்ச்சனையில் இன்னும் பங்குகொள்ளாத ஏராளமான ஸ்ரீ ஒப்பிலியப்ப பக்தர்களையும் இதனில் கலந்துகொண்டு ஸ்ரீ பூமிதேவித் தாயார் ஸ்ரீ ஒப்பிலியப்பப் பெருமாள் அனுக்கிரகத்தைப் பெறுமாறு அழைக்கிறோம். உற்றார் உறவினர் அனைவரையும் இதனில் கலந்துகொள்ளச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ ஒப்பிலியப்பனுக்கும் ஸ்ரீ பூதேவிக்கும் தனித்தனியே 1 ஸகஸ்ரநாமம்	ரூ. 9
1 வருட குடும்ப ஜன்ம நக்ஷத்திர அர்ச்சனை - பிரதி மாதமும் உங்கள் நக்ஷத்திரத்திலோ, உங்கள் குடும்பத்தார் நக்ஷத்திரத்திலோ மேற்படி ஸகஸ்ரநாம அர்ச்சனைகள்	ரூ. 108 இதனை 3 தவணைகளில் கட்டலாம்

பணம் அனுப்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேணும்

டி. செ ஷார்

ஸ்ரீ ஒப்பிலியப்பன் கோடி அர்ச்சனைக் கமிட்டி, கும்பகோணம்

ராம்தீர்த் பிரம்மி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)



கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கருநிறத்தையும் பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சியளித்து, ஞாபகசக்தியை அதிகரித்து, கண் எரிச்சலையும் அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

யோகாசனப் படம்

எங்கள் யோகாசனப் படத்தில் காட்டியுள்ளவாறு ஆசனங்களை முறைப்படி செய்து வந்தால் நீங்கள் உடல் வலிவு பெற்று ஆரோக்யமாக வாழ்வீர்கள்

விலை ரூ. 3/- (தபால் செலவு உள்பட)

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR, BOMBAY - 14

மதராஸ் டிப்போ : 25, நைனியப்ப நாயக்கன் தெரு, மதராஸ் - 3


வலி!
வலி!
வலி!
வலி!
வலி!
வலி!
SLOAN'S
LINIMENT
KILLS PAIN
மூட்டு வலி, கீல் வாதம், கடின உழைப்பு, இதர வலிகள்...
வலி
எதுவாயினும்
நிவாரணம்
பெற
ஸ்லோன்ஸ் லினிமெண்ட்
"எந்த வலிக்கும் ஏற்ற மருந்து"
ஸ்லோன்ஸ் பாமையும் உபயோகிக்கலாம். சிறிது தடவினால் போதும். இதமான அதன் வெப்பம் உடனடி நிவாரணம் தருவதை உணரலாம்.
வார்னர்-லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ. வில் இணைக்கப்பெற்றது.)

கீழே தள்ளி விடுகிறாற் போல் குளிர்ந்த காற்று பாய்ந்து பாய்ந்து வீசியது.

அறைக்குள் போவதற்கு முன் அவசரமாக ஒரு விநாடி திரும்பிப் பார்த்தாலும் வராந்தாவுக்கு அப்பால் ஏதோ அழகாக நிறைந்து கிடப்பதை மீண்டும் ஒருமுறை நோக்கவோ, புரிந்து கொள்ளவோ முடியும். அவசரமாயினும் ஞாபகத்திலும் பார்வையிலும் தாமாகவே வந்து பதிந்து கொள்கிற நுணுக்கமான அழகுகள் அவை. வாடகை முதலிய விவரங்களைக் கூறுவதற்கு முன், 'சத்தியமூர்த்தி எதற்காக எந்த வேலையை ஏற்றுக் கொண்டு அந்த ஊருக்கு வந்திருக்கிறான்?' என்பது போன்ற சில விவரங்களை அறிந்து கொள்வதற்காக அவனிடம் விசாரித்தார் அந்த வீட்டின் சொந்தக்காரர். பூபதி கலைக் கல்லூரியின் பெயரைச் சொல்லிய மறுகணமே அந்த மனிதர் விசாரிப்பதை நிறுத்திக் கொண்டு அடங்கி விட்டதைக் கண்டு சத்தியமூர்த்தியே வியப்படைந்தான். தொழிலதிபர் பூபதியும், அவருடைய கல்லூரியும் அந்த ஊரில் எவ்வளவு கௌரவத்துக்கும், பெருமைக்கும் உரியவர்களாக இருக்கிறார்கள் என்பதை அவன் இந்த நிகழ்ச்சியிலிருந்து ஒருவாறு விளங்கிக் கொள்ள முடிந்தது.

'அறை ஒன்றுக்கு மாதம் நாற்பத்தெட்டு ரூபாய் வாடகை. ஒருவரே அந்த வாடகையைக் கொடுத்துக் கொண்டு தனி ஆளாக இருப்பதானாலும் ஆட்சேபணையில்லை. வாடகையைப் பகிர்ந்து கொள்ள இன்னும் யாரையாவது வைத்துக் கொள்ள உத்தேசம் இருந்தால் அறை எவர் பெயருக்கு எடுத்துக் கொள்ளப் படுகிறதோ அவரைத் தவிர இன்னும் இரண்டு பேரை மட்டும் உடன் தங்கச் செய்து கொள்ளலாம். அப்படி உடன் தங்குகிற இருவரிடமும் தலைக்குப் பதினாறு பதினாறு ரூபாய்க்கு மேல் ஒரு சல்லிக் காசு கூட வசூலிக்கக் கூடாது. அதை வசூலிக்கும் பொறுப்பும் முதலில் அறை எடுத்துக் கொள்கிறவரைச் சேர்ந்ததுதான். வீட்டுக்காரர் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முடியாது. முதலில் அறை எடுத்துக் கொள்கிறவர் மாதம் பிறந்ததும் வீட்டுக்காரரிடம் ரூபாய் நாற்பத்தெட்டை எண்ணி வைத்து விடவேண்டும். குளியலறையில் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டும். இரவு பத்து மணிக்குமேல் மின்சார விளக்கை உபயோகிப்பது நல்லதில்லை. அறைச் சுவரில் அநாவசியமாக ஆணிகளை அடித்துப் பாழாக்கக் கூடாது. வீட்டுக்காரர் வசிப்பவர், இருவரில் யார் தரப்பிலிருந்து காலி செய்ய விரும்பினாலும் மூன்று மாதம் முன் தகவல் கொடுத்து விட்டுக் காலி செய்ய வேண்டும். முதலில் அறை எடுத்துக் கொள்கிறவரோடு உடன் தங்குகிற மற்ற இருவரையும் வெளியேற்றும் உரிமைஅவருக்கேஉண்டு. இந்த இருவரைப் பற்றி எந்தக் கவலையையும் வீட்டுக்காரர் பட முடியாது' என்று 'ரூம்கள் வாடகைக்கு விடப்படுவதற்கு' உரிய நிபந்தனைகள் சத்தியமூர்த்தியிடம் வரிசைக்கிரமமாக ஒப்புவிக்கப் பட்டன. அந்தச் சிறிய அறையை வாடகைக்குப் பேசிமுடிப்பதை ஏதோ பெரிய 'நேச தேச உடன்படிக்கை' செய்வது போல் செய்ய வேண்டியிருந்தது. நிபந்தனைகளைக் கையெழுத்துப் போடுவதற்கு இடம் மட்டும் மீதம் விட்டு முன்னேற்பாடாக ஆங்கிலத்தில் 'டைப்' செய்து வைத்திருந்தார் வீட்டுக்காரர். 'ரூம்கள்

> **பொன் விலங்கு**
>
> **மனித வாழ்க்கையிலுள்ள பெரிய ஆச்சரியம் அன்பு நிறைந்தவர்களை எந்த இடத்தில் எப்போது எதற்காகச் சந்திக்கப் போகிறோம் என்பதும் எங்கே எப்போது எதற்காகப் பிரியப் போகிறோம் என்பதும் முன்கூட்டியே தெரியாமலிருப்பதுதான்.**

வாடகைக்கு விடப்படும்' நிபந்தனைகளின் கீழே கையெழுத்துப் போட்டு வீட்டுக்காரரிடம் முன்பணம் கொடுத்தான் சத்தியமூர்த்தி.


அவன் அந்த வீட்டுக்காரரின் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு முன் பணம் கொடுத்துச் சாவியைக் கையில் வாங்கிக் கொண்டு கல்லூரிக்குத் திரும்பிய போது காலை எட்டே கால் மணி. மலைப் பகுதியாதலால் இன்னும் வெய்யிலே வரவில்லை. கல்லூரி அறையிலிருந்து பெட்டி சாமான்களை எடுத்துக் கொண்டு போவதற்குத் தயாராக லேக் அவென்யூவிலிருந்து திரும்பும் போதே ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் திரும்பியிருந்தான் அவன். அங்கே கல்லூரி வாட்ச்மேன் பிளாஸ்கில் காப்பியோடு அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

''சார், நீங்கபாட்டுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போயிட்டீங்களே? அந்தம்மா காப்பி கொடுத்தனுப்பி யிருக்காங்க. நீங்க குளிச்சுத் தயாரானது தெரிஞ்சப்புறம் என்னைச் சைக்கிளில் புறப்பட்டு வரச் சொல்லியிருக்காங்க. நான் போய் உங்களுக்கு டிபன் கொண்டு வரணும்'' என்று

சொல்லிக் கொண்டே அருகில் வந்த 'வாட்ச் மேனிடம்' பெட்டியைக் கொடுத்து வாசலில் நிற்கும் ரிக்ஷாவில் கொண்டு போய் வைக்கச் சொன்னான் சத்திய மூர்த்தி. "ஏன் சார்! வேறே எங்கேயாவது போய்த் தங்கப் போறீங் களா?" என்று கேட்டுவிட்டுக் கேள்வியோடும் பெட்டியோடும் தயங்கி நின்றான் வாட்ச்மேன்.

"ஆமாம்! லேக் அவென்யூவில் ராயல் பேக்கரி ரொட்டிக் கிடங்கு மாடியில் நல்ல அறையாகக் கிடைத்துவிட்டது. பேசி முன் பணமும் கொடுத்து விட்டேன். 'அந்தம்மா' வந்தாலும் இதைத் தெரிவித்து விடு" என்று சொல்லி விட்டுப் பெட்டியை விரைவாக ரிக்ஷாவில் கொண்டு போய் வைக்குமாறு அவனைத் துரிதப்படுத்தினான் சத்திய மூர்த்தி.

ஒன்பது மணிக்குள் அவன் மறுபடி லேக் அவென்யூவுக்கு வந்து அந்த ரொட்டிக் கிடங்கின் மாடியறையில் அவசர அவசரமாகக் குடியேறி விட்டான். அங்கே வந்து தங்கி விட்டதை உறுதிப்படுத்தும் நிச்சயமான சாட்சியைப் போல் மாடி வராந்தாவில் நிறைந்திருந்த சண்பகப் பூ வாசனை கமகமத்துக் கொண்டிருந்தது. எதிர்ப் புறம் நீலப் பெரும் பரப்பாய் ஏரி தன் அழகிய சிறிய அலைகளை மடித்துக் கொண்டு கிடந்தது. கீழே ரொட்டிக் கிடங்கிலிருந்து சர்க்கரைப் பாகு முறுகுவது போன்ற ஒருவித வாசனையும் வந்து பரவிக் கொண்டிருந்தது. அதைத் தனி அறையாகத் தன் உபயோகத்துக்கு மட்டும் வைத்துக் கொண்டு நாற்பத்தெட்டு ரூபாய் நிச்சயமாக அவனால் கொடுக்க முடியாது. | இன்னும் ஒரு வாரத்துக்குள் வெளியூரிலிருந்து தனிக்கட்டையாக அங்கு தன்னைப் போலவே வந்திருக்கும் ஆசிரியர்களையோ அல்லது வேறு மனிதர்களையோ — இரண்டு பேரை உடன் வசிப்பவர்களாகச் சேர்த்துக் கொண்டு விட வேண்டும் என்று அவன் தனக்குள் சிந்தனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருந்தான். அன்று முதல் நாளாக இருந்ததனால் பதினொரு மணிக்குக் கல்லூரி திறப்பதாக அறிவித்திருந்தார்கள். லேக் அவென்யூவிலிருந்து கல்லூரிக் காம்பவுண்டை அடைவதற்கு அரை மணி நேரமோ, அல்லது அதற்கும் சிறிது குறைவான நேரமோ நடந்து போக வேண்டியிருக்கும் என்று தோன்றியது. ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டே நடந்து போவதற்கு ஏற்ற சுகமான சாலை அது. எனவே ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று முறை அந்தச் சாலை வழியே நடந்து போய்த் திரும்ப வேண்டி யிருக்குமே என்பதை எண்ணிச் சத்தியமூர்த்தி மகிழ்ச்சி அடைந்தானே தவிரக் கவலைப் படவில்லை. அறைக்குள் மொத்தம் நான்கு அலமாரிகள் இருந்தன. ஒன்றில் தன் புத்தகங்களைப் பிரித்து அடுக்கினான் அவன். தன்னுடைய பொருள்களை எல்லாம் அந்த அறைக்குள் ஒழுங்கு படுத்தி வைத்தபின் நீராடச் சென்றான். மல்லிகைப் பந்தலின் குளிர்ந்த நீர் பட்டுப் போல் மென்மையா யிருந்தது. குழாயைத் திறந்ததும் குளிர்ந்த நீர் சில்லென்று சிலிர்த்துக் கொண்டு கொட்டியது. இவ்வளவு அருமையாகத் தண்ணீர் ஏற்பாடு செய்திருக்கும் மல்லிகைப் பந்தல் நகரசபையை வாழ்த்தியது அவன் உள்ளம். நீராடி விட்டுத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தவன் கையில் பிளாஸ்க்குடன் அறை வாசலில் சாய்ந்தாற் போல நின்று கொண்டிருந்த பாரதியைச் சந்தித்தான். கூச்சமும் பயமுமாக அந்தக் கோலத்தில் அவளைக் கடந்து அறைக்குள் போவதற்கே திகைத்துத் தயங்கினான் அவன். சாதாரணமாக ஆண் பிள்ளைகளுக்கு முன்னிலையிலேயே திறந்த மார்போடு நிற்பதையோ, நடப்பதையோ விரும்பாதவன் இப்போது அந்தப் பெண்ணுக்கு முன்பாக இன்னும் கூசிநின்றான். பாரதியும் அந்த நிலையில் அவனிடம் என்ன பேசுவதென்று தோன்றாமல் நாணித் தயங்கினாள். ஈரம் பட்டுச் செந்தாமரைப் பூக்களாகச் சிவந்திருந்த அவனுடைய பாதங்களையும், இழைத்த சந்தனத் தண்டுபோல் மினு மினுக்கும் பொன்னிறத் தோள்களையும் பாராதது போல் பார்த்து மறுபடியும் பார்க்கத் தவிக்கும் கண்களோடு நின்று கொண்டிருந்தாள் அவள். நாணித் தலையைக் குனிந்து கொள்ளும் பாவனையில் அவனுடைய தங்கத் திருவடிகளையும் அவற்றில் வெண்முத்துப் பதித்தாற் போன்ற நகங்களையும் அவள் சுலபமாகக் காண முடிந்தது. அந்தக் கால்கள் குளியலறையிலிருந்து நடந்து வந்த வழியெல்லாம் சித்திரம் பதித்தாற்போல் நீர்ப் பிரதிகளில் பாதக் கோலமாகப் பதிந்திருந்தன. கண்ணன் பிறப்புக்கு மாக்கோலம் போட்டது போல் அளவாகத் தெரிந்த அந்த நீர்ப் பிரதிகளை ஓடிப் போய் இரண்டு கைகளாலும் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டு விட வேண்டும் போலத் தவித்தாள் அவள். பொன்னில் வார்த்துக் குழைத்தெடுத்தாற் போன்ற அந்தத் தோள்களை இன்னொரு முறை எப்படியும் பார்த்துவிட வேண்டுமென்று அவள் தன் அழகிய கண்களின் பார்வையை நிமிர்த்தி ஓரமாகச் சாய்த்தபோது அவன் தன் கையில் பிழிந்து வைத்திருந்த ஈரத்


"இந்தத்தடவை உன்னை நம் கோஷ்டியில் சேர்க்க முடியாது திலீப். அடுத்த தடவை பார்க்கலாம்."
"கட்டாயம் என்னைச் சேர்த்திருப்பார்கள், ரகு. ஆனால் கொஞ்ச நாளாகவே எனக்கு என்ன ஆகிவிட்டதுன்னுதெரியல்லே."
"நீ சரியாகவே ஆடறதில்லையே, திலீப். ரொம்ப களைத்துப் போயிட்டதாகத் தெரியறது. தினந்தோறும் ரெண்டுகப் போர்ன்-வீடா சாப்பிடேன். எங்க டாக்டர் அதைத்தான் எப்போதும் சிபாரிசு செய்கிறார்."
"நான் ரகு சொல்படி கேட்டேன். நாளுக்குநாள் அதிக சுறுசுறுப்பு அடைந்தேன். எல்லாம் போர்ன்-வீடா தந்த சக்தி."
"நீ போட்ட ரெண்டு கோலும் பிரமாதம் திலீப். நம் கோஷ்டிக்கு நீதானப்பா உயிர்."
"இத்தனை சுறுசுறுப்பாக நான் என்றுமே இருந்ததில்லை."
Cadbury's
BOURN-VITA
THE IDEAL FOOD DRINK
MADE BY CADBURYS SPECIALISTS IN FOOD DRINKS FOR 100 YEARS
BOURN-VITA
சக்திக்கும்
வலிமைக்கும்
தயாரிப்பாளர்கள்:
Cadbury's

துண்டை மெல்ல உதறி மேலே போர்த்திக் கொண்டிருந்தான். ஆவலோடு கண்களைத் திருப்பிய அவளுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. அந்த நிலையில், பாரதிக்கு ஒரு கவிதை நினைவு வந்தது. அம்பிகாபதி — அமராவதி — கதையை நவீன காவியமாக எழுதி வெளியிட்டிருந்தார் நவநீத கவி என்ற ஒரு மறுமலர்ச்சித் தமிழ்க் கவிஞர். அதில் ஒரு பாட்டு பாரதிக்கு மனப்பாடமே ஆகியிருந்தது. அவளுக்கு மிகவும் பிடித்த பாட்டு அது.

'பார்க்கத் தவித்துப் பார்த்ததுவும்
பாரா திருந்தே தவித்ததுவும்
யார்க்கும் தெரியா திணைந்ததுவும்
யாரும் அறிந்தே பிரிந்ததுவும்
பேசத் தவித்துப் பேசியதும்
பேசா திருந்தே தவித்ததுவும்
நேசம் தெரிந்து மணந்ததுவும்
நீசர் கலைக்கக் கலைந்தனவே.

கவிதை இன்பத்துக்காக நூறு பாடல்களே உள்ள அந்தப் புத்தகத்தை ஏழெட்டுமுறை படித்திருக்கிறாள் அவள். இப்போதும் அவளுக்கு விருப்பமான அந்தப் பாட்டுத்தான் நினைவு வந்தது. அந்தப் புத்தகத்தின் பெயரே 'ஞாபக மலர்கள்' என்று வைக்கப்பட்டிருந்தது. சென்ற வருடம் அவளுடைய பிறந்த நாளன்று கல்லூரித் தோழி ஒருத்தி இந்த 'ஞாபக மலர்களை' அவளுக்கு அன்பளிப்பாகக் கொடுத் திருந்தாள். 'பார்க்கத் தவித்துப் பார்த்ததுவும், பாரா திருந்தே தவித்ததுவும்' என்ற ஒரு வரியைப் பாரதி இப்போது திரும்பத் திரும்ப நினைத்தாள்.

சத்தியமூர்த்தியின் இந்தப் பாதங்களைப் பார்க்கும்போதும் அவள் தவித்தாள். பார்க்க முடியாத போதும்தான் தவித்தாள். இதே உணர்ச்சியை அந்தக் கவி எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறார்?



"வழி விடுகிறீர்களா? உள்ளே போய் உடை மாற்றிக் கொண்டு வந்துவிடுகிறேன்" என்று கேட்டுக்கொண்டே அவன் மிக அருகில் வந்து விட்ட பிறகுதான் அவள் சுய நினைவு வரப் பெற்று விலகி நின்று அவனுக்கு வழி விட்டாள்.

பத்துப் பதினைந்து நிமிடங்கள் கழித்துச் சத்தியமூர்த்தி உடை மாற்றிக்கொண்டு மின்னல் எதிரே வந்து நிற்பது போலப் பளீரென வெண்மையுடுத்தி நின்றான். சிரித்துக் கொண்டே அவளிடம் பேசலானான், அவன்: "உங்களுக்கு மிகவும் சிரமம் கொடுத்து விட்டேன். நீங்கள் என்னைத் தேடிக் கொண்டு இங்கேயெல்லாம் வந்து நிற்பீர்களென்று நான் எதிர் பார்க்கவில்லை. நான் இன்று காலையில் ரூம் தேடி வந்த போது இந்த இடம் அகப்பட்டது. உடனே முன் பணம் கொடுத்துப் பேசிக் கொண்ட பின் இங்கே குடியேறி விடத் தீர்மானித்தேன். விடிந்ததும், பிரின்ஸிபாலும், ஹெட்கிளார்க்கும் கல்லூரியைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தார்கள். அவர்கள் பேச்சு, பார்வை எல்லாம் ஒரு மாதிரி இருந்தது. எனக்குப் பிடிக்கவில்லை. இங்கே வந்து விட்டேன்...."

" ...."

சில விநாடிகள் ஒன்றும் பேசாமல் மன அழுத்தத்தோடு உதட்டைக் கடித்துக் கொண்டிருந்த பாரதி பின்பு நிதானமாக அவனைக் கேட்கலானாள்:

"பிரின்ஸிபாலையும், ஹெட்கிளார்க்கையும்தான் பிடிக்கவில்லையா? என்னையும் சேர்த்துப் பிடிக்காமல் போய் விட்டதோ?"

"அது சரி....? உங்கள் தந்தை எஸ்டேட்டிலிருந்து திரும்பி விட்டாரா, இல்லையா?" என்று அவள் கேள்விக்குப் பதில் கூறாததோடு சிரித்துக் கொண்டே அதற்குச் சம்பந்தமில்லாத வேறொரு கேள்வியையும் அவளிடம் கேட்டான் சத்தியமூர்த்தி.



"அப்பா திரும்பி விட்டார். காலையில் அவர் திரும்பியதும் நீங்கள் வந்திருப்பதையும் கல்லூரி அறையில் தங்கியிருப்பதையும்கூடச் சொல்லிவிட்டேன். எதற்காக இப்படிப் பேச்சை மாற்றுகிறீர்கள்? காலையில் எழுந்ததும் எழுந்திராததுமாகச் சமையற்காரரைக்கூட அருகில் நெருங்க விடாமல் நானே என் கையால் காப்பி போட்டுப் பிளாஸ்



கில் ஊற்றி உங்களுக்குக் கொடுத்தனுப்பினேன். நீங்களோ அந்தக் காப்பியைப் பிளாஸ்க்குடன் அப்படியே திருப்பி அனுப்பியிருக்கிறீர்கள். நேற்றானால் அந்த அகாலத்தில் இருட்டென்றும் குளிரென்றும் பாராமல் நான் உங்களை அழைத்துக் கொண்டு போகப் பஸ் நிலையத்துக்கு வந்தேன். அப்போதும் நீங்கள் என்னிடம் சுமுகமாக இல்லை. பிரியப்பட்டுத் தவித்துக் கொண்டிருப்பவர்களைப் [புரிந்து கொள்ளத் தெரியாத கல் மனம் படைத்தவர்களை என்னதான் செய்வது?''... என்று சிறுகுற்போன்ற வார்த்தைகளால் அவனைச் சாடிக் கொண்டே பிளாஸ்க்கைத் திறந்து அதன் மூடிக்குள்ளேயே அடங்கியிருந்த சிறிய பிளாஸ்டிக் 'கப்'பில் ஆவி பறக்கும் காப்பியை ஊற்றி நீட்டினாள் அவள். அதை மறுக்காமல் வாங்கிப் பருகிய சத்தியமூர்த்தி, ''உங்களுடைய கோபத்தைப் போலவே காப்பியும் சுவையாகத்தான் இருக்கிறது. ஆனால் பாவம்....! பிரியப்பட்டுத் தவித்துக் கொண்டிருப்பவர்களைப் புரிந்து கொள்ளத் தெரியாத கல் மனம் படைத்தவனைத் தேடி நீங்கள் இதை எடுத்துக் கொண்டு வந்திருக்க வேண்டாம்'' என்று குறும்பு தொனிக்க மறுமொழி கூறினான். இதைக் கேட்டு அவள் கன்னங்களில் செம்மை குழம்பி நாணம் கனிந்தது. அவ்வளவு பெரிய செல்வச் செருக்கு நிறைந்த வீட்டில் பிறந்து வளர்ந்திருந்தும் அவளிடம் மிக மென்மையான நாணமும் இருப்பதைக் கண்டு சத்தியமூர்த்தி மகிழ்ந்தான். பெண்களை ஆண்கள் போலப் பிறரிடம் பழகுவதற்கு வழக்கப்படுத்தி விட்டு ஆண்கள்

விலகியிருந்து பெருமைப்பட்டுக் கொள்ளும் பெரிய குடும்பங்கள் பலவற்றைச் சத்தியமூர்த்தி பரிதாபத்தோடு பார்த்திருக்கிறான். 'மாணவ மாணவிகளிடம் நெருப்புக் காய்வது போல் அதிகம் விலகி விடாமலும் அதிகம் நெருங்கி விடாமலும் பழக வேண்டும்' என்று இண்டர்வ்யூவின் போது பூபதி கூறியிருந்த வாக்கியங்கள் அவனுக்கு இன்னும் மறக்க வில்லை. இதயம் மலர எண்ணங்கள் மலர மெய்யான பிரியத்தைச் சுமந்து கொண்டு எதிரே வந்து நிற்கும் பாரதியையும், அவளுடைய தந்தையின் அறிவுரையையும் இணைத்து நினைத்த போது அவனுடைய நினைப்பு ஒழுங்காக வராமல் நடுவில் ஏதோ சிறிது தடுமாறியது. அந்தப் பெண் அடிக்கடி தன்னைத் தேடி வருவதையும், பார்த்துப் பேசத் தவிப்பதையும் எப்படிக் குறைத்துக் கொள்ளச் செய்யலாமென்று நேற்றிலிருந்தே ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கி யிருந்தான் சத்தியமூர்த்தி. பிரின்ஸிபாலும், ஹெட்கிளார்க்கும் காரணமில்லாமலே தன் மேல் பொறாமைப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் இந்தப் பெண் தேடி வருவதும், பார்ப்பதும், சிரிப்பதும் அவர்களுடைய பொறாமையை மேலும் வளர்த்து விபரீதமாக்கி விடக் கூடாதே என்று அவன் தயங்கினான். 'நாணமும் அச்சமும் மடநாய்களுக்கு அன்றோ வேண்டும்' என்று பாரதியார் ஆவேசமாகப் பாடியிருந்தாலும் சமூக வாழ்க்கையில் ஆண் மகனும்கூட அச்சமும் நாணமும் படவேண்டிய இடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. பழி வருகிற இடங்களை நினைத்தால் பயப்படாமலும் நாணப்படாமலும் இருக்க முடியாது. தன் மானத்தையும், நேர்மையையும் அரித்துத் தின்று விடுகிற சபலங்கள் தீரனுடைய வாழ்க்கையில் ஒரு போதும் குறுக்கிடக் கூடாது. புகழோடு வாழ முடியாமற் போகலாம். ஆனால் பழியில்லாமல் வாழ வேண்டும். பழியில்லாமல் வாழ்வதே வீரம்' என்று இப்படி எல்லாம் அவன் மனத்தில் நினைவுகள் ஓடின. அப்போது பிளாஸ்க்கைத் திருகி மூடியபடியே அவனைக் கேட்டாள் அவள்:

''இந்த வேலை உங்களுக்கே கிடைத்து நீங்கள் இங்கேவந்துவிட வேண்டுமென்று இராப் பகலாக நான் தவித்த தவிப்பு உங்களுக்குத் தெரியுமா சார்?....''

''நன்றாகத் தெரியும். அதற்காக நீங்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கிறீர்கள். உங்களுடைய கடிதங்கள் இரண்டும் நீங்கள் தவித்த தவிப்பை எனக்குப் பறைசாற்றியிருக்கின்றன. அத்தனை அழகான வாக்கியங்களால் ஒரு கடிதத்தையும் அதுவும் போதாமல் மற்றொரு கடிதத்தையும் எழுதிய உங்களை எப்படிப் பாராட்டுவதென்றே எனக்குத் தெரியவில்லை. அந்தக் கடிதங்கள் இன்னும் அப்படியே பசுமையாக என் மனத்தில் பதிந்திருக்கின்றன!''

''கடிதங்கள் மட்டும் மனத்தில் பதிந்து விட்டால் போதுமா? அதை எழுதியவளைப் பற்றிய ஞாபகம் கொஞ்சம்கூடப் பதிந்ததாகத் தெரியவில்லையே?''.... என்று அவள் கேட்ட கேள்விக்குச் சத்தியமூர்த்தி பதில் சொல்லாமல் இருந்தான். வெளியே வெய்யில் பரவியிருந்ததால் பால்கனிக்கு அப்பால் ஏரி நீர் வெள்ளிக் குழம்பாய்ப் பளபளக்கத் தொடங்கி யிருந்தது. மணியும் ஏறக் குறையப் பத்தேகால் ஆவதற்கு இருந்தது.

''நீங்கள் நவநீத கவியின் 'ஞாபக மலர்கள்' என்ற புத்தகம் படித்திருக்கிறீர்களா சார்?'' என்று இருந்தாற் போலிருந்து ஒரு புதிய கேள்வியை அவனிடம் கேட்டாள் பாரதி.

''ஏன்? படித்திருக்கிறேன். அதில் என்ன....?'' என்று சிறிது நேரம் பொறுத்துச் சத்தியமூர்த்தி அவளுக்குப் பதில் கூறினான்.

''ஒன்றுமில்லை! அதில் ஒரு பாட்டு உண்டு. 'பார்க்கத் தவித்துப் பார்த்ததுவும் — பாராதிருந்து தவித்ததுவும், பேசத் தவித்துப் பேசியதும், பேசாதிருந்து தவித்ததுவும்' என்று வரும். உங்களைப் பார்த்த நாளிலிருந்தே நானும் அப்படித்தான் இருக்கிறேன். நான் ஏன் இப்படிப் பைத்தியமானேன் என்று எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.''

''மனித வாழ்க்கையிலுள்ள பெரிய ஆச்சரியம் அன்பு நிறைந்தவர்களை எந்த இடத்தில் எப்போது எதற்காகச் சந்திக்கப் போகிறோம் என்பதும் எங்கே எப்போது எதற்காகப் பிரியப் போகிறோம் என்பதும் முன்கூட்டியே தெரியாமலிருப்பதுதான்.....''

''அந்த ஆச்சரியம் என் வாழ்வில் நேர்ந்து விட்டது'' என்று தைரியமாக அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்துச் சொன்னாள் அவள். அந்தத் துணிவையும் உறுதியையும் பார்த்துச் சத்தியமூர்த்தி மலைத்துப் போனான். கல்லூரிக்கு நேரமாகி விட்டது என்று அவளே அப்போது அவனுக்கு ஞாபகப்படுத்தினாள். அறையைப் பூட்டிக் கொண்டு அவன் கல்லூரிக்குப் புறப்படத் தயாரானான். மறுக்க முடியாத காரணத்தால் அவன் கல்லூரிக் 'காம்பவுண்ட் கேட்' வரை அவளோடு அவன் காரிலேயே போய் இறங்கிக் கொள்ள நேர்ந்தது.


(தொடரும்)


ஆதரவுடன் சீராட்டி
ஆஸ்டர்மில்க்
பாலூட்டி...
உங்கள் ஆசைக் கண்மணியின்
பாக்கியம்: ஆஸ்டர்மில்க் அளிக்கும்
ஆரோக்கியம். காரணம், தாய்ப்பாலுக்கு
நிகரானது ஆஸ்டர்மில்க். பரிசுத்தமான
பாலிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள
ஆஸ்டர்மில்க், பாப்பாவின் பச்சிளம்ஜீரண
சக்திக்கேற்பப் பிரத்தியேகமாகப்
பக்குவப்படுத்தப்பட்டுள்ளது. தவிர,
பற்களும், எலும்புகளும் திட வளர்ச்சி
பெறுவதற்கான வைட்டமின் 'டி'யும்
இரத்த சோகை தட்டாமல்
காப்பதற்கான அயச்
சத்தும் அதில் சிறப்புறச்
சேர்க்கப்பட்டுள்ளன.
OSTERMILK
...தாய்ப்பாலுக்கு நிகரானது.
இலவசம்: 'ஆஸ்டர் மில்க் புத்தகம்' (ஆங்கிலப் பிரதி)...
விரிவுமிக்க, குழந்தைப் பராமரிப்புநூல்... தபால் செலவுக்காக 50 ந.
பைசா தபால் வில்லைகள் இணைத்து எழுதுக: ஆஸ்டர்மில்க்'
தபால் பெட்டி எண் 2120, சென்னை-2.
OS.9-X51-M. Tb

செய்து பாருங்கள்:

கலிடாஸ்கோப்

உங்கள் வீட்டில் ஏதாவது முகம் பார்க்கும் கண்ணாடி உடைந்திருக்குமே. அதைப் படக் கடைக்கு எடுத்துப் போய் 2 அங்குல அகலம் 9 அங்குல நீளத்துக்கு (இதே அளவுதான் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை.) இரண்டு துண்டு களை வெட்டிக் கொண்டு வாருங்கள். அதே அளவுக்கு ஓர் அட்டையை நீங்களாகக் கத்திரித்து அதன் ஒரு பக்கத்தில் இண்டியன் இங்கியைப் பூசிக் கருப்பாக்குங்கள். இனி, இந்த மூன்று பட்டைகளையும் (அட்டையின் கருப்புப் பக்கம் உள்ளிருக்கும்படி) படத்தில் காட்டியபடி முக்கோணப் பட்டைக் குழல் போல் ஒன்று சேர்த்து அதன் சேரும் முனைகளைக் கோந்துக் காகிதம் கொண்டு ஒட்டிவிடுங்கள். இந்த அமைப்பு இன்னும் உறுதியாக இரண்டு ரப்பர் வளையங்களை இழுத்து அதைச் சுற்றி மாட்டிவிடுங்கள். ஓர் அட்டைக் குழல் செய்து அதற்குள் இந்த முக்கோணப் பட்டைக் குழலை வைத்து அதன் இடுக்குகளில் துணியையோ, வைக்கோலையோ வைத்து அடைத்து நழுவி விழாமல் உறுதியாக்கிக் கொள்ளுங்கள். இந்தக் குழலின் ஒரு முனையில் ஒரு வட்டக் கண்ணாடித் துண்டைப் பொருத்திப் பசைக் காகிதத்தால் ஒட்டிவிடுங்கள். இனி திறந்துள்ள முனை வழியே சிறு சிறு வண்ண மணிகள், உடைந்த வளையல் துண்டுகள் இப்படி ஏதாவது பல வித உருவமுடைய பொருள்களைப்போட்டு அந்த முனையைத் துவாரமிட்ட வட்டமான அட்டையைக் கொண்டு மூடி விடுங்கள். அந்தத் துவாரத்தில் ஒரு கண்ணாடித் துண்டை உட்பக்கமாக வைத்து மூடி நழுவாமல் பக்கங்களில் ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டும். இதன் வழியாகக் குழலுக்குள் பார்க்கலாம். பாருங்கள். பார்க்கும் போதே குழலை அசைத்து உருட்டிக்கொண்டேயிருங்கள். அற்புதமான அதிசயமான, விந்தையான காட்சிகளை, அது நகர்ந்து விதவிதமான உருவங்களை உண்டாக்கும் அழகைக்கண்டு ரசிப்பீர்கள்.




உங்கள் ஆல்பத்துக்கு:

ஒருசில இனத்துப் பெண்கள்தான் முகத்துக்குத் திரை அணிவார்கள். ஆனால் இந்த ஒட்டகச் சவாரிக்காரர் ஏன் இப்படி முகமூடி அணிந்திருக்கிறார்? சஹாரா பாலைவனத்தில் வாழும் 'தாரக்' என்ற ஜாதியார் இவர். ஒரு காலத்தில் சஹாரா பாலைவனத்தில் கொலை, கொள்ளை நடத்தி வந்த வீரக் கூட்டத்தினர் இவர்கள். முகம்மதிய மதத்தைச் சேர்ந்த இவர்கள் மணல் காற்றிலிருந்தும் பாலைவன உஷ்ணத்திலிருந்தும் தங்களைக் காத்துக் கொள்ளவே இப்படி முகத்தை மூடிக் கொள்ளுகிறார்கள். முகம்மதியர்களிலேயே இந்தத் தாரக் இனத்துப் பெண்கள்தான் முகத்தை மூடி மறைப்பதில்லை. அழகான வேலைப்பாடுடன் கூடிய தோலும் மரமும் கலந்து செய்யப்பட்ட சேணத்தையும் வண்ண ஜமுக்காளங்களையும் கொண்ட இந்தத் தாரக் ஒட்டக வீரனின் கம்பீரத்தைப் பாருங்கள். சஹாரா பாலைவனத்தைக் கதிகலங்க வைத்த இவர்கள் இன்று பிரெஞ்சு அரசாங்கத்தினரால் அடக்கி யொடுக்கப்பட்டு அமைதியாக வாழ்க்கை நடத்துகின்றனர்.



உலகத்தின் கதை 4

300,000,000 ஆண்டுகளுக்கு முன்னால்!




கடலில் எப்படி முதல் உயிரினங்கள் தோன்றின என்பதைச் சென்ற வாரம் பார்த்தோம். நீரிலே தோன்றி நீரிலேயே வாழ்ந்து வந்த முதல் ஜீவராசிகளான புல் பூண்டு, தாவரங்கள் நாளாவட்டத்தில் தண்ணீரில் இல்லாமல் தரையிலும் வாழுவதற்கு ஏற்பத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டன. அடிக்கடி பெருமழை பெய்து, மலைகளில் இருக்கும் உப்புக்களைக் கரைத்துக் கொண்டு ஓடிய நதிகள் பூமியை வளப்படுத்தி யிருந்தன. ஆயிரக் கணக்கான வருஷங்களில் நதிப் படுகைகள், ஆற்றங் கரைகளிலெல்லாம் கனத்த பச்சைப் போர்வையை அணிந்தது போல அடர்ந்த காடுகள் தோன்றலாயின. விநோதமான செடிகள் விசித்திரமான ராட்சச மரங்கள். எங்கும் பசுமை, பசுமை, பசுமை! இந்த மரங்களும் செடி கொடி தாவரங்களும் அழிந்து பட்டுச் சதுப்பு நிலங்களில் விழுந்தன. அப்போது பூமி காய்ந்திருக்கவில்லை. விடாத மழை பெய்து கொண்டிருந்ததால் அநேகமாகச் சதுப்பு நிலங்களே அதிகமாக இருந்தன. ஆரம்பக் காடுகள் அழிந்து சதுப்பு நிலத்தில் விழுந்து அதைக் கெட்டிப் படுத்தியதோடு கனமான வளப்ப மிக்க மண்ணையும் உருவாக்கியது. காலப் போக்கில் நதிகள் கொண்டு வந்து தள்ளிய வண்டல் மண் இந்தப் பட்டுப்போன காடுகளின் மீது படிந்து மூடிக்கொண்டன. அதன் மீது மறுபடி காடுகள் தோன்றி அழிந்து வண்டல் படிந்து மூடியது. இப்படியே அடுத்தடுத்து நிகழ்ந்தது. பல்லாயிரம் வருஷங்களில் வண்டல் மண் மேடு பாறைகளாயின. இந்த வண்டல் மண் பாறை அடுக்குகளின் இடையே அகப்பட்டு அழுகிப் போன தாவரங்கள் நிலக்கரியாக மாறின. இன்றைக் கும்கூடச் சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படும் நிலக்கரியை ஆராய்ந்தால் அவைகளில் இலை, பூச்சி ஆகியவைகளின் அச்சு — உருவ அமைப்பு — இருப்பதைக் காணலாம். இந்தக் கானகக் காலத்தை அடுத்தே பிராணிகள் தோன்றலாயின. சுவாச கோசங்களின் மூலம் சுவாசிக்கப் பழகிக்கொண்டன இந்த மிருகங்கள். ஆனாலும் இவைகளுடைய குஞ்சுகளின் வாழ்க்கை நீரிலேதான் ஆரம்பமாகியது. இப்படி நீரிலும் நிலத்திலுமாக வாழ்ந்த பிராணி இனங்களை 'ஆம்பிபியன்ஸ்' என்று அழைக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். இது சுமார் 3,00,000,000 வருஷங்களுக்குமுன்பு.


ஆம்பிபியன்கள் முட்டையிட்டன (4). அந்த முட்டைகளுக்கு ஓடுகள் கிடையாது. அவைகளைச் சுற்றி வழவழப்பான பொருள் (ஜெல்லி) சூழ்ந்திருக்கும். இவ்வித முட்டைகளின் கூட்டம் ஆழமில்லாத நீர் நிலைகளிலும், குட்டைகளிலும் மிதந்தன. சூரிய வெப்பத்தினால் அவை பொரிந்து குஞ்சுகளாயின. ஆரம்பகால ஊர்ந்து செல்லும் உயிரினங்கள் கருவைக் காக்கும் ஓடுகளோடு கூடிய முட்டைகளிட்டன (5). இதனால் நீரில் முட்டையிட வேண்டும் என்ற அவசியமில்லாமல் போயிற்று. அக் காலத்தில் வாழ்ந்த கடல் அநாதைகள் அர்ச்சின் — (6) என்ற உயிரினங்களின் அடையாளங்களை இன்றையப் பாறைகளில் காண முடிகிறது. ஆம்பிபியன் காலத்தின் முடிவில் இறக்கைகளோடு கூடிய பூச்சிகள் தோன்ற ஆரம்பித்தன. (1,2,3). கடலில் எலும்போடு தோன்றிய முதல் ஜீவன் மீன்கள்தான்(7).




1




2




3



4



5



6



7


நீங்கள் பொலிவுடனிருக்க சார்மிஸ் உபயோகியுங்கள்!
புதுமை பெறுக...
இதம் பெறுக...
நளினமாய் இருங்கள்
நாள் முழுதும்!
குளுமையையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சார்மிஸ் டால்கம் பவுடர் நீங்கள் நாள் முழுதும் நளினமாயிருக்க உதவுகிறது. உன்னத மனோரம்மிய மணம்கொண்ட சார்மிஸ் உங்களுக்கு சுகத்தையும் புத்துணர்ச்சியையும் அளித்து, உங்கள் அழகை நன்கு சோபிக்கச் செய்கிறது!
சார்மிஸ்
உன்னத, மனோரம்மிய மணத்துடன் கூடிய டால்கம் பவுடர்

நௌகா சரிதம்

தியாகராஜஸ்வாமிகள் அருளிய நௌகா சரிதம் 21 கீர்த்தனைகளைக் கொண்ட சங்கீத நாடகம். மேடையில் நடித்துக் காட்ட மிகவும் ஏற்றது. பேராசிரியர் சாம்பமூர்த்தி இதற்கு அனுகுணமாகப் பத்யங்கள், சுலோகங்கள் அமைத்து, வானொலியில் நௌகா சரித நிகழ்ச்சியை ஓரிரண்டு முறை ஒலி பரப்பியுள்ளார். இப்போது இது மேடையில் பரத நாட்டிய முறையில் நடன நாடகமாக அளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியை பரத நாட்டிய உலகில் இருபத்தைந்து ஆண்டுகளாகப் புகழுடன் விளங்கி வரும் குமாரி கமலா மேற்கொண்டு தமது நடன வெள்ளி விழாப் படைப்பாக அளித்துள்ளார்.

இதில் கதை அம்சம் குறைவு. கோபியர்கள் யமுனை நதியின் மனோகரமான சூழ்நிலையில் மயங்கிக் கிருஷ்ணனை அழைத்துப் படகில் ஏற்றி உல்லாசமாக நதியில் செல்கின்றனர். அவர்கள் மகிழ்ச்சிக்கும் அகம்பாவத்துக்கும் பங்கம் விளைவிப்பது போன்று மேகம் திரண்டு, இடியும் மின்னலும் தோன்றி மழை பொழிகிறது. ஆற்று வெள்ளத்தில் ஓடம் தத்தளிக்கும் ஓர் நிலையில் கிருஷ்ணனிடம் சரணடைய மேகம் விலகுகிறது; மயக்கமும் தெளிகிறது. கோபியர்கள் கரை சேருகின்றனர். எல்லாம் ராச லீலையின் அமைப்பு.

கதை அம்சம் குறைவாக இருப்பதால் நடனத்திற்கும், அபிநயத்திற்கும், பாவங்களுக்கும் போதிய அவகாசம் இருக்கிறது. இதைப் பூரணமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் குமாரி கமலா.

குமாரி கமலா பிரதான கோபியாகத் தாமே தோன்றி, நடனங்களின் சுவை குன்றாது நிகழ்ச்சியை நடத்திச் சென்றது விசேஷம். கிருஷ்ணனாகத் தோன்றிய சிறுமி ஷைலாவின் நடிப்பு பாராட்டுக்குரியது.

மேடை மீது கூட்டு நடனங்கள் செய்யும்போது குறிப்பிட்ட ஒரு நடிகையின் நடனங்கள் மட்டும் பிரதானமாகவும், மற்றவர்களது நடனங்கள் பின்னணியாக அமைதியாக இருத்தலும் நலம். அப்போதுதான் பார்ப்பவர்களின் கவனம் சிதறிப்போகாமல் கலைப் பண்புடன் கலை அம்சங்களை ரசிக்க உதவியாக இருக்கும். இல்லாவிடில் நடனங்களில் ஒழுங்கு முறை குறைந்து விட்டதோ என்ற உணர்ச்சி உண்டாகி விடும். ஓடத்தில் நிகழும் கூட்டு நடன நிகழ்ச்சி இதற்கு ஓர் உதாரணம்.

பின்னணி இசை முற்பாதியிலிருந்ததை விட இரண்டாவது பகுதியில் ரசிக்கும்படியாக இருந்தது. நடனங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்குமிடையே இணக்கமும் பிற்பகுதியில் அதிகமாகக் காணப்பட்டன.

நௌகா சரிதத்தில் முக்கியமான பாவம் பக்தி. இந்த பாவத்தைப் பார்ப்போர் மனத்தில் நிலைக்கச் செய்துவிட்டால் நௌகா சரிதம் வெற்றி பெற்று விட்டதாகச் சொல்லலாம். ஆனால் இதை நிலைக்கச் செய்வது சுலபமல்ல என்பதையும் இங்கே சொல்லத்தான் வேண்டும். ரசிகர்களுக்குப் பொழுது போக்குக்கு அளிக்கப்படும் கண்கவர் நடன நிகழ்ச்சி சுலபமாகவே அமைந்து விடும். மனோ நிலையைப் பக்தி மார்க்கத்தில் திருப்பி, உயர் உணர்ச்சியை ஊட்டும் நிகழ்ச்சியாக நௌகா சரித்தை நடிக்க வேண்டுமானால் முதல் முயற்சியில் முடியாது. பல தடவைகளுக்குப் பின் நடன நாடகம் மெருகு பெற்றுப் பூரணப் பொலிவை அடையும்போது ஏற்படலாம்.



வயிறு நிறைய விருந்துச் சாப்பாடு உண்டு விட்ட திருப்தி எல்லார் முகத்திலும் வழிந்தது. அதுவும் சிவராமன் மாற்றலாகிப் போகிறாரென்று எல்லோருமாய்ச் சேர்ந்து அவருக்கு அளித்த விருந்தென்றால் ஸ்பெஷல் அயிட்டங்களுக்குப் பஞ்சமா என்ன? அடுத்தது ஏதாவது பேசியாக வேண்டுமே!


"நீங்கள் போய்விட்டால் எங்களுக்கு எதையோ இழந்தது போல் வருத்தமாயிருக்கும்!" என்றார் ஒருவர், சிவராமனைப் பார்த்து.

"ஆமாம்.... உங்கள் பரிவு, அன்பு, யாருக்கு வரும்?......" என்பது போன்ற உபசார மொழிகள் சற்று நேரம் தண்ணீர்

"உங்கள் வாயையெல்லாம் ஊறவேண்டும் என்றுதான் இந்த விஷயத்தைப் பற்றி ஆரம்பித்தேன். இது உண்மையோ, கட்டுக்கதையோ தெரியாது. ஆனால் மனோதத்துவ முறையால் குணமடைந்த ஒருவனைப் பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும்...." என்றார் சிவராமன்.

உடனே எல்லோரும் உணர்ந்துவிட்டார்கள், சிவராமன் ஏதோ கதை சொல்லப் போகிறாரென்று. கதை கேட்கும் ஆசைதான் மனிதனோடு பிறந்ததாயிற்றே!

"இது உண்மையிலேயே நடந்த கதை; கிருஷ்ணனுக்கு மணமாகி ஓராண்டுதான் கழிந்திருந்தது. நாராயணி மீது அவன்



ருக்மிணி பார்த்தசாரதி

அளவிலா அன்பு வைத்திருந்தான். அதைப் பெறும் அருகதையும் அவளிடம் இருந்தது. அழகு, அறிவு, கணவனைப் புரிந்து கொள்ளும் திறமை எல்லாம் சேர்ந்த அவள் அவன் வாழ்க்கையே இன்ப மயமாக்கிய காலம் அது.

கணவனின் குணத்தைப் புரிந்துகொள்ளும் திறமை அவளிடம் இருந்ததல்லவா? அதனாலேயே, அவன் குணத்தோடு இழைந்திருந்த ஒரு புதிரை, ஒரு பீதியை அவன் நாளடைவில் கவனிக்கத் தொடங்கினாள்.

ஒரு நாள் அவர்கள் இருவரும் ஏதோ விருந்துக்குச் சென்றிருந்தார்கள். கிருஷ்ணன் சுபாவத்திலேயே கலகலப்பானவன். அதுவும் மணமான புதிதல்லவா? மனைவி ரசிக்கிறாள் என்பதைக் கண்டுகொண்டு பேச்சோடு ஹாஸ்யத்தை அவன் லாகவமாய் இணைத்துப் பேசிக் கொண்டிருந்தான். எத்த

பட்ட பாடு பட்டன. எத்தனை நேரம்தான் தோத்திரம் பாட முடியும்?

சிவராமன் தமக்குப் பிடித்த விஷயத்துக்குப் பேச்சை மாற்றினார். "இன்று தினப்பத்திரிகையில் பார்த்தீர்களா, மனோதத்துவத்தால் ஒரு பெண்ணின் வியாதி குணமான செய்தி வந்திருக்கிறது...."

பலருடைய அபிப்பிராயங்கள் பின் தொடர்ந்தன. "பார்த்தேன் ஸார்.... ரொம்ப அதிசயமான கேஸ்...."

"எனக்கென்னவோ அது உண்மையாகப் படவில்லை."

"எனக்கும்தான். மனோதத்துவமாவது, மண்ணாங்கட்டியாவது?"

லையோபோர்கள் கலீர் கலீரென்று சிரித்தனர்? அவன் கண்கள் கண்டது நாராயணியின் முகத்தில் மலர்ந்த புன்னகையைத்தான்.

எதிரே சிறு மேஜை மீது ஒரு தட்டில் வெற்றிலையும் அழகான வேலைப்பாடமைந்த வெள்ளிக் கிண்ணத்தில் வாசனைப் பாக்கும் வைக்கப்பட்டிருந்தன. கிருஷ்ணனுக்கு வெற்றிலை போடும் வழக்கமில்லை. கிண்ணத்திலிருந்த பாக்கில் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். மீண்டும் சம்பாஷணையிலும், 'ஜோக்' அடிப்பதிலும் ஈடுபட்டான்.

திடீரென்று வீட்டுக்கார அம்மாளின் குரல் பதற்றத்துடன் ஒலித்தது. "பாக்கு வைத்திருந்த கிண்ணம் எங்கே?"



"இங்கேதானே இருந்தது?"

"இப்போதுகூடக் கிருஷ்ணன் பாக்கு எடுத்துக் கொண்டானே!"

"ஆமாம். அதற்குள் எங்கே போச்சு?"

எல்லோரும் எழுந்து நின்றார்கள். இங்கு மங்குமாய்த் தேடலானார்கள்.

நாராயணி தற்செயலாய்க் கணவனின் முகத்தைப் பார்த்தாள். தூக்கிவாரிப் போட்டது. அவன் முகம் வெளிறி இருந்தது. கண்களில் விவரிக்க முடியாத பீதி. நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின.

நாராயணி பயந்துவிட்டாள். "என்ன உங்களுக்கு?"

"கிண்ணத்தை நான் எடுக்கவில்லை!" அவனுடைய கணீர் குரல் அடங்கி அமுங்கிக் கிசுகிசுத்தது.

"நீங்கள் எடுத்ததாக யார் சொன்னது?"

"யாரோ சொல்லவில்லை, நான் பாக்கு எடுத்துக் கொண்டேனென்று?"

"போட்டுக் கொள்ளத்தானே பாக்கை வைத்திருந்தார்கள்? அதற்கும் கிண்ணம் காணாமற் போனதற்கும் என்ன சம்பந்தம்?"

அவள் அவனருகே வந்து பரிதாபமாக அவன் முகத்தைப் பார்த்தாள். கண்கள்தாம் எப்படிக் கெஞ்சின! "நாராயணி! நான் எடுக்கவில்லை! நீ நம்புவாயா?"

குழப்பம் நிறைந்த விழிகளோடு அவள் அவனைப் பார்க்கையிலேயே வீட்டுக்கார அம்மாளின் குரல், பதற்றமற்று, நிம்மதியாய் ஒலித்தது. "கிண்ணம் கிடைத்துவிட்டது. நாம் கவனிக்காதபோது குழந்தை விளையாட எடுத்துக்கொண்டு போயிருக்கிறான்!"

கிருஷ்ணன் உட்கார்ந்து பெருமூச்செறிந்தான். கைக்குட்டையை எடுத்து முகத்தில் துளிர்த்த வேர்வையைத் துடைத்துக் கொண்டான். அதற்கு மேல் அவன் பேசவில்லை!

"நாராயணிக்குத் தன் கணவன் நடத்தை விநோதமாகப் பட்டது. அதற்குப் பிறகு, அவன் அருகில் எந்தப் பொருள் காணாமல் போனாலும் அவன் முகம் வெளிறி, பீதியின் இருப்பிடமாகமாறி விடுவதை இரண்டு முறைகள் கவனித்தாள். ஆனால் அவளை உலுக்கி எழுப்பிய நிகழ்ச்சி அதற்குப் பிறகுதான் நடந்தது. அன்று சரஸ்வதி பூஜை. யார் வீட்டிலோ மஞ்சள் குங்குமத்துக்கு அழைத்திருந்தார்கள். அவள் 'ட்ரெஸ்ஸிங் டேபிள்' முன் அமர்ந்து தலை வாரிக் கொண்டிருந்தாள். எதிரில் இரண்டு 'நெக்லஸ்'களை வைத்துக் கொண்டு எதைப் போட்டுக் கொள்ளலாம் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தாள். அப்போது வாசலில், 'மாமி' என்ற குரல் ஒலிக்கவே, யாரென்று பார்க்க எழுந்து சென்றாள்.

அவள் திரும்பி வந்தபோது ஒரு நெக்லஸ் தான் இருந்தது.

"என் நெக்லஸைக் காணோமே! நீங்கள் பார்த்தீர்களா?" என்று அவள் கிருஷ்ணனைக் கேட்டதுதான் தாமதம், அவன் முகம் பேயறைந்தாற்போல் ஆகிவிட்டது. கண்களில் விவரிக்க முடியாத பயம்.

"ஐயோ! நாராயணி! நான் எடுக்கவில்லை. என்னை நம்பேன்...."

அவளுக்கு ஏன் கேட்டோம் என்றாகி விட்டது. அவன் முகத்தில் ஏன் இந்த வேதனை? அவள் நகையை அவன் எடுத்திருப்பானென்று அவள் எண்ண முடியுமா? அப்படி அவள் எண்ணுவதாக அவன் ஏன் நினைக்க வேண்டும்?

அப்போது அவனுடைய காணமற்போன நெக்லஸ் 'தொப்'பென்று கீழே விழுந்தது. அதாவது, 'மாமி' என்ற குரலுக்குப் பதிலளிக்க அவள் விருட்டென்று எழுந்தபோது புடவைத் தலைப்பில் மாட்டிக்கொண்டு விட்ட நெக்லஸ், இப்போது கீழே விழுந்தது.

நகையைக் கண்டபோது அவள் முகம் மலர்ந்தாலும் கணவனின் குணத்தில் ஒன்றியிருந்த இந்தப் பீதி, அவளைக் கலங்கச் செய்தது. இதற்கு மருந்தே கிடையாதா?

மறு நாள் பிரபல மனோதத்துவ வைத்தியர் சேகரனிடம் கிருஷ்ணனை அழைத்துச் சென்றாள்.

கிருஷ்ணனைப் பற்றிய விவரங்களைக் கேட்ட சேகரன் அவன் வாழ்வில் ஏதோ திருட்டு சம்பந்தமான அதிர்ச்சி ஏற்பட்டிருந்ததை உணரலானார். ஆனால் வெளியில் ஏதும் சொல்லாமல் நாராயணியை முதலில் வீட்டுக்கு அனுப்பினார். பிறகு கிருஷ்ணனோடு பேசுவதில் ஈடுபட்டார். அவன் வாய் மூலமே அவன் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டார் சேகரன்.

கடைசியில் ஒரு நாள் சேகரன் அவர்கள் இருவரையும் கூப்பிட்டு ஆறரச் செய்து, கிருஷ்ணனின் வாழ்வில் சிறு வயதில் நடந்த சம்பவத்தை அவனிடமே, ஏதோ கதை சொல்வதைப் போல் சொன்னார்.

அதைக் கேட்ட உடனே அவன் முகத்தில் தோன்றிய மாறுதல் அற்புதமாய் இருந்தது. அவன் குணத்தோடு இழைந்துவிட்ட பயம் மறைந்து போயிற்று.''

சிவராமன் நிறுத்தினார். உடனே பல்வேறு குரல்கள் எழுந்தன.

''அந்தச் சம்பவம் என்ன சார்?''

''இதோ சொல்கிறேன். பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் அது. கிருஷ்ணனுக்கு அப்போது ஏழு வயது. மூன்றும் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். நல்ல குடும்பத்துப் பையன். பள்ளியில் அவனுக்கு நல்ல பெயர். அதே வகுப்பில் அவனோடு படித்த கோபு என்ற சிறுவன் திருட்டுச் சுபாவம் உள்ளவன்.

ஒரு நாள் கிருஷ்ணன் பள்ளிக்குச் சென்று பையைத் திறந்த போது தன் புத்தம் புதிய கணக்குப் புத்தகம் அதில் இல்லாததைக் கண்டான். கோபு அந்தப் புத்தகத்தை வாங்க வில்லை என்று அவனுக்கு ஞாபகம். ஆனால் அன்று அவனிடம் அந்தப் புத்தகம் இருந்தது. அவன் உடனே எழுந்து வாத்தியாரிடம் கோபு தன் புத்தகத்தைத் திருடியதாகவும், தான் கண்ணால் கண்டதாகவும் சொல்லி விட்டான். கோபுதான் திருட்டுக்குப் பெயர் போனவனாயிற்றே. எனவே, ''இது என் புத்தகம் சார்!'' என்று அவன் மன்றாடிக் கதறியது வாத்தியாரின் செவிகளில் விழவே யில்லை. பிரம்படி வாங்கித் துடிதுடித்துப் போய் விட்டான்.

அன்று கிருஷ்ணன் வீடு திரும்பியபோது அவன் தாயார், ''இன்று கணக்கு வகுப்பு இல்லையா? ஏன் கணக்குப் புத்தகத்தை வைத்து விட்டுப் போய் விட்டாய்?'' என்று கேட்ட போது, அவனால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. கோபு பிரம்படியினால் துடிக்கும் காட்சி கண்முன் வந்தது. உடனே அன்று நடந்த சம்பவங்கள் அனைத்தையும், தன்னால் கோபு பிரம்படி வாங்கியது உள்பட, தாயாரிடம் கொட்டிக் கதறிவிட்டான். தன் மகன் இப்படி அநியாயமாய் ஒரு நிரபராதிப் பையனுக்குத் தண்டனை தேடித் தந்ததை அவளால் பொறுக்க முடியவில்லை. ''அவன் நிலையில் உன்னை நிறுத்திப் பார். நீ செய்யாத திருட்டுக்கு உனக்குத் தண்டனை கிடைத்தால் உனக்கெப்படி இருக்கும்?'' என்று சூடாய்க் கேட்டாள்.

கிருஷ்ணன் தாய்க்குச் செல்லப் பிள்ளை. அந்த அன்னையிடமிருந்து தெறித்த சுடு சொற்கள் அவனை உலுக்கி விட்டன. பசுமரத்தாணி போல், அவை அவன் மனத்தின் அடித்தளத்தில் பாய்ந்துவிட்டன.

காலச் சுழலில் அவன் வளர்ந்த போது அவனோடு அந்த எண்ணமும் வளரலாயிற்று. ''நீ செய்யாத திருட்டுக்கு உனக்குத் தண்டனை கிடைத்தால்?'' வருடங்கள் தேயத் தேய, இந்த எண்ணம் கலக்கமாகவும், பின் பீதியாகவும் அவனைப் பற்றியது.

பிறகு, அவன் தாய் அவனையும் இவ்வுலகையும் விட்டுப் பிரிந்து விட்டாள்.

கடைசியாய் அந்தப் பீதி ஏற்பட்ட காரணம் கூட அவன் மனத்திலிருந்து மறைந்து விட்டது. காரணத்தை அவன் மறந்து விட்டான். ஆனால் அவன் குணத்தோடு இழைந்து விட்ட அந்தப் பயம் மட்டும் விசுவரூபம் எடுத்துவிட்டது. தன் அருகில் எந்தத் திருட்டு ஏற்பட்டாலும் அவன் இப்படிப் பதறினான்.

இந்தப் பயத்துக்குக் காரணமான அந்தச் சம்பவத்தை மீண்டும் அவன் வேறொருவனின் வாயிலாகக் கேட்ட போது, அவன் தெளிவு அடைந்தான். சிறு பிராயத்தின் பசுமையான மண்ணில்விழுந்து தாறுமாறாக வளர்ந்து விட்ட பீதியாகிய முட்புதரை, வாலிபப் பருவத்தின் பகுத்தறிவால் பிடுங்கி எறிய முடிந்தது. அந்தப் பீதி எவ்வளவு தூரம் தன் மனத்தில் புயலை உண்டாக்கி விட்டது என்பதை உணர முடிந்ததாலேயே, அந்தப் புயலை எதிர்த்துப் போராடி வெற்றி காணவும் முடிந்தது....''

சற்று நிறுத்தி விட்டுச் சிவராமன் சிரித்தார். ''எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், மனோதத்துவ வைத்தியம் அப்படி யொன்றும் 'ஹம்பக்' இல்லை என்று காட்டத்தான்!''

குழுமி யிருந்தவர்களில் ஒரு வாலிபன், ''கதையை மிகவும் ரசித்தோம். ஆனால் ஒரே ஒரு சந்தேகம்!'' என்றான்.

''என்ன?''

''கதை சொல்லும்போது உங்கள் குரலில் படர்ந்த தயக்கத்தின் சாயையை நான் கவனித்தேன். உண்மையில் அந்தக் கிருஷ்ணன் யார்? நாங்கள் தெரிந்து கொள்ளலாமா?''

''ஏன், அவன் இங்கேதான் இருக்கிறான்!''

''இங்கேயா? யார் சார் அது?''

''கண்டுபிடியுங்களேன்! —தெரியவில்லையா? கிருஷ்ணனுக்கு வெற்றிலை போடும் வழக்கமில்லை என்றேன். இங்கு வெற்றிலை போடாதவன் ஒருவன்தான் இருக்கிறான்!''

எல்லோர் கண்களும் அவசரமாக இங்குமங்கும் தாவின. கடைசியில் அவை வெற்றிலைச் சாற்றின் சிவப்பு ஏறாத அதரங்களில் பதிந்தன. அவை சிவராமனுடையவை!

வனப்புக்கு நல்வரவு



மபத்லால் க்ரூப்

வாயில்ஸ், லேநோஸ்

MAFATLAL GROUP

நியு ஷராக் (ஷராக்), அஹமதாபாத் • நியு ஷராக், நடியாத் ஸ்டேண்டர்ட், பம்பாய் • ஸ்டேண்டர்ட் (நியு சைஞ) பம்பாய் ஸ்டேண்டர்ட், தேவாஸ் • ஸாஸூன், பம்பாய் • ஸாஸூன் (நியு யூனியன்) பம்பாய் • ஸூரத் காட்டன், ஸூரத் • மபத்லால் பைன், நவ்ஸாரி.

Aiyars MGV-299 TM.

மறக்க முடியாத திரைப்படங்கள்



"தமிழ் நாட்டில் படங்களின் தரம் குறைகிற தென்றால், ஜனாதிபதியின் முதல் பரிசுகளைத் தமிழ்ப் படம் ஒன்றும் தட்டிக்கொண்டு போக முடியவில்லை என்றால் அதற்கு மட்டமான படங்களையே மக்கள் விரும்புகிறார்கள் என்று அவர்கள்மீது பழி சுமத்துவது தவறாகும். படத் தயாரிப்பாளரே இதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு ஆகவேண்டும்." — இவ்வாறு திரைப் படத் தொழிலில் ஈடுபட்டுள்ள நடிகர் ஒருவரே கூறினார் என்றால் நம்புவது கடினமாக இருக்கும். இத்தகைய பேருண்மையைத் தயங்காமல் கூறியவர் ஸ்ரீ சிறுகளத்தூர் சாமா அவர்கள்.


"சிறுகளத்தூர் சாமா என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, சிறுகளத்தூருக்கு எப்போ தாவது போவதுண்டா?" என்று வேடிக்கையாகக் கேட்டேன் நான். "போனால் போகட்டும் என்று ஒரே ஒரு முறை அங்கே போய் வந்திருக்கிறேன்" என்றார் சாமா சிரித்துக்கொண்டே. இவருக்கும் மற்றொருவருக்கும் இடையில் ஏதோ சிறிய மனஸ்தாபம் ஏற்பட்டபோது 'சிறுகளத்தூருக்கு என்னாலும் சிறிதளவேனும் பெருமை உண்டாகுமாறு செய்ய முடியும்' என்று சவால் விட்டார் ஸ்ரீ சுவாமிநாத அய்யர். அதை நிறைவேற்றவும் செய்தார்! எச்.எம்.வி. ஸ்தாபனத்தினர் இவரை இசைத்தட்டு கொடுக்கக் கல்கத்தாவுக்கு அழைத்துச் சென்றபோது, தாங்கள் வெளியிட இருக்கும் அவரது இசைத்தட்டின் லேபிளில் என்ன பெயர் போடட்டும் என்று கேட்டார்கள். அப்போது ஸ்ரீ சுவாமிநாதனுக்குத் தம் ஊர்க்காரரிடம் சவால் விட்டது நினைவுக்கு வந்தது. "சிறுகளத்தூர் சாமா என்று போடுங்கள்" என்றார். அது முதல் அந்தப் பெயர் அவருக்கு நிலைத்து விட்டது!

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த தமிழ் நாவல்களுக்கெல்லாம் இரட்டைப் பெயர் வைக்கும் வழக்கம் இருந்தது. அதாவது "விமலா அல்லது இவான் மகள்"; "ராமநாதன் அல்லது கோலார் கொலைக் கள்ளன்" என்பதுபோல. தமிழ்ப் படங்களில் கூடச் சில படங்களுக்கு இரட்டைப் பெயர் வைக்கப் பட்டிருக்கின்றன. "மாயா பஜார் அல்லது வத்ஸலா கல்யாணம்" என்னும் படத்தை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

"மாயா பஜார்" இரண்டு தடவை படமாக்கப் பட்டு இரண்டு தடவையும் வெற்றிகரமாக ஓடிய படமாதலாலும் எல்லோருக்கும் தெரிந்த கதையாதலாலும் யாருக்குமே கதை மறந்து போயிருக்காது. நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

பழைய "மாயா பஜார்" ஓரியண்டல் பிலிம்ஸ் தயாரித்தது. புது "மாயா பஜார்" விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரித்தது. நான் இரண்டு படங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து எதுவும் கூறப் போவதில்லை. ஆனால் பழைய "மாயா பஜா"ரைப் பற்றி அவசியம் கூறியாக வேண்டும். படத் தயாரிப்புக்குத் தேவையான வசதிகள் எதுவுமே இல்லாத காலத்தில், தந்திரக் காட்சிகள் ஏராளமாகக் கொண்ட இப் படத்தை நல்ல முறையில் தயாரித்தார்கள் என்றால் அது ஆச்சரியம் இல்லையா?

பத்து முறை அவதாரம் எடுத்துள்ள மகா விஷ்ணு ஒவ்வொரு முறையும் வேறு வேறு உருவில் தோன்றினார். ஒவ்வொரு அவதாரத்தின் போதும்



ஒரே மாதிரியாகத் தோற்ற மளிக்க வேண்டும் என்றால் அவருக்கே அது அலுத்துப் போகும் என்பது நிச்சயம். ஆனால் ஸ்ரீ சிறுகளத்தூர் சாமா அவர்களோ என்றால் விடாப்பிடி

யாகக் கிருஷ்ணவதாரத்தையே டஜன்கணக்கான தடவைகளில் திரைப்பட உலகில் எடுத்துக் காட்டியிருக்கிறார். மனுஷனுக்கு எவ்வளவு வைராக்கியம் பாருங்கள்!

தமது முதல் படமான 'மாயா பஜாரி'லும் கிருஷ்ண பரமாத்மாவாகவே தோன்றி அபாரமாக நடித்திருக்கிறார்.

சினிமாவில் நடிப்பதற்கு முன்னால் ஸ்ரீ சாமா அவர்கள் எஸ். வி. சாமிநாதய்யராக இருந்தபடியால் "மாயா பஜார்" விளம்பரங்களில்கூட 'சிறுகளத்தூர் சாமா என்னும் எஸ். வி. சாமிநாதய்யர்' என்றுதான் போட்டிருந்தார்கள்.

சென்னை காஸ்மாபாலிடன் கிளப்பில் உதவி மானேஜரா யிருந்த சிறுகளத்தூர் சாமா அவர்கள் சில காலம் நாடக மேடையில் நடித்திருக்கிறார். நாடக மேடையில் அவர் போட்ட வேஷம் கிருஷ்ணன் வேஷமல்ல; ஸ்திரீ பார்ட்! வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாக உச்சரித்து, உணர்ச்சி பொங்கும் முகபாவங்களுடன் சிறுகளத்தூர் சாமா பாடிய பாடல்கள் பிரசித்தி பெற்று விளங்கின.

கையில் புல்லாங்குழலும், அரையில் பீதாம்பரமும், தலையில் ரத்தினக் கிரீடமும் முகத்தில் புன்னகையுமாக ஸ்ரீ சாமா அவர்கள் பல படங்களில் தோன்றியது போலவே, பல படங்களில் தாடி, மீசையுடன் தோன்றி நடித்திருக்கிறார். பெரும்பாலும் கிருஷ்ண பகவானாகவும் பல படங்களில் தாடி வைத்த சாதுவாகவும் நடித்திருக்கும் சிறுகளத்தூர் சாமா அவர்களை நேரில் பார்ப்பவர்கள் சீக்கிரத்தில் அடையாளம் புரிந்துகொள்ள முடியாது.

மாயா பஜாரில் எம். ஆர். சுப்ரமண்ய முதலியார்தான் கடோத்கசனாக வந்தார். நெடிதுயர்ந்த தோற்றமும் கம்பீரமான ஆகிருதியும் கணீர் என்ற குரலும், அட்டகாச நடிப்பும் கொண்ட அவருக்குப் பாத்திரப் பொருத்தம் பிரமாதமாக இருந்தது.

அந்தக் காலத்தில் கதாநாயகர்கள் சொந்தக் குரலில் பாடக் கூடியவர்களாயிருந்தாக வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. அதன் காரணமாகத்தான் வித்துவான் சீனிவாசனுக்கு அபிமன்யு பாகம் கொடுக்கப்பட்டது.

கதாநாயகி வத்ஸலாவாக நடித்தவர் எம். எஸ். விஜயாள். கதாநாயகியாக நடிப்பதற்கு ஏற்ற அழகிய தோற்றமும், சொந்தக் குரலில் பாடும் திறமையும் பெற்றிருந்த அவர் அந்த நாளைய சினிமா நட்சத்திரங்களுள் பிரசித்தி பெற்று விளங்கினார்.

"மாயா பஜா"ரின் வசனங்களைத் தீட்டியவர் யார் தெரியுமா? சாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மா தான்!

"மாயா பஜா"ரில் மறக்காமல் குறிப்பிட வேண்டியவை தந்திரக் காட்சிகள். துரியோதனனுடைய பழைய உடைகளுக்குப் புதிய உடைகள் மாற்றிக் கொள்ளுதல், மாய வத்ஸலா கடோத்கசனாக மாறுதல், மாயக் கடைகள் மறைதல், அரண்மனை வேலைக்காரர்கள் கோர அரக்கர்களாக மாறுதல், துரியோதனனும், துச்சாதனனும் பாதாளத்தில் மறைதல் — ஆகிய காட்சிகளை எப்படித் தயாரித்தார்கள் என்று படம் பார்த்தவர்கள் அதிசயித்தார்கள்.

சாதாரணமாக அந்த நாளையப் படங்களில் மோட்டார் சைக்கிள் ஓடாமல் நிற்க, அதற்குப் பதிலாக, ரஸ்தா தலைதெறிக்க ஓடும்! நதியில் படகு அசையாமல் நிற்க, நதி அலறிப் புடைத்துக் கொண்டு ஓடும் காட்சியையும் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட காலத்தில் "மாயா பஜார்" பாராட்டத் தக்க முறையில் தயாராகிப் பல வாரங்கள் ஓடி வெற்றி பெற்றதை எப்படி மறக்க முடியும்?

— விஜயம்



எழிலின் எல்லையை எட்ட...

"'ஹேஸலின்' ஸ்னோ"

மேனிக்கு மென்மையாக மெருகிடுவதிலே தன்னிகரற்றது
"'ஹேஸலின்' ஸ்னோ." மென்மையான,
எண்ணெய்ப் பசையற்ற இவ்வழகுப் பொருள்
சருமத்துக்கு மழமழப்பையும் வனப்பையும் ஊட்டுகிறது.
பவுடர் படிவதற்கெனவோ அல்லது தனிப்பட்ட
முறையிலோ உபயோகித்து உங்கள் சருமத்துக்குப்
பொலிவுடன் கூடிய பாதுகாப்பை அளியுங்கள்.
"'ஹேஸலின்' ஸ்னோ" அரம்பையர் குலத்தின்
பாரம்பரை அழகுசாதனம்.





பர்ரோஸ் வெல்கம்
தயாரிப்பு

BWY-II-TAM

பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

அத்தியாயம் பதினொன்று

இளங்காரிக்குடையான்

அநந்தமதி தன் காதுகளையே நம்பாதவள்போல் முதலில் கேட்ட அதே கேள்வியை அவசரமாகத் திருப்பிக் கேட்டாள்: ''உண்மைதானா ஐயா? நீங்கள் சொல்வது உண்மைதானா?''

நெடுந் தூரப் பயணம் செய்து வந்ததால் ஏற்பட்ட களைப்புடன் துவண்டு நின்று கொண்டிருந்த கூலவாணிகன், அநந்தமதி கொடுத்த நீராகாரத்தைப் பருகி விட்டுச் சற்றே தென்பு பெற்று நிமிர்ந்து உறுதியான குரலில் சொன்னான்: ''ஆம், தாயே! நான்தான் உங்கள் இளைய மகளை என் வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் மதுரை நகரில் சேர்ப்பித்தேன். ஊர் திரும்பும் வழியில் அந்த விவரத்தை உங்களிடம் சொல்லி விட்டுப் போகவே இங்கு வந்தேன்.''

சித்திரத் திண்ணையில் அமர்ந்து யாருடைய வரவையோ எதிர் நோக்குபவன் போல் இருளை ஊடுரு



விப் பார்த்துக் கொண்டிருந்த ஆபத்துதவி இளங்காரிக்குடையானும் இதைக் கேட்டு வியப்புற்றவனுய்க் கூலவாணிகனின் அருகில் நெருங்கி வந்தான்.

'சோழ இளவரசி இளங்கோப்பிச்சியை என் மகளென்றே இந்தக் கூலவாணிகன் நம்பிக் கொண்டிருக்கிருனே' என்று உள்ளூற எண்ணி அதிசயப்பட்டுக் கொண்ட அநந்தமதி அவனைப் பார்த்து, ''அது சரி, ஐயா! மதுரை நகரில் எங்கே கொண்டு போய் என் மகளை இறக்கி விட்டீர்கள்?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''என்னுடைய வண்டியில் அரிசி மூட்டைகள் ஏற்றியிருந்ததால் அந்தப் பெண்மணியைக் கூலவாணிகர் வீதியிலேயே இறக்கிவிட வேண்டியதாயிற்று, தாயே!'' என்று வருத்தத்துடன் சொன்னுன் வாணிகன்.

''மதுரையில் யாரிடம் போவதாக அவள் உங்களிடம் சொன்னுள்?''

''தமது அத்தையன்பரைப் பார்க்கப் போவதாகச் சொன்னுர் அம்மா!''

அநந்தமதியும் இளங்காரிக்குடையானும் ஒருவரையொருவர் கலவரத்துடன் பார்த்துக் கொண்டனர். அவ்விருவரையும் கூர்ந்து கவனித்த கூலவாணிகன், ''ஏன், அம்மணி! ! உங்கள் செல்வ மகள் ஏதேனும் மன வருத்தத்தால் உங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் மதுரைக்குப் போய் விட்டாரா, என்ன?'' என்று தணிந்த குரலில் கேட்டான். ''அப்படியானுல் நான் அந்தப் பெண்மணியை உங்கள் அநுமதி





யின்றி அழைத்துப் போய் மதுரையில் சேர்த்தது தவறு என்றல்லவா ஆகிறது?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, ஐயா! நீங்கள் செய்த உதவிக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்'' என்று மெல்ல முணுமுணுத்தாள் அநந்தமதி.

கூலவாணிகன் இதைக் கேட்டு முகம் மலர்ந்தான். ''மகிழ்ச்சி, தாயே! நான் சென்று வர விடை தாருங்கள்'' என்றவாறு பின்னால் நகர்ந்த அவன் ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் சட்டென்று நின்று, ''ஏனய்யா, உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?'' என்று இளங்காரிக்குடையானைப் பார்த்து இரகசியக் குரலில் கேட்டான்.

இருளில் புதைந்து கிடந்த பல்லவபுரம் சாலையையே துருவிப் பார்த்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்த இளங்காரி, ''என்ன விஷயம்?'' என்றான் கரகரத்த தொனியில்.

பயப் பிராந்தியுடன் சுற்றுமுற்றும் நோக்கிய கூலவாணிகன் முதுகை வளைத்துத் தலையை நீட்டி மிக மிகத் தாழ்ந்த குரலில் கிசுகிசுத்தான்: ''நமது பொன்னுனை பல்லவ நாட்டை விழுங்கி ஏப்பமிட்ட சளுக்கியச் சண்டாளர்கள் இப்போது பாண்டிய நாட்டையும் சுருட்டிக் கொண்டு விட முனைந்து விட்டார்களே, உங்களுக்குத் தெரியுமா?''

தூக்கிவாரிப் போட்டவன் போல் துடித்துப் பதறி எழுந்த இளங்காரி, ''என்ன?'' என்று குமுறிக்கொண்டே கூலவாணிகனின் அருகில் பாய்ந்து சென்றான். ''என்ன சொன்னீர்கள் பெரியவரே? சளுக்கியர்கள் பாண்டி நாட்டின் மேல் படையெடுக்கப் போகிறார்களா?''

''ஆம், ஐயா! அநேகமாக நாளை அல்லது மறுநாளைக்குள் பாண்டி நாட்டைப் படை கொண்டு தாக்க ஆரம்

கால்கேட்டின்மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!



ஏனெனில், ஒரே தேய்ப்பில் கால்கேட் டெண்டல் கிரீம் துர் நாற்றத்தையும் சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சத விகிதத்தை ஒழிக்கிறது.


கால்கேட் உடனடியாக வாய்-துர் நாற்றத்தை 10ல் 7 சந்தர்ப்பங்களில் அகற்றுகிறது என்பதையும், உணவு சாப்பிட்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், பற்பசை வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத பெருமளவில், ஏராளமானவர்களுக்குச் சொத்தை ஒழிக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான பரிட்சைகள் நிரூபித்துள்ளன: இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

சாப்பிட்டவுடன் வாயை கொப்பளித்தால் மட்டும் போதாது—சாப்பிட்டவுடன் வழக்கமாக கால்கேட் டெண்டல் கிரீமினுல் உங்கள் பற்களை நன்ருகத் துலக்குங்கள். இதன் விசேஷமும், ஊடுருவும் தன்மையுமுள்ள நுரை பற்களின் இடைவெளிகளிலே புகுந்து, சொத்தைக்கும், துர் நாற்றத்துக்கும் காரணமாக இருக்கும் அழுகிய பதார்த்த அணுக்களை அகற்றுகிறது.

கால்கேட்டில் கேடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிருர்கள்.

வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:

- ✔ துர் நாற்றத்தை அகற்றுகிறது
- ✔ சொத்தையைத் தடுக்கிறது
- ✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது



நீங்கள் பற்பொடியை விரும்பினுல், இந்த பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிருர்கள்.

DC-8-53-TAM.

பித்து விடுவான் சளுக்கிய விக்கிரமாதித்தன்.''

''நீங்கள் எப்படி இந்த விஷயத்தை அறிந்தீர்கள்?''

''கடந்த வாரம் நான் மதுரைக்குப் போகும் வழியில், காஞ்சியிலும் பல்லவபுரத்திலுமாக நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த சளுக்கியப் படைகள் பாண்டி நாட்டின் வட எல்லையை நோக்கித் திரண்டு சென்றதை என் கண்ணாரக் கண்டேன். பிறகு, உறையூர் சுங்கச் சாவடியில் என் வண்டியைச் சோதனையிட்ட சளுக்கிய அதிகாரிகள் இவ்விஷயமாகத் தமக்குள் பேசிக் கொண்டதையும் கேட்டேன். புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள நெல்வேலி என்னுமிடத்திலிருந்து போரைத் தொடங்கி, மின்னல் வேகத்தில் மதுரையைத் தாக்கத் திட்டமிட்டிருக்கிறானாம் விக்கிரமாதித்தன்.''

''அப்படியா!'' என்று கண்களை அகல விரித்த இளங்காரி துடிப்புடன் நிமிர்ந்து, ''பெரியவரே! சளுக்கியரின் படையெடுப்பை எதிர்த்து நிற்கும் தயார் நிலையில் பாண்டிய நாடு காணப்பட்டதா? அல்லது அவர்களுக்குப் பணிந்து போகும் தன்மையில் அது அடங்கிக் கிடந்ததா?'' என்று பரபரத்த குரலில் கேட்டான்.

''நான் சென்றபோது யுத்தத்துக்கான எவ்வித அறிகுறியுமின்றி சகஜ நிலைமையிலேயே மதுரை நகர் காணப்பட்டது. ஆனால், அன்றைய முதல் சாமத்துக்குப் பின் நகரெங்கும் ஒரே பரபரப்பு, ஆவேச வீரத் துடிப்பு! பாண்டிய நாட்டின் முப்பெரும் படைகளும் பொங்குமாங் கடல் போல் குமுறிக் கொந்தளித்துப் பெயர்ந்து வட எல்லையை நோக்கிச் சென்றன. அந்த மாபெரும் படைகளுக்குப் பாண்டியப் பேரரசர் நெடுமாறரின் அருமைப் புதல்வரான இளவரசர் கோச்சடையர் தலைமை ஏற்றுச் சென்றிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். யுத்தம் ஆரம்பமாகி அதில் சளுக்கிய விக்கிரமாதித்தன் நேரிடையாக வந்து கலந்து கொள்வானாகில் அவனை நேருக்கு நேர் எதிர்த்து நின்று போரிடப் பாண்டியப் பேரரசர் நெடுமாறரே யுத்த சன்னத்துக்களுடன் புறப்பட்டு விடுவார் என்றும் பேசிக் கொள்ளப்பட்டது.''

திகைத்து நின்றுகொண்டிருந்த அருந்ததி வாசல் திண்ணையை விட்டுத் தடுமாற்றத்துடன் வெளியே வந்து, ''என் ஐயா! இந்த விவரங்கள் என் மகனுக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''நன்றாகத் தெரியும், தாயே! பாண்டி நாட்டில் பயங்கர யுத்தம் மூளப்போகும் தறுவாயில் இந்தப் பெண் தன் உறவினரின் இல்லம் நாடித் தனிமையில் செல்வது நல்லதல்லவே என்று நானும் நினைத்தேன். ஆனால் உங்கள் மகனோ அதைப் பற்றியெல்லாம் சிறிதும் அச்சம் கொண்டதாகவே தெரியவில்லை. மதுரை நகருக்கு எப்படியும் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்னும் ஆர்வத் துடிப்புத்தான் அவரிடம் காணப்பட்டது'' என்று புன்முறுவலுடன் சொன்ன கூலவாணிகன் இளங்காரியைப் பார்த்து, ''அரசியல் விவகாரங்களையும் நாட்டு நடப்புக்களையும் உடனுக்கு உடன் அறியும் வாய்ப்புப் பெற்ற ஆபத்துதவி வீரரான உங்களுக்குக் கூடவா இவ்வளவு பெரிய சேதி இந்நாள்வரை தெரியாமல் இருந்தது? என்னால் இதை நம்ப முடியவில்லையே!'' என்று வியப்பு விரவிய குரலில் வினவினான்.

இளங்காரி இதற்குப் பதிலேதும் கூறாமல் வேதனையுடன் பெருமூச்சு விட்டுத் தலை குனிந்தான். கூலவாணிகனோ தன் சந்தேகக் கேள்வியை மேலும் தொடர்ந்தான்: ''சளுக்கியர்கள் பாண்டி நாட்டின்மேல் படையெடுக்கப் போகிறார்கள் என்னும் சேதி நேரிடையாகத் தங்களுக்குத் தெரியாமல் போனாலும், இப்போது நம் நாட்டில் நடந்து வரும் ஓர் அக்கிரமக் கெடுபிடிச் செயலின் வாயிலாகவாவது அவ்விஷயத்தைத் தாங்கள் ஊகித்துத் தெரிந்து கொண்டிருக்க வேண்டுமே! ஒருகால் அதுவும் உங்களுக்குத் தெரியாமல் இருக்கிறதா? அல்லது எல்லாவற்றையும் தெரிந்து கொண்டே என்னிடம் இப்படி எதுவும் தெரியாத மாதிரி பேசுகிறீர்களா?''

சட்டென்று நிமிர்ந்த இளங்காரி, கூலவாணிகனைக் கூர்ந்து நோக்கினான்.

''ஆம், ஐயா! நம் பல்லவ மன்னருக்கு எதிராகச் சளுக்கியருடன் கூட்டுச் சேர்ந்து குலாவி வரும் அந்தப் பச்சைத் துரோகி பழையாறைச் சோழர், கடந்த சில வாரங்களாகச் சளுக்கிய வீரர்களின் துணையோடு நாடெங்கும் ஓர் அக்கிரம அநியாய காரியத்தைச் செய்து வருகிறார். அதாவது, சளுக்கியர்கள் பாண்டி நாட்டின்மேல் தொடுக்க விருக்கும் யுத்தத்துக்காக நம் நாட்டு மக்களிடமுள்ள எல்லாவித போர்க் கருவிகளையும் மிரட்டிப் பயமுறுத்திப் பறித்துச் சேர்த்துக் கொண்டு போய் அவர்களுக்குக் கொடுத்து வருகிறாராம். உழவர்களின் உழவுக் கருவிகள், தொழிலாளர்களின் தொழிற் கருவிகள் முதலானவற்றைக் கூட அவர் ஈவிரக்கமின்றிப் பலாத்காரமாகப் பிடுங்கிக் கொண்டு போய் விடுகிறாராம். நாடெங்கும் இப்போது இதே பேச்சாகத்தான் இருந்து வருகிறது.

மதுரையிலிருந்து திரும்பி வரும்போது நானே சில சிற்றூர்களிலும் பேரூர்களிலும் இந்த அக்கிரமச் செயல் நடந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். வழிச் சமையலுக்காக என்னிடம் வைத்திருந்த ஓர் சட்டியையும் அரிவாளையும்கூடப் பலவந்தமாகச் சோழரின் ஆட்கள் வந்து பறித்துக் கொண்டு போய் விட்டார்கள்."— ஆத்திரமும் சினமும் பொங்க இவ்வாறு குமுறிக் கூறினான் கூலவாணிகன்.

இளங்காரியின் உடல் அதிர்ந்து நடுங்கியது. தன் தாயை விழித்துப் பார்த்த அவன் சரேலென்று இல்லத்தினுள் விரைந்து சென்றான். அநந்தமதியும் அவனைப் பின்தொடர்ந்து நுழைந்தாள்.

அத்தியாயம் பன்னிரண்டு

நிழல் மனிதர்

"கேட்டீர்களா, அம்மா? நிலைமை மிகவும் மோசமாகி விட்டது. அந்தக் கூலவாணிகன் சொன்ன சேதிகளைச் சந்திரலேகைச் சிற்றரசரிடமோ பல்லவ மன்னரிடமோ நான் உடனடியாகப் போய்த் தெரிவிக்க வேண்டும்" என்று படபடத்தான் இளங்காரி.

"ஆமாம், மகனே! எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக இந்தக் காரியத்தை நீ செய்தாக வேண்டும். ஆனால், அவர்களை எங்கே போய்ச் சந்திப்பாய்? சந்திரலேகைச் சிற்றரசர் நம்மிடம் எந்த இடத்தையும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே!" என்று கிலேசத்துடன் குமுறினாள் அநந்தமதி.

" 'இன்று மாலைக்குள் நாங்கள் இங்கு வராவிட்டால் நேரே சேதியக் கலைஞரின் இல்லத்துக்குப் புறப்பட்டு வா' என்று முத்தரையர் என்னிடம் சொல்லி விட்டுப் போனாரம்மா! ஆகையால் நான் இப்போதே பெருவளநல்லூருக்குப் பயணப்படுகிறேன்."

"அப்படியானால் சரி" என்று தலையசைத்த அநந்தமதி தயக்கத்துடன் அவனைப் பார்த்து, "நம் இளவரசர் கோவிந்தவர்மர் படை உதவி கோரும் பொருட்டுப் பாண்டிய மன்னரிடம் போயிருப்பதாகச் சொன்னாயே, இப்போது சளுக்கியர்கள் பாண்டிய நாட்டின் மேல் படையெடுக்க விருப்பதால் அவருடைய நிலைமை அங்கே என்ன ஆகும்?" என்று வினவினாள்.

"நானும் அதைத்தான் நினைத்துக் குழம்பிக் கொண்டிருக்கிறேனம்மா!" என்று முணுமுணுத்தான் இளங்காரி.

"பல்லவ இளவரசர் மதுரைக்குப் போயிருக்கும் சேதியை எப்படியோ அறிந்து கொண்டுதான் அவரைப் பின்தொடர்ந்து போயிருப்பாரோ, நமது சோழ இளவரசி இளங்கோப்பிச்சி?"

"அம்மா! இனிமேல் அந்தத் துரோகியின் மகளைப் பற்றி என்னிடம் எதுவும் கேட்காதீர்கள்!" என்று சீறிச் சினந்து சொல்லிக் கொண்டே வெளி வாசலுக்கு விரைந்து வந்தான் இளங்காரி.

"வணக்கம், ஐயா! உங்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படத்தான் காத்திருக்கிறேன்" என்றவாறு கைகூப்பினான் வாசலில் நின்றிருந்த கூலவாணிகன்.

"புறப்பட்டு விட்டீர்களா, பெரியவரே? நல்லது. நானும் உங்களுடன் வருகிறேன். தயவுசெய்து என்னைப் பெருவளநல்லூர் வரையில் உங்கள் வண்டியில் ஏற்றிக் கொண்டு போய் விட்டு விடுங்கள்" என்று தயவாக வேண்டிக் கொண்டே சாலையில் நின்றிருந்த ஒற்றை மாட்டு வண்டியை நோக்கி நடந்தான் இளங்காரி.

வைகறைப் போதின் மசக்கை இருள் விலகுமுன்பே பெருவளநல்லூரை அடைந்த இளங்காரிக்குடையான், சேதியக் கலைஞரின் இல்லத்து வேலியோரம் வந்து நின்று அங்குமிங்குமாகத் தன் பார்வையைச் செலுத்தி நோக்கினான்.

அழகுத் தேவதையின் தவச் சாலை போல் அத்தனை அழகுடன் விளங்கி வந்த அந்தச் சிறிய இல்லம் இன்று பாழ்பட்டுக் காணப்பட்டது. முன்புறமிருந்த எழில்மிகு நந்தவனமும், பின்புறமிருந்த வனம்பெறு தோட்டமும் அழிந்து வெறும் பொட்டல் வெளியாகக் காட்சியளித்தன. விளக்கின் ஒளி கண்டு பல நாட்களானதுபோல் அந்த இல்லமும் அதன் சுற்றுப்புறச் சூழலும் இருளின் ஆதிக்கத்தில் அமிழ்ந்து கிடந்தன.


'மாபெரும் சேதியக் கலைஞர் பரவாதி மல்லரின் இல்லமா இது? நம்பவே முடியவில்லையே! இந்த இல்லம் இருக்கும் நிலையைப் பார்த்தால் இங்கே அவர் இப்போது வாசம் செய்வார் என்றும் தோன்றவில்லையே!'

திகிலடைந்து நின்ற இளங்காரி வேலிப் படலைத் திறந்துகொண்டு தயங்கித் தயங்கி உள்ளே சென்றான். அவன் சந்தேகப்பட்டது போலவே, அந்த இல்லத்து முன் வாயில் சாத்தித் தாழிடப்

மிக நேர்த்தியான எம்ப்ராய்டரி!

மெர்ரிட்*

தையல் மெஷினில் மிகச் சுலபமாகச் செய்யலாம்!



நீங்கள் கவனிக்கவேண்டிய மெர்ரிட்டின் தனிப் பெருஞ்சிறப்புகள்:

■ நுண்ணிய ஸ்பிரிங் டென்ஷன் கட்டுப்பாடு இருப்பதால் மிக நேர்த்தியான எம்ப்ராய்டரி வேலைகளுக்கு மிகவும் ஏற்றது. மிகவும் சுலபமாக இரண்டு வேகத்தை கட்டுப்படுத்த முடியும். ■ மெல்லிய துணிகளையும் கனமான துணிகளையும் உறுதியாகவும் நேர்த்தியாகவும் தைக்க வல்லது. ■ கவர்ச்சியான தோற்றம். வலிமை மிக்க அமைப்பு. ■ மிகக்குறைந்த அளவு பராமரிப்பு. அடிக்கடி பழுதாகாது. ■ தயாரிப்பில் உள்ள குறைபாடுகளுக்கு ஸிங்கர் அளிக்கும் ஒரு வருட உத்தரவாதம்.

மிகச் சிறந்த ஸிங்கர் எண்ணெயையும் தையல் ஊசிகளையும் கேட்டு வாங்குங்கள்.

மிகச் சுலபமான 'ஸிங்கர்' தவணைமுறை திட்டத்தில் 'மெர்ரிட்' தையல் மெஷினை இன்றே வாங்குங்கள்.

...ஸிங்கரின்* நவீனமான சிறப்புகளுடன் [illegible] தயாரிக்கப்பட்டது.

விற்பனைக்குப் பின் உடனடியாக வழங்கப்படும் தனித்த சேவை

மெர்ரிட் தையல் மெஷின் உங்கள் அருகாமையிலுள்ள ஸிங்கர் கடையிலும் அங்கீகாரம் பெற்ற ஸிங்கர் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.


S.G.I TAM.

*ஸிங்கர் தயாரிப்பு ஸ்தாபனத்தின் டிரேட்-மார்க்

இப்பொழுது லிட்டர் அளவு

லிட்டர், மில்லி லிட்டர் என்ற மெட்ரிக் முகத்தலளவைகள் இப்பொழுது நாடு முழுதும் கட்டாய அமுலில் இருக்கிறது ● கிலோ கிராம் என்ற நிறுத்தலளவையும், மீட்டர் என்ற நீட்டலளவையும் சென்ற ஆண்டு கட்டாய அமுலில் வந்தது. இதனால் மெட்ரிக் முறை எடைகளும், அளவுகளும் மட்டுமே இந்தியாவில் சட்டப்படி அமுலில் இருக்கக் கூடிய முறையாகும் ● மெட்ரிக் எடைகள், அளவுகளை (லிட்டர், மீட்டர், கிலோ) அதன் உண்மையான மதிப்பை அறிந்து அப்படியே உபயோகித்தால், மெட்ரிக் முறை எவ்வளவு சுலபமானது என்பது தெரியவரும். ● மெட்ரிக் அளவுகளை சேர், வீசை அல்லது ஆழாக்கு போன்ற பழைய அளவுகளுடன் ஒத்துப்பார்க்காதீர்கள்.

துரிதமான சேவைக்கும், நேர்மையான வர்த்தகத்திற்கும்



முழு மெட்ரிக் யூனிட்டுகளில்

பொருள்களை வாங்குங்கள்

DA 62/819

பட்டிருந்தது. திரை நீக்கப்பட்ட சாளரங்களில் சில மூடியும், சில திறந்தும் கிடந்தன. அப்படித் திறந்திருந்த ஒரு சாளரத்து வழியே உள்ளே எட்டிப் பார்த்தான். தொட்டால் ஒட்டிக் கொள்ளும்படியான காரிருளைத் தவிர வேறு ஒன்றுமே அவன் கண்ணுக்குப் புலனாகவில்லை. அந்த இருள் மூட்டத்தில் வௌவால்களும் துரிஞ்சல்களும் பறந்து கிரீச்சிடும் ஒலிதான் கேட்டது.

'என்ன இது சங்கடம்! பரவாதி மல்லர் தம் இல்லத்தை இப்படிப் பாழடையப் போட்டுவிட்டு எங்கே போயிருப்பார்? எக்காரணத்தினால் அவர் இங்கிருந்து வெளியேறி யிருப்பார்? சந்திரலேகைச் சிற்றரசர் இவ்விடத்தில் வந்து தம்மைச் சந்திக்கும்படி என்னிடத்தில் சொன்னதிலிருந்து அவருக்கும் விஷயம் தெரியாது என்றல்லவா ஆகிறது? அவரும் என்னைப்போல் இங்கு வந்து இந்த இல்லத்தின் நிலைமையைப் பார்த்துத் திரும்பி விட்டிருப்பாரோ? அப்படியானால் இனி அவரையோ, பல்லவ மன்னரையோ நான் எங்கு சென்று சந்திப்பது?'

குழம்பித் தவித்த இளங்காரி ஒவ்வொரு சாளரமாக எட்டி எட்டிப் பார்த்தான். இருளின் சூனியத்தையே அவன் கண்கள் ஸ்பரிசித்து மழுங்கின. கலவரத் திணறலுடன் சற்று நேரம் தலையைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு நின்றவன், வலப் பக்கவாட்டில் அமைந்திருந்த கலைக்கூடத்தை நோக்கிச் சோர்வுடன் நடந்தான். அந்த அழகிய கலைக் கூடமும் கவனிப்பாரற்ற நிலையிலேயே பாழடைந்து இருண்டு காணப்பட்டது. அதன் வாயில்களும் சாளரங்களும் சாத்திக் கிடந்தன.

"சரி; இனிமேல் இங்கிருந்து பயனில்லை. ஆலம்பாக்கத்துக்கே திரும்பிப் போக வேண்டியதுதான்" என்று முணுமுணுத்துக்கொண்டே பின்புறத் தோட்டத்தை நோக்கி நடக்க முற்பட்ட இளங்காரி, ஏதோ மரத்தில் மோதிக்கொண்டவன்போல் திடுக்குற்று நின்றான்.

அவன் எதிரே கடைந்து நிறுத்திய கல் தூண்போல் ஒரு பெரிய தென்னை மரம் நின்றிருந்தது. அந்த மரத்தின் அடிச் சுற்றில் பளிச்சென்று ஓர் ஒளிக் கீற்று எங்கிருந்தோ வந்து தெறித்துக் கிடப்பது தெரிந்தது. அவ்வொளிக் கீற்றைப் பார்த்துப் பரபரப்படைந்த இளங்காரி சடாரென்று திரும்பினான். கண்களை நிமிண்டி விட்டு வெளிச்சம் வரும் திசையை நோக்கினான்.

அன்றொரு நாள் பல்லவ மன்னன் பரமேசுவரவர்மனைப் பார்க்க வேண்டி மண்டபப்பட்டுக் குகைக் கோயிலிலிருந்து புறப்பட்டு வந்த பெரும்பிடுகு முத்தரையர், நந்தியாவட்டைச் செடியொன்றின் பின்னால் மறைந்து நின்றுகொண்டு இந்தக் கலைக் கூடத்தின் சாளரத்து வழியே உள்ளே எட்டிப் பார்த்தாரே, அதே சாளரப் பக்கமிருந்துதான் அந்தச் சன்ன ஒளிக்கற்றை வெளிப்பட்டது.

வியப்பால் வெலவெலத்து நின்ற இளங்காரி ஓசையின்றி அடி மேல் அடி வைத்து நடந்து போய் அச்சாளரத்துச் சுவரோரம் ஒடுங்கி முடங்கிச் சாய்ந்து கொண்டு, ஒளி வரும் இடைவெளி வழியே தன் பார்வையை வெகு கூர்மையாகச் செலுத்தினான்.

அங்கே, முக்கோண வடிவில் அமைந்த சிறியதோர் அறையின் மூலையில் நிறுத்தி வைக்கப் பெற்றிருந்த செப்புச் சிலையொன்றின் கையில் மாவிலைக் கொழுந்து போன்ற திரி விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருப்பது தெரிந்தது.

இளங்காரி தன் கழுத்தை இன்னும் கொஞ்சம் மேலே நீட்டி அவ்வறையின் மற்றப் பகுதிகளையும் கூர்ந்து பார்த்தான். விளக்கு ஏந்தி நிற்கும் அந்தச் சிலையையும், அதற்குப் பக்கவாட்டிலே அமைந்த குறுக்குச் சுவரொன்றின்மேல் படிந்திருந்த அச்சிலையின் நிழலையும் தவிர அங்கு வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், எங்கோ அதல பாதாளத்திலிருந்து ஏதோ சில விசித்திர ஒலிகள் இலேசாக விட்டு விட்டு எழுந்து ஒலிப்பது கேட்டன. இரும்பு, எஃகு, தாமிரம் முதலிய உலோகப் பொருட்கள் ஒன்றுடன் ஒன்று இடிபட்டு மோதி உருள்வது போன்ற ஒலிகள் அவை!

அச்சத்தால் மனம் அதிர்ந்து நடுங்கிய இளங்காரி தன் கட்புலனோடு செவிப் புலனையும் கூர்மையாக்கிக் கொண்டு, குதிகாலை மேலுயர்த்தி நிமிர்ந்து அந்த அறையை மீண்டும் கவனித்தான்.


'கிரீச்' என்ற ஓர் ஒலி. அதைத் தொடர்ந்து சிலையின் நிழல் படிந்திருந்த குறுக்குச் சுவரின் அடிப்புறமிருந்து இன்னும் இரண்டு நிழல்கள் மெள்ள மெள்ள மேலெழும்பின. பிறகு அவ்விரு நிழல்களும் அந்தச் சிலைக்குரிய நிழலின் இரு புறமுமாகப் பிரிந்து நிலைத்து நின்றன.

அவை என்ன நிழல்கள்? சந்தேகமில்லை; யாரோ இருவர் எங்கோ ஓரிடத்தில் எதிரெதிரே ஒருவரையொருவர் பார்த்தவாறு நிற்கிறார்கள்! அவர்களுடைய உருவங்களின் நிழல்களே அந்தச் சுவரில் அப்படி நீண்டு படிந்து நிற்கின்றன!

வலப்புறம் தெரிந்த நிழலுருவம் தாடியும் மீசையுமாக ஒரு யோகியின் வடிவிலே விளங்கியது. இடப்புறம் தெரிந்த நிழலுருவம் கைகளை இடுப்பின் மேல் கம்பீரமாக ஊன்றிக் கொண்டு நிமிர்ந்து நிற்கும் பாவனையிலே தோற்றமளித்தது.

(தொடரும்)


தினமும்
உங்கள்
உணவு
DOUBLE REFINED
EDIBLE OIL
அறுசுவை விருந்தாக
அமைய
OK
டபிள் ரிபைன்ட்
எடிபிள் ஆயில்
உபயோகித்து
சமையல் செய்யுங்கள்.
தித்திப்பு, கார வகை உணவுகள்
தயாரிப்பதற்கு மிகவும் சிறந்தது
அது ஆரோக்யத்திற்கு ஏற்றது;
வைட்டமின்கள் A மற்றும் D யுடன் கூடியது
சுத்தமாகப் பாக் செய்யப்பட்டு 3 வசதியான
குடும்பத்திற்கேற்ற சைஸ்களில்
கிடைக்கின்றது
OK பரிசுக் கூப்பன்களை சேகரியுங்கள்
தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை-1
EP-EAC 10



படுத்த வியாபாரம்

குறும்பன்

“எப்படி நடந்துகொண்டிருந்த வியாபாரம் எப்படி ஆயிடுச்சு பார்த்தீங்களா?”

“போனவாரம் எல்லா நாளும் [illegible] விடிகாலையில் [illegible] வைத்துக் கொண்டு [illegible]!”

“இப்படிச் சொல்லாதே! முதலாளி [illegible] போறாரு!”

“[illegible] போகட்டும்! எல்லா பெரிய சம்பளத்தை அள்ளிக் கொடுத்திருக்காரு!”

“அப்போ, அதனாலே நல்ல லாபம் வந்த காலத்திலே வருஷத்துக்கு நாலு மாசம் போனஸ் கொடுத்து நல்லா வைச்சிக்கலியா? அதை நினைச்சுப் பார்க்கணும்!”

“அதை நினைச்சுப் பார்க்கிறதுனாலேதான் இப்படி ஆத்திரம் பத்திக் கொண்டு வருது. என் நோக்கம் என்ன? அவரும் நல்லா இருக்கணும், நாமும் அவரை அண்டி நல்லா வாழணும்கிறது தானே? அந்தத் தூங்குமூஞ்சிப் பயலை வேலையை விட்டு நீக்கி விட்டாருன்னா, மீண்டும் வியாபாரம் சூடு பிடித்து விடும்!”

“அது நடக்கக்கூடிய காரியம் இல்லையே! அவரு வேலைக்கு வச்சிருக்கிறவன் அவருக்குச் சொந்த மச்சினன். சம்சாரத்தோட கூடப் பிறந்த தம்பி. அவனைப் போய் வேலையை விட்டு நீக்குன்னு நாக்கிலே பல்லைப் போட்டுச் சொல்ல முடியுமா?”

“அப்போ அவரு குட்டிச் சுவராக வேண்டியதுதான். அவருக்குத் துணையாக நம் கதியும் அதோகதியாகும்.”

இப்படிப் பேசிக் கொண்டவர்கள் இருவரும் அந்த ரெடிமேட் துணிகள் விற்கும் கடையில் வேலை பார்க்கும் சிப்பந்திகள். முதலாளியின் நலனை உத்தேசித்துத்தான் இப்படிப் பேசினார்கள் என்றாலும் முதலாளியிடம் நேருக்குநேர் சென்று சொல்லத் துணிவில்லை. இத்தகைய துணிவு எந்தச் சிப்பந்திக்கு இந்த உலகத்தில் ஏற்பட்டிருக்கிறது?

முதலாளிக்கும் தன் மைத்துனன் தூங்குமூஞ்சி, [illegible] என்பது புரியாமல் இல்லை. அவர் மைத்துனனுக்கு ஏது சொன்னாலும் எருமை மாட்டு மீது மழை பெய்த கதைதான். அதோடு அதிகம் சொல்லவும் அவரால் முடியவில்லை. வீட்டுக்காரியின் சொல்லைப்பற்றி இலக்காகிக் குடும்பத்தில் ரகளையை உண்டுபண்ணிக் கொள்ள அவர் விரும்பவில்லை.

சிப்பந்திகள் பேசிக் கொண்டது போல் நாளுக்கு நாள் வியாபாரம் படுத்து வருவதும் அவருக்குக் கவலையை உண்டாக்காமலில்லை. வியாபாரத்தை நிமிர்த்த என்ன செய்வது? நிமிர்த்தத்தான் அவருக்கு வழியொன்றும் விளங்கவில்லை.

ஒரு நாள் தமது மைத்துனனை அழைத்தார். அழகான உடைகளைக் கொடுத்தார். “இதை அணிந்துகொண்டு நம் கடையில் [illegible] படுத்துக் கொள். நன்றாகத் தூங்கு. நம் வியாபாரமும் நன்றாகத் தூங்கட்டும். அப்புறம் நீயும் நானும் நிம்மதியாக வாழலாம்!” என்று மனம் குமுறிச் சொன்னார். ஆனால் தம் குமுறலை வெளிக் காட்டிக் கொள்ள அவருக்குத் துணிவுதான் உண்டாகவில்லை.

அவனும் அவர் வார்த்தைகளை அப்படியே வேத வாக்காக எடுத்துக் கொண்டு கடைக்குப் போனான். அதிகாரம் தூள் பறக்கச் சிப்பந்திகளை விரட்டி ஒரு கட்டிலைக் கொண்டு வந்து போடச் சொல்லிப் படுத்துவிட்டான்.

அடுத்த சில கணங்களுக்கெல்லாம் அவன் கன ஜோராகக் குறட்டை விட்டுத் தூங்கலானான்.

கடைச் சிப்பந்தி ஒருவனுக்கு அதைக் கண்ணுற்றதும் அபார யோசனை ஒன்று தோன்றியது. கரும் பலகையை எடுத்துக் கடகடவென்று சாக்குக் கட்டியை எடுத்து ஏதோ எழுதினான். கடை வாசலில் கொண்டு போய் வைத்தான்.

அலுவலகம் காரியாலயம் விட்டுப் போகும் நேரம். கடை வாசலில் போர்டைப் பார்த்ததும் ஒவ்வொருவராகக் கடைக்குள் நுழையலாயினர். சிறிது நேரத்துக்கெல்லாம் எள் போட்டால் எண்ணெய் ஆகும் அளவுக்குக் கூட்டம் கூடிவிட்டது.

முதலாளி வந்தார். அவருக்கும் உள்ளே நுழைய இடம் கிடைக்கவில்லை. அப்படியே பிரமித்து நின்றார். இத்தனை கூட்டம் நம் கடையில் எப்படிக் கூடிற்று? புதிராக இருந்தது அவருக்கு.

ஒருவாறு வியாபாரம் முடிந்து கடை கட்டும்பொழுது இரவு பதினொரு மணியாகிவிட்டது. தமது சிப்பந்தியிடம், “இன்று வியாபாரம் என்ன ஏகமாக நடக்கத் தொடங்கிவிட்டது?” என்று கேட்டார்.

சிப்பந்தி அவரைக் கடை வாயிலுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்த பலகையைக் காட்டினான்.

“உங்களுக்குச் சரியாகத் தூக்கம் வரவில்லையா? எங்களிடமுள்ள துணிகளும் உடைகளை வாங்கிப் பாருங்கள். கன ஜோராகத் தூக்கம் வரும். எங்கள் சொல்லில் நம்பிக்கை ஏற்படவில்லையானால் உள்ளே வந்து பாருங்கள். பல ஆண்டுகளாகத் தூங்கியறியாத நண்பர் இவ்வுடையை அணிந்து குறட்டை விட்டுத் தூங்குவதைக் காண்பீர்கள்!” என்று அப்பலகையில் எழுதப்பட்டிருந்தது.

கடைக்குள்ளே நோக்கினார். மைத்துனனின் குறட்டை ஒலி கன ஜோராக வந்து கொண்டிருந்தது! படுத்த வியாபாரம் மறுபடியும் தலைதூக்கியதன் ரகசியம் இப்போது விளங்குகிறதல்லவா!



நம்பிக்கைக்குப் பாத்திரமான 'டெட்டால்'



கோடைக் கட்டிகளைத் தடுக்க உதவும்

வியர்வையே மென்மையான சருமத்தின் பரம விரோதி. அது வேர்க்குருவை உண்டாக்கி, அரிப்பையும் எரிச்சலையும் கொடுக்கும். சொறிவதன் மூலம் நன்மை இல்லை, தீமையே விளையும். ஆதலால், உலகிலேயே மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான கிருமிநாசினி 'டெட்டால்' கலந்த நீர் கொண்டு அதனைக் கழுவி, அரிப்பையும் எரிச்சலையும் தணியுங்கள். நீங்கள் குளிக்கும் நீரில் 'டெட்டால்' கலந்திருந்தால் வேர்க்குருவை ஆற்றுவதுடன் அது பரவுவதையோ அல்லது கோடைக் கட்டிகளாக மாறுவதையோ தடுக்க உதவும். உங்கள் சருமத்தில் வேர்க்குரு கண்டிருந்தால் அதனைக் குணப்படுத்தத் தவறாத கிருமிநாசினி 'டெட்டாலே'.



'டெட்டாலை' குளிக்கும் நீருடன் கலந்து உபயோகித்தால் நறுமணத்துடன் உற்சாகத்தையும் கொடுக்கும். தொண்டைப் புண்களைத் தடுப்பதற்கு 'டெட்டால்' கலந்த நீர் கொப்பளிக்க உதவும். தரைகளைக் கழுவும் போதோ அல்லது துடைக்கையிலோ நீரில் 'டெட்டாலை' கலந்து, உபயோகியுங்கள்.

DL 11

அட்லாண்டிக் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

தந்தி வந்தது!



கே. அகிலா

கஜபதியும் நாராயணனும் பொழுது போகாமல் சீட்டு ஆடிக் கொண்டிருந்தனர். கஜபதி மட்டும் ஆட்டத்தின் நடு நடுவே 'தன் மனைவிக்கு நல்லபடியாகப் பிரசவம் ஆகுமா ஆகாதா?' என்று கேட்டுப் பிராணனை வாங்கிவிட்டான். நாராயணனுக்குக் கஜபதியின் குணம் தெரியும். அவன் ஒரு சந்தேகப் பேர்வழி. தானே ஒன்றுக்கொன்று நினைத்து உடம்பை அலட்டிக் கொள்வான். அவ்வப்போது அவன் கலக்கத்தைத் தீர்த்து வைப்பதற்குள் நாராயணன் செத்துப் பிழைத்து விடுவான். இப்பொழுதோ அவன் மனைவி வேறு பிரசவத்துக்குப் போயிருக்கிறாள். இவனுடைய சஞ்சல மனம் விசுவரூபம் எடுத்ததில் என்ன விந்தை?

"சார்....தந்தி!"

படீரென்று சீட்டைக் கீழே எறிந்து விட்டு நாற்காலியை நண்பன் மீது போதாத குறையாய்த் தள்ளி விட்டு எழுந்த கஜபதி கையொப்பம் இட்டுத் தந்தியை வாங்கிப் பிரித்தான்.

"டேய், நாணு, நான் 'அப்பா' ஆகிவிட்டேண்டா! பையன் பிறந்திருக்கிறான்!" ஓர் எம்பு எம்பிக் குதித்தவன் நாராயணனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஆட ஆரம்பித்து விட்டான்.

தலையைச் சொறிந்துகொண்டு அசடு வழிய நின்ற தந்திச் சேவகனுக்கு நாராயணன் தண்டம் அழ வேண்டியிருந்தது.

"அப்பாடா! இனிமேலாவது மனைவி ஜெபம் பண்ணாமல் சீட்டைப் பார்த்து ஆடுவாயா?" என்று கேலியாகக் கேட்டவனுக்கு, பதிலாக ஒரு புன்சிரிப்பை வீசிய கஜபதி 'ஹாய்யாக'க் கட்டிலில் சாய்ந்துவிட்டான். இனிமேல் ஆடினாற்போலத்தான் என்பதை அறிந்த நாராயணன் சீட்டுக் கடையைக் கட்டினான்.

நேரம் ஆமை வேகத்தில் நகர்ந்தது.

"சார் தந்தி!"

அலறித் துடித்துக்கொண்டு பாதி மயக்கத்திலிருந்து எழுந்தான் கஜபதி. தந்தியைப் பிரிக்கு முன்பே கைகள் ஆர்மோனியம் வாசித்தன. முகம் பிரேதம் போல் வெளுத்துவிட்டது. உறையைக்கூடக் கிழிக்காமல் வெறித்த நோக்குடன் ஆணி அடித்தாற்போல் நின்று விட்டான்.

"டேய், கஜபதி! என்டா இப்படி இடிந்து போய்விட்டாய்? இப்ப என்ன நடந்துவிட்டது? பிரித்துத்தான் படியேன்" என்று உலுக்கினான் நாராயணன்.

கஜபதி பதிலேதும் சொல்லவில்லை. மாறாக அவன் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் தான் பதிலளித்தது.

"போடா இடியட், எதற்காக இப்ப அழுகை? முதலில் உடல்நிலை சரியாக இல்லாமல் இருந்து கொடுத்த தந்தி சற்றுத் தாமதமாக வந்திருக்கும்.. என்னவென்று பிரிக்காமலேயே ஏன் ஒருவன் கவலைப்படுவான்? நல்ல நியூஸ் தான் முன்னாடியே வந்துவிட்டதே? ஐயோ, ஐயோ! நீ பெண்ணாகப் பிறந்திருக்க வேண்டுமடா!"

நாராயணனின் சமாதானப் பேச்சைக் கஜபதி சட்டை செய்யவில்லை. தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான். பிரிக்கப்படாத தந்தியோ கீழே அநாதையாகக் கிடந்தது. "சே! சுத்த மோசமானவன்" என்று கோபத்துடன் அலுத்துக் கொண்ட நண்பன் உறையைக் கிழித்தான். அவனுக்கென்ன தெரியும் கஜபதியின் வேதனைக்குக் காரணம்?

"இனிமேல் எனக்கு என் ரஜனி கிடையாது. அவள் தான் சொன்னது போலவே என்னைத் தவிக்க விட்டு விட்டுப் போய்விட்டாளே? என்ன நெஞ்சழுத்தம்? அவளுக்கு மட்டும் தான் சாவதற்கு உரிமை உண்டா? இனிமேல் அவளில்லாமல் நான் மட்டும் தனிப் பிணமாக உலவ வேண்டுமா? பாவி! இப்படி என்னை நரகத்தில் ஆழ்த்தவா அன்று பூடகமாகப் பேசினாள்? ஐயோ! அறியாமல் போனேனே? நானும் கூட வந்திருப்பேனே?" என்று கதறிய அவன் மனம் ஆறு மாதத்துக்கு முன் நடந்த சம்பவத்தைச் சுற்றி ஓடியது.

இரவுச் சாப்பாடு ஆனதும் சற்று வந்து படுத்திருந்த கணவன் அருகில் வந்து அமர்ந்துகொண்டாள் ரஜனி.

"என்ன உங்களைத்தானே, தூக்கம் பலமோ?" அவன் கிராப்புத் தலையைக் கோதியபடி மெதுவாகக் கேட்டாள் ரஜனி. கஜபதி அசையவேயில்லை.

"பொய்த் தூக்கம்! நிஜமாகத் தூங்குபவர்களுக்குக் கால் ஆடாதே" என்று கூறிக்கொண்டே உள்ளங்காலில் கிச்சுக் கிச்சு மூட்டினாள்.

வெற்றிலையினால் செக்கச் சிவந்த உதடுகள், வேலை செய்த சோர்வினால் வாடிய முகம், இவை எல்லாவற்றையும் விட தாய்மையின் தலைவாயிலை மிதித்திருந்த பூரிப்பு அழகுடன் அலங்கும் மனைவியைக் கண் கொட்டாமல் பார்த்து ரசித்தான் கஜபதி.

"என்ன இது? பார்க்கும் பார்வையில் அப்படியே ஆளை விழுங்கி விடுவீர்

கள் போலிருக்கிறதே?'' என்று வெட்கத்துடன் கேட்டாள் ரஜனி.

''உன்னை அப்படியே விழுங்க ஆசைதான்! ஆனால் அப்புறம் எனக்கு என் ரஜனி இருக்க மாட்டாளே?''

''ஆஹா தெரியாதா உங்கள் ஆசை எல்லாம்! நான் செத்துவிட்டால் உடனே வேறொருத்தி மீது ஆசை பொங்கி வழியும்! சர்க்கரையாய்ப் பேசுவதில் சமர்த்தர்!''

''சே, சே! என்னை அவ்வளவு கயவனாகவா நினைக்கிறாய்? சீ...சீ... செத்தாலும்.... சரி சரி எதற்கு இந்த அநாவசியப் பேச்சு? சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்காமல்?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டு மனைவியின் கைகளை அன்புடன் தடவிக் கொடுத்தான் கஜபதி. அந்த அன்பில் மயங்கினாள் ரஜனி.


''போதுண்டா. ஒப்பாரியை நிறுத்தித் தொலை! மறுபடியும் உன் புத்திர சந்தானத்தின் ஜனன விவரத் தந்தி தான் இது! அதற்குள் இப்படிப் பயந்து விட்டாயே?'' என்று நாராயணன் கூறியதும் திகைத்துவிட்டான் கஜபதி.

''எதற்காக இப்படி இரு தந்திகள் கொடுத்து உயிரை எடுத்தார்கள்?''

''கஜபதி! நீ புது வீடு மாற்றியது உன் மாமனருக்கு மறந்துவிட்டது போலிருக்கிறது. ஒரு வாரம்தானே ஆகிறது? அவசரத்தில் பழைய அட்ரஸுக்கு முதலில் கொடுத்துவிட்டார். பிறகுதான் நீ புது வீடு மாற்றியது ஞாபகம் வந்திருக்கும். மறுபடியும் புது அட்ரஸுக்கு ஒன்று கொடுத்துவிட்டார். பழைய அட்ரஸில் நீ இல்லாததால் எங்கெங்கெல்லாமோ அலைந்து இப்பொழுது வந்திருக்கிறது முதல் தந்தி.''

கஜபதி தன் பைத்தியக்கார எண்ணங்களை எண்ணிக் குபீரென்று சிரித்தான்.

''சிரித்து மழுப்பவா பார்க்கிறாய்? ஸ்வீட் வாங்கிக் கொடுடா'' என்று கூறியபடியே அவனை ஓட்டலுக்கு இழுத்துக்கொண்டு போனான் நாராயணன்.



அன்று ரயிலில் ஏகக் கூட்டம். எள் போட்டால் எள் விழ இடமில்லை.

காலில் பெருங் கட்டுடன் நொண்டிக் கொண்டே ஒருவர் போர்ட்டர் பின்தொடர வந்து சேர்ந்தார். அவர் பெட்டியை நெருங்கியதுமே அனைவரும் கோரஸ் குரலில், ''ஸார்! இடமில்லை. வேறு பெட்டிக்குப் போங்கள்!'' என்று கூவினர்.

''ஸார்! காலில் பெரிய பிராக்சர்! என்னால் பல பெட்டிகளைத் தேடியலைய முடியாது. தயவு செய்து எனக்கு இடம் கொடுங்க!'' என்று கெஞ்சினார் கால் கட்டுக்காரர். இந்தக் கெஞ்சல் பலித்துவிடும் என்ற எண்ணத்தில் போர்ட்டர் சாமான்களைப் பெட்டிக்குள் தள்ளிவிட்டான்.

''ஸார்! இப்படிக் காலிலே பட்டவங்க பஸ்ட் கிளாஸில்தான் போகணும். இதிலே ஏறினால் சிரமம்'' என்றார் வயதான ஒருவர்.

''ஸார்! அதுக்குக் காசு இருந்தால் உங்களை வந்து இப்படிக் கெஞ்சுவேனா?'' என்றார் கால் கட்டுக்காரர் பரிதாபமாக.

''சரி! ஒழிந்து போகட்டும். அவரை உள்ளே அனுப்பி வையுங்கள். இருக்கிறதில் கொஞ்சம் இடத்திலிருந்துவிட்டுப் போகிறார்!'' என்று அவருக்கு ஒருவர் வக்காலத்து வாங்கினார்.

இதற்குள் கார்டு விசிலே ஊதிவிடவே அந்தப் பெட்டியைச் சேர்ந்தவர்கள் அவரை மெதுவாக உள்ளே இழுத்துக் கொண்டார்கள். காலைப் பிடித்துக் கொண்டே இனைறும் கால் கட்டுக்காரருக்கு ஒரு மூலையில் உட்கார இடத்தைக் கொடுத்தனர்.

''ஐயோ! கால் கால்! யாரோ மிதித்து விட்டார்களே!'' என்று பயங்கரமாக அலறினார் கால் கட்டுக்காரர்.

அடுத்த கணம் சிலர் அவருக்கு ஒத்தாசை செய்ய முன் வந்தனர். அவர் வலி தாங்காமல் கண்ணை மூடிக்கொண்டு மூர்ச்சையாகி விட்டார். உடனே வயதான மனிதர், ''ஸார்! ரொம்பப் பலமாகப் பட்டுவிட்டது. அந்தப் பலகையை ஒழித்துக் கொடுங்கள். அவரைப் படுக்கப்போட்டுத் தண்ணீரைத் தெளித்து மூர்ச்சை தெளிவிக்கலாம்!'' என்று கூறினார்.

உடனே பலகையில் அவரைப் படுக்க வைத்து ஆசார உபசாரம் செய்தனர். வெகு நேரம் கழித்துக் கண் விழித்த கால் கட்டுக் காரருக்குக் காப்பியும் சோடாவும் போட்டி போட்டு வாங்கிக் கொடுத்தனர்.

சிதம்பரம் ஸ்டேஷனை வண்டி அடைந்ததும் அவரை எழுப்பினர். வண்டியில் உள்ளவர்களே சாமான்களை இறக்கி வைத்தனர். கால் கட்டுக்காரர் ரயிலை விட்டு இறங்கினார். கூட்டம் நெருக்கியபடியால் அவர் காலிலிருந்த பிளாஸ்டர் கட்டு நழுவி விழுந்தது. அதை அவர் பொருட்படுத்தாமல் ஜோராக நடந்து சென்றார்.

'அட, பாவி! நம்மை ஏமாற்றிவிட்டுச் சுகப் பிரயாணம் செய்து விட்டானே?' என்று பிரயாணிகள் அங்கலாய்த்தனர். —சாமா



காந்தரால்
சுகந்த காந்தரைடின் கூந்தல் வளரும் தைலம்
கல்கெமிகோவின்
காந்தராலில் சுத்தமான
ஆலிவ் எண்ணெய்
கலந்திருக்கிறது
அதனால்
கூந்தலின்
வளர்ச்சிக்கு
பல வகையிலும்
அனுகூலமாகிறது
Kanthorol
KALIDAS
தி கல்கத்தா கெமிகல் கோ. லிட்.
தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1




சமைக்கும்போதே இளைப்பாறலாம்
இந்த அற்புத மண்ணெண்ணெ அடுப்பு கண்டு பிடிக்கும் வரையில் சமையல் என்றாலே மிகக் கஷ்டமான காரியம் என்று கருதப்பட்டு வந்தது. இப்பொழுது நீங்கள் சமைக்கும்போதே இளைப்பாறலாம். கரி உடைக்கும் கஷ்டமோ அடுப்பூதும் சிரமமோ, கண்ணில் புகை மண்டுதலோ இல்லை. சமையலறையில் புகைக்கரி பிடிக்காது. இந்த அடுப்பு துப்புரவானது, எளிதானது, எளிமையானது.
PATENT NO.
காஸ் ஜனதா
மண்ணெண்ணெ அடுப்பு
சுவையான சமையல்
சுலபமான சமையல்
தயாரிப்பாளர்கள்:
தி ஓரியண்டல் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
77, பௌபஜார் தெரு, கல்கத்தா - 12

ரோஜாவின்

நறுமணம் ...

ஒரு பவுண்டு ரோஜா எண்ணெய் தயாரிப்பதற்கு ஏறக்குறைய 4000 பவுண்டு ரோஜாக்கள் வேண்டி யிருக்கிறது. ஆனுல் கோத்ரெஜ் ந. 1 லிருந்து ரோஜாக்களின் ஆனந்தமயமான நறுமணத்தை நீங்கள் பெறலாம். ரோஜாவின் இனிய நறுமணம் பெரிய-சைஸ் ந. 1ல் மிகச்சிறந்த பாணியில் சேர்க்கப்பட்டு இயந்திரத்திருல் உரையிடப்பட்டுள்ளது

புதிய ஆராய்ச்சிகள், நூதன முறைகள், நவீன இயந்திரங்கள், பல ஆண்டுகளில் ஏற்பட்ட சிறந்த தொழில் நுட்ப அறிவு இவைகளெல்லாம், கோத்ரெஜின் மற்ற சோப்புகளுடன், இந்த முதல் தாவர எண்ணெய் ஸ்நான சோப்பின் தொன்று தொட்டு ஏற்பட்ட சுத்தம் செய்யும் தன்மையையும், உடம்புக்கு இதமளிக்கும் குணங்களையும் இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கின்றன.



கோத்ரெஜ்

ந. 1 ஸ்நான சோப்

பெரிய-சைஸ்

சிறந்தது, சுபதசியும் கூட



கோத்ரெஜ் சோப்புகளில் புகழ்பெற்ற பெயர்

9. தலைசுற்றல் மயக்கம் (கண்ணினால்



எட்டு வயதுப் பெண். சோடா புட்டியின் அடி போன்ற மூக்குக் கண்ணாடியை அணிந்திருப்பவள். தனது எண்பது வயதான கொள்ளுப் பாட்டியிடம் சென்று, ''பாட்டி! இந்த நூலை ஊசியில் கோத்துக் கொடு'' என்று கேட்பதாக ஒரு ஹாஸ்ய சித்திரத்தை என்றைக்கோ எங்கோ பார்த்ததாக ஒரு நினைவு. இந்த வயதில் இப்படியானால் போகப் போக......

நாற்பது வயதை எட்டும்போது சில மாற்றங்கள் சரீரத்தில் இயற்கையாகவே உண்டாகின்றன. கன்னத்தை அடுத்தும் காதுகளைத் தொட்டுயிருக்கும் முடிகளில் சில நரைக்கத் தொடங்கும். அந்த வயதில் ஏற்படும் இயற்கையான மாறுதல்களில் ஒன்று ''சாளேச்வரம்'' என்றும் ''சாளேகரம்'' என்றும் சொல்லும் கண்ணைச் சம்பந்தித்த மாற்றமாகும். கண்கள் நன்றாகத் தெரியும்; ஆனால் தெரியக்கூடாத வகையில் தெரியும். அதாவது ஒரு பொருள் அது இருக்குமிடத்துக்குச் சற்றுத் தள்ளி (எட்டி) இருப்பது போலவோ — அல்லது சற்று அருகிலிருப்பது போலவோ தெரியும். அவ்விதமே ஒரு பொருள் அது இருக்குமிடத்துக்குச் சற்றுக் கீழாக இருப்பது போலவோ அல்லது உயரத்திலிருப்பது போலவோ தெரியும். இப்படி ஒரு மாற்றம் தனது திருஷ்டிக்கு வந்திருக்கிறதென்பதை ஒரு நபர் அறிய மாட்டார். ஏதாவது ஒரு குறிப்பிட்ட சம்பவம் நேரிடும் போதுதான் அதை அவரே அறிய நேரும்.

ஊரிலிருந்து வந்த கடிதம் அல்லது ஒரு செய்தித் தாள் இதைப் படிக்கும்போது தனது கை எவ்வளவு நீளுமோ அவ்வளவும் நீட்டிக் கடிதத்தைத் தொலைவில் பிடித்துக் கொண்டு தலையையும் கூடுமானவரை பின்னுக்குத் தள்ளி நிமிர்ந்து கண்களையும் சிறிது இடுக்கியபடி படிக்க முயலுவார். இந்தத் திருக்கோலத்தைப் பார்ப்பவர்....

''என்னடா பழி! அவ்வளவு தூரத்தில் வைத்துப் பார்க்கிறாய்? அருகிலிருப்பதை உன் கண் காணாதாக்கும்! தூரதிருஷ்டியா?'' என்று கேலி செய்வார்.

''அட! தூரதிருஷ்டி இல்லையடா! தீர்க்க திருஷ்டி. நான் தீர்க்கதிருஷ்டியாகி விட்டேன். போதுமா?'' என்று சொல்லிச் சமாளிப்பது ஒரு போக்கு. இந்நிலையிலும் தனது கண்ணில் வயதின் காரணமாக இம் மாற்றம் வந்துள்ளது என்பதை அக்கறையுடன் கவனிக்க நேரிடாது.




குமாயடியில் குளித்த பிறகு, சற்றுத் தொலைவில் உள்ள கொடியில் காயப் போட்டிருக்கும் துண்டை எடுக்கச் செல்லுவார். கொடி இன்னும் கொஞ்சம் தொலைவில் இருப்பதாகவும், சற்று உயரத்திலிருப்பதாகவும் இவருடைய சாளேகரக் கண்ணுக்குத் தெரியும். இந்தத் தோற்றத்தை நம்பிச் செல்பவர் கழுத்தில் கொடிக் கயிறு தட்ட, தடுக்க—''அட!'' என்று சிறிது பின்னுக்கு உந்தப்பட்டவராய் நிற்பார். நிலத்தில் மல்லாந்தபடி விழாமல் எப்படியோ சமாளிப்பார். இவ்வித அனுபவம் பலருக்கும் ஏற்பட்டுள்ள ஒரு சாதாரண சம்பவம். இந்த அனுபவம் ஏற்பட்ட பிறகுதான் தமது கண்ணில் இவ்வித மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பற்றி அக்கறையுடன் சிந்திப்பார். இவருக்கு இப்படியாகக் கண் பார்வை இருப்பதால் ஒரு முறை குனிந்து நிமிர்ந்தால் போதும். தலை 'கிர்ர்ர்' என்று சுற்றும். அல்லது சற்று நேரம் கண்ணே தெள்ளெனத் தெரியாதபடி எல்லாம் சுற்றும், — சுழலும். அப்போது எல்லாம் இரண்டிரண்டாகத் தெரியும். அப்போது குபீலென்று உடம்பெல்லாம் வியர்க்கும். மார்பு தடதடவென்று அடிக்கும். அவ்வளவுதான் ''பிளட் ப்ரஷர்'' போல இருக்கு என்று அவரே தீர்மானித்துவிடுவார். பிறகு சொல்லவேணுமா? இந்த ப்ளட் ப்ரஷர் ஒன்று; 'ஹார்ட் டிஸீஸ்' என்று பொதுப் பெயரிட்டழைக்கும் இருதய நோய் மற்றொன்று. இவை இரண்டுமுள்ளவருக்கு ஒரு விசேஷ குணம். நோய் இன்னதென்று தெரியாமல் பல வருஷங்கள் எப்படியோ பொறுத்துக் கொண்டு நாளைக் கடத்திவிடுவார்கள். ஆனால் இன்ன நோய் என்று தெரிந்தால் போதும். பிறகு சொல்லவே வேண்டாம். இருசென்று பல வருஷங்கள் நோய்வாய்ப்பட்டவர் போல் தோற்றம், பலவீனம் இன்னும் என்னவெல்லாமோ ஏற்படும். அதனால்தான் தலை சுற்றல் மயக்கம் என்றவுடன் ஏதோ விபரீதமான குணப்படுத்த முடியாத நோய் வந்துவிட்டதென்ற எண்ணம் ஏற்படக் கூடாதென்பதற்காகத்தான் இவ்வளவு எழுதுவது. ஆகவே மேற்சொன்ன விதம் கண்ணினால் ஏற்பட்ட கோளாறால் கவலைப்படுவானேன்? வயதாகிறது; அதனால் இது ஏற்படுவது இயற்கை; கண்ணுக்குச் சிகிச்சை பெற்றால் சரியாகிவிடும் என்ற திட நம்பிக்கை பிறக்க வேண்டும்.

''அபத்யம் லவணம் ப்ராய: சக்ஷுஷோ அன்யத்ர ஸைந்தவாத்'' என்று சாஸ்திரம் சொல்கிறது. உப்பு என்பது பொதுவாகவே கண்ணுக்கு ஹிதமல்லாதது. இதற்கு இந்துப்பு மட்டும் விதிவிலக்கு. இதை எல்லாக் காலத்திலும் எல்லா வயதினரும் மனத்தில் கொள்ள வேண்டும். சாதாரண நாளிலேயே ஒரு கல் உப்பு குறைவாகச் சாப்பிடுவது கண்ணுக்கு நல்லது. அதிலும் மேற்சொன்ன விதம் கண்ணில் மாற்றம் ஏற்பட்டவருக்கு இது மிகவும் முக்கியம். இதை

ஒரு திட்டமாகவே ஏற்கவேண்டும். அடியோடு உப்பே வேண்டாம் என்று சொல்லவில்லை. ஓரளவு குறைப்பது நல்லது.

''த்ரிபலாம் மதுஸர்ப்பிப்யாம் நிசி நேத்ர பலாய ச'' என்ற மற்றொரு நல்ல விஷயமும் நினைவில் இருப்பது அவசியம்.



அதாவது கண்ணுக்குப் பலத்தை — செயல் புரியும் திறனை — கொடுக்க வல்லது திரிபலா சூர்ணத்தில் ஒன்றிரண்டு சிட்டிகைகளை, எடுத்து ஒரு சொட்டுத் தேனும் ஒரு டீஸ்பூன் நெய்யும் விட்டுக் குழைத்து இரவு படுக்கும் முன் சாப்பிட்டுப் படுப்பது. மேற்சொன்னவிதம் கண்ணுக்கென்று ஏற்பட்ட ஒரு டானிக். இதையும்செய்து வருவது நல்லது.

ஆகாராதிகளுடன் கூடுமான அளவு நெய்யைச் சேர்த்து வருவது கண்களை நன்முறையில் காப்பாற்றிக் கொள்ள உதவி புரியும்.

முறை தவறாமல் — கூடுமானால் பிரதினமும் எண்ணெய்க் குளி செய்து வருவது நல்லது. வைத்தியரைக் கேட்டு முக்கியமாக ஏற்கக்கூடிய தைலத்தைத் தெரிந்து உபயோகிக்கலாம். அல்லது பிருங்காமலக தைலத்தைத் தினசரி தலைக்குத் தடவி உச்சியிட்டு சுதி — முடிசீவிக் கொள்ளவும், எண்ணெய்க் குளி நாளில் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யவும் உபயோகித்து வருவது நல்லது.

இவற்றையெல்லாம் வருமுன் காக்கும் முறைகளாகவும், வருங்கால் காக்கும் முறைகளாகவும், வந்த பின் காக்கும் முறைகளாகவும் ஏற்கலாம். இவையன்றி, மேற்சொன்ன வகையான கண்ணைப் பற்றிய கோளாறுகள் தென்பட்டதும் முதல் காரியமாக ஒரு நல்ல கண் டாக்டரிடம் சென்று கண்ணைப் பரிசோதிக்கச் செய்து தக்கதொரு கண்ணாடியை வாங்கி உபயோகிக்கத் தொடங்கினால் இவ்வித தலைசுற்றல் மயக்கங்களின் சிகிச்சை பூர்த்தி பெற்றதாகும்.

அவ்வாறே சிலருக்குக் ''கிருக்கட்டி'' என்னும் கண்கட்டி ஏற்படுவதுண்டு. இது இமைகளின் ஓரத்தில் வரும். சாதாரணமாக வேர்க்குரு கட்டி போல் ஒரு மிளகு அளவு பெருக்கும். வெளிப்புறத்தில் இந்தக் கட்டியின் முகமோ, முனையோ உடையும் அறிகுறியோ இராது. இமையின் உட்புறத்தில்தான் இது உடையும் இயல்பு பெற்றதாகத் தோன்றும். சிலர் இதை உஷ்ணத்தினால் வெடிப்பது என்பர். செம்மரத்தைச் சில துளி ஜலம் விட்டுச் சந்தனக் கல்லில் உரசி விழுதாக எடுத்து இந்தக் ''கிருக்கட்டி''யின் (கண்ணின்) வெளிப்புறத்தில் பற்றுப் போலிட்டால் கரைந்து விடுமென்பர். வேறு சிலர் பாலாடை (சல்லு) அவ்விதமே உரசிப் பற்றிட வேணுமென்பர். ஒன்று போனால் ஒன்றாக இக் கண்கட்டிகள் வெடிக்குமானால் அவற்றுக்கு முடிவு எப்பொழுது? சில சமயங்களில் இரண்டு மூன்று கட்டிகள் ஏக காலத்தில் இருக்கும். இரண்டு கண்களிலும் கூட இருக்கும். இதற்குக் கூடச் செய்ய வேண்டியது மேற்சொன்ன விதம் கண்ணாடி அணிவதுதான். கண்ணாடியே உபயோகிக்காதவரானால் ஒரு கண்ணாடி அணிய வேண்டும். ஏற்கனவே கண்ணாடி அணிபவரானால் அதை மாற்ற வேண்டிய சந்தர்ப்பம் வந்துள்ளது என்று அறிய வேண்டும். உடனடியாக எப்படியும் கண் டாக்டரிடம் செல்ல வேண்டியது அவசியம். அவர்கள் கண்ணாடி தேவையில்லை என்பாரானால் பிறகு தலைக்குத் தைலம் முதலான எதை வேணுமானாலும் செய்யலாம். எப்படியானாலும் திரிபலா சூர்ணத்தை இரவு படுக்கு முன்பு சாப்பிடச் சொன்ன விதத்தில் உபயோகிப்பது மிகவும் விரும்பத் தக்கது.



''என்னங்காணும்! ஸ்ரீஹரி! நீங்களேவா இப்படிச் சொல்கிறீர்கள்?'' என்கிறீர்களா?

நல்லதை ஏற்று நோயாளி குணமடைவதற்கு வழிதானதைச் சொல்வதில் சங்கோசம் எதற்கு? நாட்டு வைத்திய முறைகளில் பிணியைப் போக்க எளிதான, சிறப்பான அநுபவசித்தமான உபாயங்களை எடுத்துச் சொல்வது போல் மேல் நாட்டு வைத்தியத்திலுள்ள சிறப்பான அநுபவ சித்தமான உபாயங்களையும் ஏற்றுத்தானாக வேண்டும் என்பது எனது சித்தாந்தம். எதைச் செய்தால் இந்த நோயாளியின் பிணி தீருமென்பது ஒன்றுதான் எனது இலக்கு. அதை வாசகர்களுக்குச் சொல்வதில் வெட்கமோ, விருப்பு, வெறுப்போ எனக்குக் கிடையாது. மனச் சாட்சியுள்ளவனுக்கு இருக்கவும் கூடாது. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதுதான் செயற்பாலது என்று தமிழில்தான் தமிழன் ஒருவன் சொன்னான். ஆகவே நாட்டு வைத்தியத்தில் இன்று பழக்கத்தில் இல்லாத துறையில் மேல் நாட்டு வைத்தியத்தின் முறைகளை ஏற்பதுதான் அறிவாளி செய்யத்தக்கது. ஆகவேதான் அறுவைச் சிகிச்சை தவிர்க்க முடியாத நிலையில் அதையே திறமைசாலிகளின் உதவி கொண்டு செய்துகொள்ளுமாறு எத்தனையோ முறை வாசகர்களுக்குத் தெரிவித்துள்ளேன். — உதாரணமாக மூல வியாதி, ஆந்திர விருத்தி என்னும் குடல் வாயு முதலியவை — அவ்வித அறுவைச் சிகிச்சையினால் ஆபத்துண்டு. ஆகவே அது தேவையில்லை. வேண்டாம் என்றவிடங்களில் — உதாரணமாக களகண்டி என்னும் டான்ஸிலின் அழற்சி, பரிணாம சூலை என்ற இரைப்பை—டுவாடினம் முதலிய இடங்களிலுள்ள விரணம் — அறுவைச் சிகிச்சையே வேண்டாம், அதைச் செய்யாதீர்கள், செய்து கொள்ளாதீர்கள் என்று வன்மையாக எச்சரித்தும் வந்துள்ளேன்.

ஆகவே, கண்ணாடியணிந்து, கண்ணின் தோஷத்தை உடனடியாகத் தீர்க்காமல் அபிமான புத்தியால் அதைத் தவிர்ப்பது அறுத்துப்போன நொண்டிக் குதிரையைச் சவுக்காலடித்து ஓடச் செய்வதற்கொப்பாகும். தவிர்க்கவும். ஆயினும்....


உலக மார்க் ஷண்முகம்
பட்டணம் பொடி
100
வருடங்களுக்கு மேல்
பிரக்யாதி பெற்றது.
ORIGINAL SHUNMUGAM SNUFF (ESTD.1839) Co.
POST BOX No. 140. MADRAS-1


tik-20
டிக்-20
மூட்டைப்பூச்சிகளைக்
கொல்லுகிறது
geigy
டாடா-பைஸன் தயாரிப்பு


பண்டிட்
டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
ஸ்திரீகள் ஆரோக்ய
சௌபாக்யத்திற்கு
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
சென்னை - 17

தாயார் தினம்

குழந்தை வைத்தியத் துறையில் பயிற்சி பெறுவதற்காகத் தமிழ் நாட்டிலிருந்து அமெரிக்கா வந்துள்ள ஒரு மாணவன் என்று என்னை அறிமுகப்படுத்திக் கொள்ளுகிறேன்.

அமெரிக்கர்களோடு பல துறையில் நெருங்கிப் பழகியதில் அவர்களுடைய சிறப்பியல்புகள் பலவற்றைக் கண்டறிய முடிந்தது. நம் நாட்டவருடைய கலாசாரப் பண்பாட்டைப் பற்றியும் குடும்பப் பாசத்தைப் பற்றியும் பல தடவைகளில் என்னிடம் என் அமெரிக்க நண்பர்கள் வியந்து பாராட்டி இருக்கிறார்கள். ஆனால் இந்தத் துறையில்கூட நாம் அமெரிக்கர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை பல உண்டு. அவற்றில் என் மனத்தைக் கவர்ந்த ஒரு விஷயம் இது.



ஒவ்வொரு வருடமும், மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையை அமெரிக்கர்கள் 'தாயார் தினம்' என்று கொண்டாடுகிறார்கள். அன்று ஒவ்வொரு வீட்டிலும் பண்டிகையின் குதூகலம் நிறைந்திருக்கிறது. வீட்டில் உள்ளவர்கள் தாயாரின் க்ஷேமத்துக்காக விசேஷப் பிரார்த்தனை செய்கிறார்கள்; அவளுக்குப் பரிசுகள் அளித்து மகிழ்கிறார்கள். அவளை அன்று ஒருவித வேலையும் செய்யாமல் பூர்ண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். அன்று ஒவ்வொருவரும் அன்னைக்குத் தன்னாலியன்ற ஓர் உதவியைச் செய்து மனத் திருப்தி அடைகிறார்கள்.

இந்தத் 'தாயார் தினம்' தொடங்கியதற்கு ஓர் அமெரிக்கப் பெண்மணியின் அன்பும் பரிவும் பாசமும்தான் காரணம். பிலடெல்பியா நகரில் வசித்து வந்த ஸ்ரீமதி அன்னா ஜார்விஸ் என்பவரின் அன்னை 1905ம் வருடம் இறந்து போனார்கள். தாயின் பிரிவால் துயருற்றிருந்த ஸ்ரீமதி அன்னா ஜார்விஸ் தம் அன்னையின் நினைவுக்காக என்ன செய்யலாம் என்று தீவிரமாகச் சிந்தனை செய்தார். 'நம்மைப் பெற்றெடுத்துப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த அன்னையைக் கௌரவிக்கும் முறையில் வருஷத்துக்கு ஒரு நாளை ஏன் ஒதுக்கி வைக்கக்கூடாது?' என்று எண்ணினார். இந்த எண்ணத்தைச் செயல்படுத்தப் பல நண்பர்களை நேரில் சந்தித்தும், கடிதங்கள் மூலம் தொடர்பு கொண்டும் முனைந்து ஈடுபட்டார். இந்தக் கருத்துக்கு ஆதரவு தந்தவர்கள் தாங்களும் இந்தப் பிரசாரத்தில் சிரத்தை கொண்டு பெரும்பாலான மக்களின் கவனத்தை இந்தத் திசையில் திருப்பினார்கள்.



முதலில் பென்சில்வேனியா, வர்ஜீனியா என்ற இரு மாகாணங்களில் ''தாயார் தினம்'' அடக்கமான முறையில் கொண்டாடப்பட்டது. மக்களின் ஆசாபாசங்களைப் புரிந்துகொண்டு அவற்றை நிறைவேற்றுவதில் என்றுமே ஆர்வம் காட்டும் அமெரிக்க அரசாங்கம், 1914-ம் ஆண்டில் அமெரிக்க நாடு முழுதுமே 'தாயார் தினம்' கொண்டாடுவதற்கான ஒரு சாஸனத்தை நிறைவேற்றியது. இந்தச் சாஸனத்தில் கையொப்பமிட்டவர் ஜனாதிபதி உட்ரோ வில்ஸன்.

அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை 'தாயார் தினம்' என்று அமெரிக்கா முழுவதும் கொண்டாடப்படுகிறது. அது மட்டுமல்ல; அமெரிக்காவைத் தவிர இன்னும் நாற்பது நாடுகளில் இப்போது 'தாயார் தினம்' சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது!

நாம் எதற்கெல்லாமோ 'தினம்' கொண்டாடுகிறோமே, பாலூட்டி வளர்த்த தாய்க்கு ஒரு தினம் கொண்டாடினால் என்ன?

28-3-63 பா. ஐ. ஆத்ரேயா
பிலடெல்பியா, யு.எஸ்.ஏ.

நேருஜியும் உறுதிமொழியும்

நேரு அவர்கள் 1959ம் ஆண்டு செப்டம்பர்த் திங்களில் பாராளுமன்றத்தில், தாய்மொழி இந்தியல்லாத மக்கள், தாங்கள் விரும்பும் காலம் வரை, ஆங்கிலமே ஆட்சிமொழியாகச் செயல்படும் என்று அரசின் சார்பில் உறுதி கூறினார். ஆனால் இப்பொழுது வெளிவந்துள்ள மசோதா கூறுவதென்ன? பத்து ஆண்டுகளுக்குப் பின், புனர் ஆலோசனை. இப்புனர் ஆலோசனையின் முடிவு என்ன ஆகும்? இந்தி ஏகாதிபத்தியம் தனிக் கொடுங்கோலோச்சும்.

நேரு அவர்களின் உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் மசோதா அமைவதானால் மட்டுமே அதைத் தமிழ் நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ள இயலும். இல்லையேல், தங்கள் ஆற்றல் உள்ள வரையில், தங்கள் நல்வாழ்வுக்கு உலை வைக்கும் இம்மசோதாவை எதிர்க்கத் தமிழ் மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

ஆறு ஆண்டுகள் நான் தில்லி மாநகரில் செயலாற்றிய காலத்தில், வடநாட்டுத் தலைவர்கள் தம்முள் மொழி விஷய விவகாரங்களில் மிக நேரிய வழியில் நடந்து கொண்டவர் நேரு அவர்கள் ஒருவரே ஆவார். அப்பெருமகனாரும் இந்தி பேசாத மக்களுக்குத் தாம் 'உறுதி மொழி' ஏதும் அளிக்கவில்லை என்றும் தமது 'அபிப்பிராயத்தை' மட்டுமே வெளியிட்டதாகவும் கூறி நம்மைக் கைவிடுவாரானால், அது நாட்டுக்கு நல்ல காலமில்லை என்று தான் வருத்தத்தோடு சொல்ல வேண்டும்.

மதுரை
4-4-63 எல். கிருஷ்ணசாமி பாரதி


THY-52-TAM
ஹமாம் - என் மனதுக்கிசைந்த ஒரே சோப்.
HAMĀM
the family soap
அதிகபடி புதுமலர்ச்சி அளிப்பது - ஹமாம் - குடும்பத்திற்கான சோப்.
டாடா தயாரிப்பு



துஷார் உபயோகித்துச் சமைத்த உணவின் ருசியைக் குழந்தைகள் நேசிக்கின்றன

துஷார் வனஸ்பதிக்கே ஒரு தனிச் சுவையுண்டு. குழந்தைகள் யாவருமே விரும்பிப் போற்றும் சுவை! அது மட்டுமா? துஷார் உபயோகித்துச் சமைத்த உணவு சத்து நிறைந்ததும் கூட. காரணம், விடமின்கள் ஏ. டி அடங்கியது துஷார். சுசிருசியான சமையலுக்கு துஷார் உபயோகியுங்கள்.

துஷார்

விடமின் செறிந்த வனஸ்பதி.
விடமின்கள் ஏ. டி அடங்கியது.

துங்கபத்திரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்நூல்

CMC கிரைப் மிக்சர்



குழந்தைகளின் சர்வ சாதாரண நோய்களான மந்தம், வயிற்று வலி, பல்வியாதிகளிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

காஸ்டோபீன் மானுபாக்சரிங் கம்பெனி
வொர்லி — பம்பாய் - 18

எக்ஸிமா சொறி

உங்கள் சருமத்தில் சுமார் 5 கோடி மெல்லிய துவாரங்களும் மடிப்புகளும் உள்ளன. கிருமிகள் அவைகளில் மறைந்திருந்து, தாங்கமுடியாத அரிப்பு, வெடிப்பு, மேலாகப் பரவும் படை, தோல் உரிதல், எரிச்சல், பருக்கள், படர்தாமரை காலில் அரிப்பு முதலிய உபாதைகளை உண்டுபண்ணுகின்றன. சாதாரண சிகிச்சைகள் தற்காலிகமான நிவாரணம் அளிக்கும். ஏனெனில், அதன் மூலம் உபாதைகளுக்கு மூலகாரணமான கிருமிகள் அழிவதில்லை. விஞ்ஞான முறையில் தயாரித்த இந்த மருந்து, நிக்ஸோடர்ம் (Nixoderm) துரிதமாக இந்தக் கிருமிகளைக் கொன்றுவிடுகிறது. மற்றும் உங்கள் சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் வசீகரமாகவும் இருக்கச் செய்கிறது. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடர்ம் (Nixoderm) வாங்குங்கள். சரும உபாதைகளின் மூலகாரணமான கிருமிகளை நிக்ஸோடர்ம் நிச்சயமாக அழிக்குமென்ற பூர்ண நம்பிக்கையுடன் வாங்குங்கள்.





மோகன்பாகன் முற்றுகை

குண்டுமணி — சாமா













ஹங்கேரியில் சிறுவர்களுக்குக் கால் பந்தாட்டமென்றால் உயிர். பழம் துணிகளைச் சுருட்டியும், கந்தை, ஸ்டாக்கிங்ஸ் துணிகளை உருட்டியும் கால் பந்தாக்கி விளையாடக் கிளம்பி விடுவார்கள். அவர்கள் காலில் அணிவதற்கு பூட்ஸ்கள் கிடையாது. இருந்தாலும் அவர்கள் ஆட்டம் வெகு உக்கிரமாக நடைபெறும். இந்தச் சிறுவர்களில் ஒருவன் நாளும் பொழுதும் கால் பந்தாட்டச் சிந்தனையிலேயே மூழ்கியிருந்தான். அவன் ஆட்டம் நாளுக்கு நாள் மெருகேறியது. இவனது ஆட்டத் திறமையைக் கண்ட மாமா ஒரு பெரிய கால் பந்தாட்டப் பந்தயத்துக்குத் தம் குழுவினரோடு இவனையும் அழைத்துச் சென்றார். ஸ்டேடியத்தின் வாசலில் அந்தச் சிறுவனை நிறுத்திவிட்டார்கள். அந்தப் பெரிய கால் பந்தாட்டக் குழுவில் இவனும் ஆட்டக்காரன் என்று அவர்களால் நினைக்க முடியுமா? பிறகு அந்தக் குழுவின் மானேஜர் வந்து, ''இந்தச் சிறுவன் எங்கள் விளையாட்டுக் குழுவைச் சேர்ந்தவன்தான்'' என்று கூறி அழைத்துச் சென்றார். அந்த வார்த்தையைக் காப்பாற்ற அந்தச் சிறுவனையே அன்றைய விளையாட்டில் கலந்து கொள்ளும்படி வைத்தார். அன்று அந்தச் சிறுவன் ஆடிய ஆட்டத்தைக் கண்டு அத்தனை பேரும் பிரமித்தனர். இன்று உலகில் தம் கால்பந்தாட்டம் மூலம் பிரமிக்க வைக்கும் புஷ்காஸே அந்தச் சிறுவன் என்றால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். 1952ல் ஹெல்சிங்கியில் ஹங்கேரிக்கு ஒலிம்பிக் வெற்றி வீரர் பதவியைப் பெற்றுக்கொடுத்தவர் புஷ்காஸேதான்.

ஹங்கேரியில் நல்ல ஆட்டக்காரர் எந்த மூலையிலிருந்தாலும் அவர்களைக் கண்டெடுத்துப் பிரகாசிக்கச் செய்வதைப் போல இந்தியாவில் நல்ல ஆட்டக்காரர்களைத் தயாரித்துக் கொடுக்கும் பணியில் கல்கத்தாவில் உள்ள மோகன்பாகன் கிளப் முன்னணியில்



இருக்கிறது. நல்ல ஆட்டக்காரர்கள் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களைத் தன் கோஷ்டியில் சேர்த்துக் கொண்டு கால் பந்தாட்ட வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டு வருகிற இந்த மோகன்பாகன் கிளப் 1889ம் வருஷம் கல்கத்தாவில் போஸ், மென் குடும்பத்தினரால் தோற்றுவிக்கப்பட்டது. இந்த மோகன் பாகன் கால் பந்தாட்டக்காரர்களே பத்து தடவைகளுக்கு மேல் கல்கத்தா லீக் வெற்றி வீரர்களாகத் திகழ்பவர்கள். இந்திய கால் பந்தாட்டக் கோப்பையை 1947லிருந்து ஏழு தடவைக்கு மேல் பெற்றுப் பெருமை பெற்றவர்கள். மற்றும் ரோவர்ஸ் கோப்பை, டூராண்ட் கோப்பைகளையும் இவர்கள் பெற்றிருக்கிறார்களென்றால், ஆட்டத் திறமை தானே விளங்கும். 1951ம் வருஷம் டில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் மோகன் பாகன் குழுவைச் சேர்ந்த தலைசிறந்த ஆட்டக்காரரான மன்னாவின் தலைமையிலே சென்ற கோஷ்டி ஜயமடைந்தது அனைவருக்கும் நினைவிருக்கும்.

சமீபத்தில் ஜாகர்த்தாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப்போட்டியில் இந்தியாவுக்குக் கால் பந்தாட்டத்தில் தங்கப் பதக்கம் கிடைத்ததல்லவா? இந்த இந்திய கால் பந்தாட்டக் குழுவின் காப்டன் கோஸ்வாமி இந்த மோகன் பாகன் குழுவைச் சேர்ந்தவரே. இலங்கை, இந்தோனேஷியா, ஹாங்காங், சிங்கப்பூர், கிழக்கு ஆப்பிரிக்கா, மொரிஷியஸ் முதலான அயல் நாடுகளுக்கும் இந்தக் குழு சென்று ஆடியிருக்கிறது.

இத்தகைய சரித்திரப்பிரசித்தி பெற்ற மோகன்பாகன் கால் பந்தாட்டக் குழுவினர் ஏப்ரல் 20, 21 தேதிகளில் சென்னைக்கு வந்து சென்னைக் கோஷ்டியுடனும், மைசூர் சென்னை கலப்படக் கோஷ்டியினருடனும் விளையாடினர். முதல் நாள் ஆட்டத்திலே அதிசயத்திலும் அதிசயமாகச் சென்னை கால்பந்தாட்டக்காரர்கள் மோகன்பாகன் குழுவினரைத் தோல்வியுறச் செய்தனர். சென்னை கால் பந்தாட்டக்காரர்கள் அனைவரும் அன்று இணைந்து திறம்பட ஆடியதே வெற்றிக்குக் காரணமாகும். தாமஸ் முதல் கோலைப் போட்டு வெற்றிக்கு அஸ்திவாரமிட்டார். இந்த அஸ்திவாரம் நிலைத்து நிற்பதில் தங்கள் கோஷ்டியின் மீது கோல் விழாமல் கோல்கீப்பர் ஜோதிவேலு கோட்டையாக நின்று தடுத்தார். இவருக்கு ஏ. டி. சீனிவாசனும், எட்வர்ட்ஸும், காப்டன் பாலகோபாலும் உறுதுணையாயிருந்தனர். சென்னை கோஷ்டியைப் பயிற்றுவித்த 'கோச்' நெல்சன் ஜாசக் பாராட்டுக்குரியவர். இந்தப் பெருமை சென்னை கால் பந்தாட்டக் கழக உப தலைவர் ஸ்ரீ விட்டல், ஸ்ரீ ராமச்சந்திரனையும் சாரும்.



முதல் நாள் தோல்வியில் வெட்கமடைந்ததனாலோ என்னவோ, இரண்டாம் நாள் ஆட்டத்தில் மோகன்பாகன் குழுவினரின் ஆட்டம் அருமையாக அமைந்திருந்தது. கோல் கீப்பர் தங்கராஜிலிருந்து காப்டன் கெம்பையா வரை வெகு நன்றாக ஆடி மோகன் பாகன் கிளப்பின் பெருமையை நிலைநாட்டினர். திப்பு தான் பந்தை அருமையாகக் கொடுக்க முதல் கோலைப் போட்டுப் பெருமை கொண்டவர் புரகாயஸ்த. மற்றொரு 'கோலை'த் திப்பு தான் தாமே தனிச் 'சபாஷ்' பட்டம் பெற்றார். அன்று முழுதும் மோகன் பாகன் குழுவினரின் கை ஓங்கியிருந்தது. சென்னை — மைசூர் கலப்படக் கோஷ்டியின் ஆட்டம் எடுபடவில்லை. கலப்படம் என்றுமே அசலுக்கு மாற்றுக் குறைச்சல்தானே?

"இந்த ஆட்டம் கால்பந்தா? தலைப் பந்தா? முக்கால்வாசி நேரம் ஆட்டக்காரர்கள் தலையாலேயே அடித் தீர்த்து விடுகிறார்களே? இவர்கள் தலை என்ன ஆவது?" என்று கேட்டார் சித்திரக்காரர் சாமா. அவர்கள் தலை படும்பாடு இவரைத் தவிக்க வைத்துவிட்டது.

"தலை கால் தெரியாமல் ஆடினால் எப்பவுமே ஆபத்துத் தான்!" என்று இடையில் புகுந்தார் பழம் பெருச்சாளி ஆட்டக்காரர் ஒருவர்.

'கால் பந்தோ, தலைப் பந்தோ இவர்கள் தலையெழுத்து நன்றாயிருந்தால் என்ன ஆகி விடும்?' என்று சொல்லத் தோன்றுகிறது.

சென்னையில் மோகன் பாகன் குழுவினரின் இரண்டு நாள் முற்றுகை ரசிகர்களை மகிழ்வித்தது. இவர்கள் இலங்கை விஜயம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகிறோம்.

1. காப்டன் பாலகோபால்
2. தாமஸ்
3. கோல்கீப்பர் ஜோதிவேலு
4. ஏ. டி. சீனிவாசன்
5. பீர்
6. எட்வர்ட்ஸ்



தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல் உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத் திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள். உடனடி நிவாரணமளிக்கவும் கிருமிகளை அகற்றவும் பெப்ஸ் உதவிபுரிகிறது



பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

பி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்

FPT-58-TAM

சோல் ஏஜண்டுகள்.
தாதா & கோ., 86, வைத்தியப்ப நாயக் தெரு, சென்னை-3

கார்டில்

உதவியினால்
வேர்க்குரு
உடனே குணமாகும்



கார்டில் வேர்க்குருவினால் ஏற்படும் கசைச்சலை உடனே நிறுத்தக்கூடிய சக்திவாய்ந்த பொருள்கள் அடங்கியது. கார்டில் உதவியினால் வேர்க்குருவை நீக்கலாம். உடனடி நிவாரணம் தரும் வேர்க்குரு பௌடர் இதுதான்.


எங்கும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள்.

ஸ்பென்ஸர் & கம்பெனி லிமிடெட்

மவுண்ட் ரோடு, சென்னை-2

SZ-1405 TMA



நாணு நடித்த நாடகம்

ஸ்ரீமதி கஸ்தூரிபஞ்ச

பள்ளிக்கூட மணி கண கணவென்று அடித்தது. சுமார் ஆறு மணி நேரம் கட்டுத் திட்டங்களுக்குட்பட்டிருந்த சிறுவர்கள் ஆரவாரத்துடன் வெளியே வந்தார்கள்.

அது சாந்தோமில் உள்ள ஒரு கான்வென்ட். சித்திரை மாத விடுமுறைக்குப் பிறகு அன்றுதான் பள்ளிக்கூடம் திறந்திருந்தார்கள்.

மாம்பலம், கோடம்பாக்கம், ஆழ்வார்ப்பேட்டை, தேனாம்பேட்டை ஆகிய இடங்களுக்குப் போக வேண்டிய பிள்ளைகள் பஸ்ஸுக்காக பஸ் நிலையத்தில் வந்து நின்றார்கள்.

குழந்தைகளும், குருவிகளும் இருக்கும் இடம் நிசப்தமாக இருக்குமா? 'கச் மூச்' என்று பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் கும்மாளம் போட்டார்கள் பையன்கள். அந்த வழியாகப் போவோர் வருவோர் எல்லோரும் கூடக் கொஞ்சநேரம் நின்று பார்த்து ரசித்துவிட்டுப் போகும்படியாக இருந்தது அவர்களின் விளையாட்டு.

திடீரென்று "டேய்! பஸ் வந்துட்டுதுடா" என்று குதித்தான் ஒரு பையன். அவ்வளவுதான்; அவனைத் தொடர்ந்து அங்கிருந்த அவ்வளவு பையன்களும் 'ஹையா! பஸ் வந்துடுத்து, பஸ் வந்துடுத்து' என்று தங்கள் பூட்ஸ் கால்களில் 'தொம், தொம்' என்று குதித்தார்கள்.

'நான், நீ' என்று போட்டி போட்டுக்கொண்டு பையன்களின் பட்டாளம் பஸ்ஸுக்குள் படையெடுத்தது. வழக்கம் போல் நாராயணன் டிரைவருக்கு அடுத்தாற்போல் இருந்த சீட்டைப் பிடித்துக் கொண்டு அதில் உட்கார்ந்தான்.

பஸ் புறப்பட்டது. பஸ்ஸின் சத்தத்தையும் மீறிக் கொண்டு பையன்களின் 'சள சள' சத்தம் உரக்கக் கேட்டது.

பஸ் ஒவ்வோர் இடமாகக் கடந்து, தேனாம்பேட்டையைத் தாண்டிற்று. அப்போதுதான் அந்த எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது.

தேனாம்பேட்டைக்கும் பவர் ஹவுஸுக்கும் இடையேயுள்ள தெருவொன்றில் பஸ் ஓடிக் கொண்டிருந்தபோது, ஒரு வீட்டிலிருந்து தலைவிரி கோலமாக ஒரு பெண்மணி ஓடி வந்தாள். வந்தவள் 'டா'ரென்று பஸ்ஸுக்கு முன்னால் குப்புறப் படுத்துவிட்டாள்.

'படக் ப்ரேக்' போட்டுச் சட்டென்று வண்டியை நிறுத்தினார் டிரைவர். முன்சீட்டிலிருந்த நாராயணன் அதிர்ந்துபோய் 'ஐயையோ' என்று அலறினான். மற்றப் பிள்ளைகளும் மற்றவர்களும் இடத்தை விட்டு எழுந்துவிட்டார்கள்.

"சரியாய்ப் போச்சு! இனி இந்த இடத்தை விட்டு பஸ்ஸைக் கிளப்பப் பதினைந்து நிமிஷமாவது ஆகும்" என்றார் டிரைவர்.

நாராயணனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏதோ வழக்கமாக நடக்கும் ஒரு நிகழ்ச்சியைப் போல் சாதாரணமாகப் பேசும் டிரைவரைப் பார்த்தான். கண்டக்டரும் அசையாமல் கீழே இறங்காமல் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.


"ஏம்பா, டிரைவர்! ஒரு அம்மா விழுந்துட்டாங்களே. ஒருத்தருமே இறங்காமல் இருக்கீங்களே!" என்று பரபரப்புடன் கேட்டான் நாராயணன்.

"ஓகோகோ! உனக்குப் புதுசா இருக்குதா? அதுதான் கேட்கிறே. ஒரு மாசமா இப்படித்தான் நடக்குது" என்றார் டிரைவர்.

"ஒரு மாசமாகவா? ஏன்?"

"இரு, இரு. அந்தம்மாவை அழைத்துப் போக அவங்க வீட்டிலேயிருந்து வந்துட்டாங்க. பஸ்ஸைக் கிளப்பணும். போகும் போது சொல்றேன்" என்றார் டிரைவர்.

டிரைவர் சொன்னது போலவே இரண்டு பேர் அந்தம்மாளைப் பலவந்தமாக இழுத்துப் போனார்கள். பஸ் கிளம்பிற்று. டிரைவர் சொன்





ளர்: "ஒரு மாதத்துக்கு முன்பு நாராயணனை யொத்த அந்தம்மாவின் பிள்ளை தெருவில் விளையாடும் போது வேகமாக வந்து கொண்டிருந்த 12 'பி' பஸ்ஸில் ஒன்றில் அகப்பட்டு இறந்து விட்டானும். அதிலிருந்து அந்தம்மாவுக்கு இப்படியொரு சித்தப்பிரமை. மற்ற வேளைகளிலே சாதாரணமாக இருக்கும். அவள், சாயங்காலம் நான்கு மணிக்கு 12 'பி' வரும் போது மட்டும் தன் நினைவையிழந்து, இப்படித் தெருவுக்கு ஓடி வந்து விடுகிறாள். அந்த நேரம் தாண்டி விட்டால் சாதாரணமாகி விடுகிறாள். என்ன செய்வது? இந்தத் தெருவுக்கு வராமல் வேறு மார்க்கமாக மாற்றலாமா என்று எங்கள் ஆபீஸில் யோசித்தார்கள். ஆனால் வேறு வழியில்லை. தினமும் சாயங்காலத்தில் பதினைந்து நிமிஷங்கள் வண்டி 'லேட்'டாகி விடுகிறது." என்று முடித்தார் டிரைவர்.

"அந்த நேரம் பார்த்து அந்த அம்மாளை உள்ளே வைத்துப் பூட்டி விட்டால்....?" என்று யோசனை சொன்னான் நாராயணன்.

"அதுதான் முடியவில்லே. அந்தச் சமயத்துக்குப் பூட்டி வைச்சால் ஒரே ரகளைதான். உயிரை விட்டுடறேன்னு பயமுறுத்துறாங்களாம்" என்றார் டிரைவர்.

வீடு வந்ததும் "ஏன்டா நாணு லேட்? முதல் நாள்னு ஸ்கூல்லேயே நேரமாயிடுத்தா?" என்று கேட்டாள் நாணுவின் அம்மா.

நாணு நடந்ததைச் சொன்னான்.

"ஐயோ, பாவம்!" என்று வருத்தப்பட்டாள் அவன் அம்மா.

அன்றிரவெல்லாம் நாணுவுக்குத் தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். அவன் மனத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்தன. திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

மறு நாள் பொழுது விடிந்தது. "அம்மா, அம்மா! நேத்துச் சொன்னேனே, அந்தம்மா மனசு தெளியறதுக்கு ரொம்ப நல்லதா ஒரு யோசனை தோணியிருக்கும்மா!" என்றான்.

"என்ன யோசனை? சொல்லேன்!" என்றாள் அம்மா.

"ஊஹூம். இப்போ சொல்ல மாட்டேன். என் திட்டம் பலிக்கதுன்னு அப்புறமாகத்தான் சொல்லுவேன்" என்றான் நாணு.

"ஓ, அப்படியா?" என்று கேட்டுச் சிரித்தாள் அம்மா.

அன்று வழக்கம் போல் 12 'பி' பஸ்ஸில் ஏறிக் கொண்ட நாணு, சாந்தோமுக்குப் போகாமல், தேனாம்பேட்டையில் இறங்கிக் கொண்டான். பஸ் நிலயத்திலிருந்து முதல் நாள் தலைவிரி கோலமாக, பஸ்ஸுக்கு முன்னால் ஓடி வந்து படுத்துக் கொண்ட பெண்மணியின் வீட்டுக்கு அவன் போன அதே சமயம் அந்த அம்மாளே வெளியில் வந்தாள்.

"பையா! யார் நீ? என்ன வேண்டும்?" என்று கேட்டாள். அவள் தெளிவாகப் பேசியதைக்கேட்டுஆச்சரியப்பட்டான் நாணு.

"அம்மா! நான்... உங்க பிள்ளை இருந்தானே.... அவனுடைய சிநேகிதன்" என்றான் நாணு.

அந்த அம்மாளின் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்தன.

"என்ன! என் சந்துருவின் நண்பனா நீ? உள்ளே வாப்பா, உள்ளே வா. உன்னைப் பார்க்கும்போது என் சந்துருவையே பார்ப்பது போல் இருக்கு" என்றாள். சொல்லும் போதே அவள் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. நாணுவுக்கும் வருத்தமாக இருந்தது.

"அம்மா! நான் ஸ்கூலுக்குப் போகணும்; உங்ககிட்டே ஒண்ணு சொல்லிவிட்டுப் போகலாம்னு வந்தேன்!"

"உனக்கு என்னப்பா, வேணும்? எதுவானாலும் தயங்காமல் சொல்லு" என்று அன்போடு சொன்னாள்.

"வந்து, எனக்கு அம்மா கிடையாது. சித்திதான் இருக்காங்க. ரொம்பப் பொல்லாதவங்க. நேத்திக்கு நான் பள்ளிக்கூடத்திலேயிருந்து நேரம் கழித்துப் போனேன்னு என்னை ரொம்ப அடிச்சுட்டாங்க."—இதைச் சொல்லி விட்டுப் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டான் நாணு.

"என் கண்ணே!" என்று அவனைத் தழுவிக் கொண்டாள். "என்ன கஷ்டம்! உனக்கு அம்மா இல்லை. எனக்குப் பிள்ளையில்லை. ஏம்பா, உங்க சித்திதான் பொல்லாதவங்களாச்சே. நீ சீக்கிரமா ஸ்கூல்லேயிருந்து வீட்டுக்குப் போயிடக் கூடாதா?"

"நான் சாந்தோமிலே படிக்கிறேன். நேத்து சாயங்காலம் நாலு மணிக்கு 12 'பி' யிலே வந்தேன். வந்து.... வந்து...நீங்க..." என்று தயங்கினான்.

"சொல்லுப்பா! அந்தப் பஸ் ஏன் நேரத்துக்குப் போகல்லே?"

"நீங்க.... அதுக்கு முன்னாடி வந்து படுத்துக்கிட்டுப் போக விடாமல் செய்துட்டீங்களே! அதைச் சொல்லத்தான் வந்தேன்" என்றான் நாணு.

"ஆ!" என்றாள் அவள். இரண்டு கைகளாலும் தன் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே குனிந்தபடி உட்கார்ந்து விட்டாள்.

சிறிது நேரம் கழித்து, "குழந்தே, என் மனம் தெளிஞ்சுடுத்து. என் அருமை மகனுடைய சிநேகிதன், தாயில்லாப் பிள்ளை நீ, என்னால் உதைபடக் கூடாது. இனிமேல் அந்த மாதிரி செய்யவே மாட்டேன்" என்றாள் அவள் உறுதியுடன்.

"அம்மா, ரொம்ப வந்தனம். நான் போயிட்டு வரேன்" என்று கூறிக் கிளம்பினான் நாணு.

"பையா! முடிந்த போது உங்க சித்திகிட்டே சொல்லி விட்டு இந்தப் பக்கம் வாப்பா. உன்னைப் பார்த்தால் என் சந்துருவைப் பார்க்கிறது போல் இருக்கு" என்று தழுதழுத்த குரலில் சொல்லி அவன் கைகொள்ளாமல் தின்பண்டங்களைத் திணித்து

மயக்கம்

''ஏம்மா, உன் பேரு என்ன?''
''அஞ்சலைங்க....!''
''எத்தனை நாளா இந்த வேலை?''
''நான் என்னுங்க, செய்யட்டும்?''
''இந்தக் குழந்தைகள் இரண்டும் யாருடையவை?''
''என்னுடையது இல்லீங்க......''
''உன்னுடையது என்று நான் சொன்னேன்? நீ எதற்காக இந்தக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு போகிறாய்?''
''வந்துங்க..... பள்ளி....''



''வந்தாவது போயாவது! இந்த மாதிரிப் பள்ளிக்கூடம் போகிற பிள்ளைகளைப் பிடிச்சுக்கிட்டுப் போய் எத்தனை முறை வித்திருக்கே?''
''ஐயையோ! அதெல்லாம் இல்லீங்க. நான் பள்ளிக்கூடத்து ஆயாங்க. இந்த ரெண்டு குழந்தைகளையும் கூட்டிக்கிட்டு வீட்டுக்குப் போகும் போது, போலீஸ்காரரு பிடிச்சு இங்கே கூட்டியாந்துட்டாருங்க!'' — **இனியவன்**

இரண்டு கன்னங்களிலும் முத்தமிட்டு, அவனுக்கு விடை கொடுத்தாள்.

''அம்மா! தினமும் சாயங்காலம் 12 'பி' பஸ்ஸில் வருவேன், பாருங்கள்!'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான் நாணு.

அன்று சாயங்காலம், சாந்தோமிலிருந்து நான்கு மணிக்குப் புறப்பட்ட 12 'பி' பஸ்ஸில் கான்வெண்ட் பையன்கள் ஏறிக்கொள்ள பஸ் புறப்பட்டது. நாணு டிரைவருக்குப் பக்கத்து ஆசனத்தில் அமர்ந்தான்.

தேனாம்பேட்டையைத் தாண்டினபோது பஸ்ஸின் வேகத்தைக் குறைத்த டிரைவர், ''ஹூம், இனி இதை விட்டுக் கிளம்ப எவ்வளவு நேரமாகுமோ?'' என்று முணுமுணுத்துக் கொண்டது நாணுவுக்குக் கேட்டது.

''டிரைவர்! பயப்படாதீங்க. இன்னிக்கு அந்தம்மா குறுக்கே வந்து விழமாட்டாங்க'' என்றான் நாணு.

''ஏன் தம்பி, அந்த அம்மா எந்த ஊருக்காவது போயிட்டாங்களா?'' என்று கேட்டார் டிரைவர்.

''இல்லை, இல்லை!'' என்று நாணு சொல்லும் போதே, பஸ் அந்த வீட்டெதிரில் வந்தது. பஸ்ஸிலிருந்த அவ்வளவு ஜோடிக் கண்களும் வெளியே பார்த்தன.

என்ன ஆச்சரியம்! வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த அந்த அம்மாள் இறங்கி ஓடிவரவில்லை. மாறாக, நாணுவைப் பார்த்துக் கைகளை ஆட்டினாள். நாணுவும் எழுந்து நின்று கையை ஆட்டினான். பஸ் பறந்தது. 'இதென்ன விந்தை?' என்று எல்லோரும் வியந்தார்கள். நடந்ததை விவரித்துச் சொன்னான் நாணு.

''நாராயணா! பிரமாதம். பிரமாதம். பெரிய திட்டமாகப் போட்டு, பலே ஜோராக நடித்திருக்கிறாயே!'' என்று ஒருவர் பாக்கியில்லாமல் எல்லாரும் பாராட்டினார்கள்.

வீட்டுக்குள் நுழைந்ததுமே அம்மா கேட்டாள். ''நாணு, சரியான நேரத்துக்கு வந்துட்டியே! உன்னுடைய திட்டம் என்ன ஆயிற்று?'' என்றாள்.

நாணு எல்லாவற்றையும் சொன்னான். அம்மாவே அசந்து போனாள். ஆனால் நாணுவுக்கு ஆனந்தம் ஏற்படவில்லை. அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டான். ''அம்மா! என்னை மன்னிச்சுடும்மா. இன்னிக்கு அரை நாள் ஸ்கூலுக்கு லீவு போட்டேன். முதல் தப்பு. அப்புறம் அந்தம்மா கிட்டேபோய் சொன்னேன், அதுவும்....அதுவும்....எனக்கு அம்மா இல்லேன்னு சொல்லிட்டேம்மா'' என்று சொல்லிக் கதறினான் நாணு.

அம்மா அவனை இறுக அணைத்துக் கொண்டாள். ''நாணுக் கண்ணு. இன்னிக்கு நீ செய்தது தப்பேயில்லை. பார்க்கப் போனால் பெருமைப்பட வேண்டிய காரியம் அது. எவ்வளவு பெரிய மனோ வியாதியை எவ்வளவு அழகாகத் தீர்த்து விட்டாய். பெரியவர்களால்கூட முடியாதே நாணு! இதற்கு வருத்தப்படலாமா? நீ என்ன சொன்னாலும் நான் உன் அம்மாதான். எங்கே கொஞ்சம் சிரி'' என்றாள்.

அம்மா சொன்னபடி கொஞ்சமாகச் சிரிக்காமல் அதிகமாகவே சிரித்தான் நாணு.

மக்களுடைய நம்பிக்கை பெற்றவை
சத்வைத்திய சாலை (மைசூர்) லிமிடெட் நஞ்சன்கூடு
ஆயுர்வேத வித்வான் B.V. பண்டிட் அவர்களின்
ஆயுர்வேத குடும்ப மருந்துகள்
வைத்தியர்களுக்கும் உதவுகின்றன

நரம்புத் தளர்ச்சி நீங்க பலவிருத்தி ஏற்பட
ஆல்மண்டைன் லேகியம் ரூ. 2-85: பெரியது 8-00
மகரத்வஜ மாத்திரை 25க்கு ... ரூ. 5-00
ஓஜோலா (டானிக்) பாட்டில் ... ரூ. 3-00

ஜீரண உபாதைகளைக் குணப்படுத்த
மகாஜீரக லேகியம் (டப்சன்) ரூ. 2-85: 5-00
கண்டாமலக லேகியம் ... ரூ. 2-35
ஜிஞ்சிப் 0-40: பெரியது ரூ. 2-00

சிறந்த தைலங்கள் கோடை கால அவசியங்கள்
கூலெக்ஸ் ரூ. 1-25: 3-25 பிருங்காமலக தைலம் 1-25: 3-25
ஹிமசாகர தைலம் ரூ. 2-75 ... குமார தைலம் ரூ. 1-75

தமிழில் கிடைக்கும் இடம்: மெட்ராஸ் ஸ்டோர்ஸ், 96, போஸ்ட் ரோடு
சோல் ஏஜண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை-1 (மதுரை, கோவை, பம்பாய்-19)

தலைவலியால் மாலை முழுவதுமே வீணாகியிருக்கும்...



ஸாரிடான் 'ரோஷ்'

வலியைப் போக்குகிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது

ஸாரிடான் துரிதமாக, நிச்சயமாக கெடுதல் எதுவுமின்றி, நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, உடல்வலி, பல்வலி, ஜுரம் வரும்போலிருப்பது, சாதாரண உடல் கோளாறுகள் இவற்றிலிருந்து நிவாரணம்பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு 1 வில்லை; குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை.



ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 நயா பைஸா

'ரோஷ்' தயாரிப்பு   ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்   JWT-VT-4799

மலச்சிக்கலை குணப்படுத்த

வாக்குலாக்ஸ்

ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்




புதிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட்ட வாக்குலாக்ஸ் உங்கள் ஜீரணப்பாதைகளை நன்கு சுத்தம் செய்கிறது...மலச்சிக்கலால் ஏற்படும் சக்திக்குறைவையும் பித்தத்தன்மையையும் போக்குகிறது. வாக்குலாக்ஸ் உங்கள் இரத்தத்தை சுத்தப்படுத்துகிறது—உங்கள் சருமத்தை, பருக்களிலிருந்தும் களங்கங்களிலிருந்தும் பாதுகாக்கிறது. வாக்குலாக்ஸ் குடும்பம் முழுமைக்கும் சிறந்தது.

வாக்குலாக்ஸ்

ஒரு க்ளேக்ஸோ தயாரிப்பு

இனிக்கும் மலமிளக்கி-பேதி மருந்து

V-G-7-TAM.



பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

'பாலுஸேரி பில்டிங்ஸ்'

3, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி,
தபால் பெட்டி நெ. 414, மதராஸ்-5
தந்தி: EVERMANS போன்: 85834

சேரக் கடைசி தேதி 9-5-1963 ... முதல் ஏலத் தேதி 11-5-1963

25 மாதங்கள்	மாதாந்திரச் சீட்டுகள் (2-வது சனிக்கிழமை ஏலங்கள்)	25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-
D	ரூ. 25/-	ரூ. 625/-	G	ரூ. 10/-	ரூ. 250/-

விலாசம் தெளிவாக எழுதிக் கேட்பவர்களுக்கு எங்கள் விதிகள் இலவசமாக அனுப்பப்படும். சீட்டில் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் உரிமை பண்டைச் சேர்ந்தது.

(போர்டார் உத்திரவுப்படி) எம். வி. சுப்ரமணியம், மானேஜிங் டைரக்டர்

டெல்லி கிளை ஆபீஸ்கள்: கான்லன் ஹவுஸ், 1/24, ஆஸப் அலி ரோடு, புது டில்லி-1 ★ பாலுஸேரி பில்டிங் 14-A/4, W.E.A கரோல்பாக், புது டில்லி-5 ★ 198, முதல் மாடி, ஜோர்பாக் நர்ஸரி, புது டில்லி-3 பெங்களூர் கிளை ஆபீஸ்: 185, முதல் மாடி, ஆறுவது கிராஸ், காந்தி நகர், பெங்களூர்-9 ★ பம்பாய் கிளை ஆபீஸ்: "விஷ்ணு விஹார்" 17-A, லயான் மாதுங்கா எஸ்டேட் (கிங்ஸ் ஸர்க்கிள் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்) பம்பாய்-22 ★ கல்கத்தா கிளை ஆபீஸ்: 48, லேக் பிளேஸ், கல்கத்தா-29

எங்கள் சேவை உங்களுக்குத் தேவை



"என் கணவருக்கு வரவரக் காது சரியாகவேயில்லை. நான் சொல்வதில் கால் வாசிதான் அவர் காதில் விழுகிறது."
"ஏன் அப்படிச் சொல்றே?"
"நான் நூறு ரூபாயில் ஒரு புடவை கேட்டேன், இருபத்தைந்து ரூபாயில் வாங்கிக் கொடுத்து விட்டார்."
சங்கீத வித்யாலயம்
இங்கே சபா செகரட்டரிகளுக்குச் சங்கீத ஞானம் போதிக்கப்படும்.
சபா
இந்த லீவுக்கு நாம் காஷ்மீர் போகலாமா?
பணம்..?
சரி! ஊட்டிக்காவது போகலாமா?
பணம்..?
சரி! அப்ப இங்கேயே இருந்து விடலாமா?
பணம்..!
நேற்று நீங்கள் பார்த்த திரைப் படத்தைப் பற்றி ஆபீஸ் நேரத்தில் இரைந்து பேசுவதை நான் ஆட்சேபிக்கிறேன்!
மானேஜர்
ஏனென்றால் அந்தப் படத்தை நான் போய்ப் பார்க்க வேண்டும். அதற்கு முன்னால் கதை தெரிந்து போனால் சுவாரசியம் குறைந்து போய்விடுமே!



படித்துப் பாருங்கள்!



அக்கப்போர்

சுதேசமித்திரன் ஆசிரியராக முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய காலஞ்சென்ற ஸ்ரீ ஸி. ஆர். சீனிவாசன் அவர்கள் எழுதிய பல ரஸமான கட்டுரைகளின் தொகுதி இது. ''அக்கப்போர் அம்மணி அய்யங்கார்'' ''பால்காரப் பொன்னுரங்கம்'' போன்ற கட்டுரைகள் வாழ்க்கையில் அன்றாடம் பார்க்கும் பாத்திரங்களின் குணச் சித்திரங்களாகும். இவை தவிர சில ஹாஸ்யக் கட்டுரைகளும், பொருளாதாரம் சம்பந்தப்பட்ட கட்டுரைகளும் இருக்கின்றன. எந்த விஷயம் பற்றி எழுதினாலும் அவருக்கே உரிய எளிய அன்மையான நடையில் வாழ்க்கை நுணுக்கங்களைக் கண்டு எழுதுவதைப் பார்க்கும்போது ஒரு புது உணர்ச்சி வாசகர்களுக்கு எழும். ''வாழ்வின் தரம் உயர்ந்துவிட்டதாகச் சிலர் நினைக்கின்றனர். உயர்ந்தது எல்லாம் சினிமாச் சரக்குக்குப் பிறந்த கிராக்கி தான்!'' என்று பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதியதுதான். அது இன்றும் எவ்வளவு உண்மையாக இருக்கிறது! ''எண்சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம் என்று முதியோர் சொல்வர். இன்று வயிறே பிரதானம்.''

''பேத்திக்குத் தெரிந்தது பாட்டிக்குத் தெரியாமலிருக்கலாம். பாட்டிக்குத் தெரிந்தது பேத்திக்குத் தெரியாவிட்டால் குறைத் தனம் பாரு.'' இப்படி நறுக்குத் தெறித்தாற் போல் வாக்கியங்கள் இவருடைய உரை நடையின் தனிப் பெருமையாகும். இந்த நடை இன்றும் படிப்பவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுகிறது.

பிரசுரம்: சுதேசமித்திரன் புத்தகாலயம்; விக்டோரியா ஹவுஸ், மௌண்ட் ரோடு, சென்னை 2; விலை: ரூ. ஒன்று.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

இராமாயணம் படித்தாலும், படிக்கக் கேட்டாலும், பாடினாலும், சிந்தித்தாலும் அமுதம் போல் தெவிட்டாத இன்பமளிப்பது. என்றும் புதிதாய் இருப்பது. அதை எத்தனை மொழிகளில் எத்தனை வகைகளில் பதிப்பித்தாலும் அத்தனைக்கும் இந் நாட்டில் இடம் உண்டு. அதிலும் சுந்தர காண்டம் என்றுமே தனிச் சிறப்புடையது. அது மந்திர சாஸ்திர மாகப் போற்றப்படுவது. பாராயணம் செய்பவர்கள் அவரவர் கோரிக்கை நிறைவேறுவதற்கு, கிரக பீடைகள் நீங்கவும் எந்த முறையில் என்னென்ன நிவேதனங்களுடன் எவ்வளவு நாட்கள் படிக்க வேண்டும் என்று வாயு புராணம், ஸ்காந்தோத்தர புராணம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்களுடன் 'விட்கோ' கம்பெனியார் வெளியிட்டுள்ள புதிய சுந்தர காண்ட மொழிபெயர்ப்பை மக்கள் ஆவலுடன் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. இம் மொழிபெயர்ப்பு வால்மீகி ராமாயணத்தின் சிறந்த உரையாகிய 'கோவிந்த ராஜீய'த்தைத் தழுவி அமரர் வி. ஆர். சீநிவாஸ ஐயங்காரால் பல ஆண்டுகளுக்கு முன் செய்யப்பட்டது. இந்நூலில் பல ஸ்தோத்திரங்களும், அர்ச்சனைக்குப் பயன்படும் அஷ்டோத்தர சத நாமாவளிகளும், ஆன்மிக வளர்ச்சிக்குரிய வாழ்க்கை முறைகளின் விளக்கங்களும் தரப்பட்டிருக்கின்றன. கண்ணைக் கவரும் கட்டடம். அழகான அச்சு. ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய நூலாகும்.

- அண்ணா.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் — சுந்தர காண்டம் — திவ்ய மங்கள ஸ்தோத்திரங்களுடன். தமிழ் மொழிபெயர்ப்பு. வெளியிடுவோர்: ''விட்கோ'', சென்னை-17. விலை: ரூ. 12.50.

மந்திரவாதியின் மகன்

எந்தச் சிறுவனுக்கும் ஒரு காரியம் செய்யக் கூடாது என்று சொன்னால் அந்தக் காரியத்தை எப்படியாவது செய்து பார்த்துவிட வேண்டும் என்ற ஆவல் எழுவது இயல்பு. மந்திரவாதி மகேசுவரி நாதனின் புதல்வன் மணியும் இதற்கு விதிவிலக்கல்ல. மாய ஜால வித்தை அறையில் புகுந்த அவன் கை சும்மா இருக்கவில்லை. மந்திரக் கோலின் உதவியால் அவன் உருவம் மாறி, பல உயிரினங்களைச் சந்திக்கிறான். ஒவ்வோர் உயிரினத்திடமிருந்தும் அதன் வாழ்க்கை வரலாற்றை மணி தெரிந்து கொள்கிறான். கதை மூலமாகப் பல உயிரினங்களின் அன்றாட வாழ்க்கை முறைகளைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. கரிக் கோழி, அட்டை, காளான், தேள், சேல், பாம்பு, முதலை, வண்டுகள், கம்பளிப் பூச்சி போன்ற பல உயிரினங்களின் விநோத அமைப்புகளைக் கண்டு வியக்கிறோம். விஞ்ஞானத்தைக் கதை மூலமாகப் போதிக்கலாம் என்பதை எடுத்துக்காட்டும் இந்நூல் இந்திய சர்க்காரின் ஆயிரம் ரூபாய்ப் பரிசைப் பெற்றதில் வியப்பில்லை.

ஒவ்வோர் உயிரினத்தையும் சித்திர விளக்கத்தோடு கொடுத்திருப்பது நூலுக்குச் சிறப்பைக் கொடுக்கிறது. குழந்தைகள் ஆவலுடன் விரும்பிப் படிக்கும் முறையில் நூலைத் தயாரித்த உமா தேவன் கம்பெனியார் பாராட்டுக்குரியவர்கள். 'கல்கி'யில் வெளி வந்தது இந்தக் கதை. இந்நூலை எழுதிய திரு கல்வி கோபாலகிருஷ்ணன் நெடுங்காலமாகக் குழந்தைகளுக்குக் கதை எழுதி வருகிறார். இந்திய சர்க்காரின் பரிசைப் பெற்றுத் தமிழ் நாட்டுக்குப் புகழ் தேடித் தந்த இந்தப் புத்தகம் குழந்தைகள் அனைவரும் விரும்பிப் படித்துப் பயன்பெறக் கூடியது.

பிரசுரம்: உமா தேவன் கம்பெனி, சென்னை விலை: ரூ. 3-50.

நீகோ
ஜெர்மிஸைடல் சோப்
ஒரு பார்க்-டேவிஸ் தயாரிப்பு

உங்கள் சருமத்தைச் சுத்தமாகவும் ஆரோக்கியத்துடனும் வைத்துக் கொள்ளவும், பருக்கள், கருநிறப் படைகள், வேர்க்குரு மற்றும் இதர சாதாரண சரும நோய்களின்றி இருக்கவும் உதவுகிறது. தவறாமல் தலைமயிரைச் சுத்தம் செய்ய உபயோகித்து வரின், நெக்கோவின் கிருமிநாசக நுரை வழுக்கை ஏற்படாமலிருக்க ஒரு நல்ல பாதுகாப்பாக இருக்கும். நிரூபணமான மதிப்பையுடைய கிருமிநாசக சோப்பான நீகோ உங்களுக்கு மும்மடங்கு நன்மையளிக்கிறது—சுத்தமாக்க, நோய்கிருமி பரவாமல் தடுக்க, பாதுகாக்க, உதவுகிறது. தினமும் உங்கள் சருமத்திற்குத் தேவையான கவனத்தை செலுத்துங்கள்.



NATIONAL PD 9363

தினசரி உபயோகத்திற்கான ஆதி கிருமிநாசக சோப்

எழுத்தும் தொழிலும்


" உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்
வீணில் உண்டுகளித்திருப்போரை
நிந்தனை செய்வோம் "

என்று கவியரசர் பாரதியார் பாடினர்.

விவசாயத்தின் உயர்வை உண்மையில் ஏற்றி வைத்துப் போற்றித்தான் அப்படிப் பாடினர். ஒருவனுக்கு இமே ஊழியம் செய்து அவன் புகழ் பாடி வயிறு வளர்க்காமல், தனக்குத் தானே எஜமானனுகவும், ஊழியனுகவும் இருந்து கொண்டு, அஞ்சா நெஞ்சினனுக விவசாயி வாழ்ந்த காலத்தை மதித்துப், பாரதியார் அப்படிப் பாடிப் போனுர்.

சமீபத்தில் உருவான விவசாயச் சட்டங்களின் பயனுக, உருக்குலைந்து இரை தடுமாறி ஸ்தம்பித்து நிற்கும் தற்போதைய விவசாயச் சூழ்நிலையின் விகாரமான தோற்றத்தைக் கண்டால் பாரதியார் எப்படிப் பாடியிருப்பாரோ ?

வந்தனையா?



வேறு வழியில்லாமல்தான் விவசாயம் செய்கிறேம். விவசாயத்தை ஏற்றிருக்கும் அத்தனை பேர்களும் வீணில் உண்டு களித்திருக்கத்தான் பெரும் பாடு படுகிறுர்களே தவிர, விவசாயத்திலோ, அல்லது உற்பத்திப் பெருக்கத்திலோ யாருக்கும் கொஞ்சம்கூடச் சிரத்தையே இல்லை.

இதுதான் தற்போதைய சூழ்நிலையில் உருவாகியிருக்கும் விவசாயத்தின் உண்மையான தோற்றம். சென்ற வருடம் என் கிராமத்தில், என் கண் முன்னே நடந்த சில சம்பவங்களை, இப்போது அப்படியே எடுத்துச் சொல்லுகிறேன். 'என் கண் முன்னே' என்று சொல்வதை விட, என் தலைமையில் நடந்தது என்று சொன்னுல்கூட இன்னும் பொருத்தமாகவே இருக்கும். உண்மைப் பெயர்களை மட்டும் அப்படியே குறிப்பிடாமல் நடந்த நிகழ்ச்சிகளை அப்படி அப்படியே சொல்லுகிறேன்.

அக்கிரஹாரத்தில் வசிக்கும் ஓர் எளிய குடும்பம்; விவசாயமே ஜீவநாடி. மொத்தம் மூன்றரை ஏக்கர்கள் அயன் நஞ்சை நிலம்; இரு போக சாகுபடி; பல வருஷங்களாகச் சொந்தமாகவே சாகுபடி செய்து கொண்டு வந்தார்கள்; அந்நிலங்களில் வந்த வருமானத்தைக் கொண்டு பத்துப் பேர்களுக்குக் குறைவில்லாமல் வாழ்க்கை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம். திடீரென்று மேற்படி நிலங்களின் நிர்வாகப் பொறுப்பு முழுதும் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்திரீகளே ஏற்று நடத்தும்படியான சந்தர்ப்பம் வந்து விட்டது; ஆகவே நிர்வாகமும் பெண்களின் கைக்கு மாறிப் பெரும் பணமுடையும் பிறந்து விட்டது. சொந்த சாகுபடியில் லாபமில்லை என்ற கருத்துக் கொண்டவர்களாய் அந்தப் பெண்கள் தம் நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கு முற்பட்டார்கள்; நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக் கொள்பவர்கள் அந்த ஒரு வருடத்துக்கு மட்டுமே சாகுபடி செய்ய வேண்டும் என்றும், முன்பணமாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் நூறு முன்னதாகவே கட்டிவிட வேண்டுமென்றும் அடுத்த வருடமே நிலங்களைத் தம்மிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், நியாயவாரச் சட்டத்தைக் குத்தகைக்கு ஒப்புக் கொள்பவர்கள் வற்புறுத்தக் கூடாதென்றும் முன்னதாகவே தம் நிபந்தனைகளை அறிவித்தனர். நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு சாகுபடி செய்வதற்கு இந்தக் கிராமத்திலேயுள்ள பல குடியானவர்கள் முன் வந்தனர். போட்டி அதிகமாகவே குத்தகை வரம்பும் அளவுக்கு மிகவும் அதிகமாகவே ஏறிவிட்டது; முன் பணம் பெற்றுக் கொண்டு ஒரு சிலரிடம் மேற்படி நிலங்கள் குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டு விட்டன. நிலச் சொந்தக்காரர்களின் அப்போதைய பணமுடையும் தீர்ந்தது; குத்தகை வரம்பும் ஏறி நின்றது; அந்த அளவில் எல்லாமே சரியானபடிதான் நடந்தேறி விட்டன.

வருஷ முடிவில் நிலச் சொந்தக்காரர்கள் மீண்டும் தம் வசமே நிலத்தை விட்டு விடும்படி குத்தகைதாரர்க

எழுத்தாளர் தி. என். மணி அவர்களின் இக் கட்டுரை கிராமப்புறங்களில் இன்று நிலவுகின்ற நிச்சயமற்ற தன்மையை அப்படியே படம் பிடித்துக்காட்டுவதாய் அமைந்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் விவசாயிகளுக்கு உற்பத்தியைப் பெருக்குவதில் ஊக்கம் எவ்வாறு ஏற்படும் ?

விடமே கோரியபோதுதான் தகராறு தலையெடுத்தது: நிலத்தைவிட மறுத்தனர்.

அது வரையில் நிலச் சொந்தக்காரர்களும் தம்முடைய போக்கிலேயே, தம் காரியத்தைக் கவனித்துக் கொண்டு வந்தவர்கள், சற்று நின்று நிதானிக்கும்படியான நிலை பிறந்தது. அதுவரையில் யாருடைய யோசனையையும் கலந்தாலோசிக்காமல் புத்திசொன்னவர்களுடைய பேச்சையும் ஏற்காமல், தம் இஷ்டப்படியே நடந்து கொண்டு வந்தார்கள். தகராறு ஏற்பட்டதும் மலைத்து நின்றார்கள்.

இந்த விஷயத்தில் அவர்களுக்கு யாராலும் உதவி செய்ய முடியாமல், பலரும் கைவிரித்து விடவே, என்னிடம் ஓடி வந்து என் உதவியை நாடினார்கள். பாவம், பெண்கள்! அதிலும் ஆதரவற்ற நிலை; என்னிடம் வந்து கண்ணீர் விட்டுக் கதறியபோது எனக்குப் பரிதாபகரமாகத்தான் இருந்தது. இந்தக் குத்தகை விஷயத்தில் ஒரு வேடிக்கை என்னவென்றால், அக்கிரகாரத்தைச் சேர்ந்த ஒருவரே மேற்படி பெண்களிடம் நிலத்தைக் குத்தகைக்கு ஒப்புக் கொண்டு குத்தகைச் சீட்டும் எழுதிக் கொடுத்திருக்கிறார்; ஆனால் மேற்படி நிலத்தை அவரே சாகுபடி செய்யாமல், தம்மைச் சேர்ந்த பண்ணையாள் ஒருவனிடம் உள் குத்தகைக்கு

விஷயம் என்ன தெரியுமோ? எனது பக்கத்து வீட்டு நண்பர் அவனிடம் ஒப்படைத்து விட்ட வயலை அவரிடம் உள் குத்தகைக்கு வாங்கியிருந்த அந்த மூன்றாவது மனிதனுடைய குடியானவன் வலுக்கட்டாயமாக உழுது கொண்டிருக்கிறானாம்!

''அவன் மட்டும் உழுகிறானா? அல்லது இன்னும் வேறு யாராவது துணைசெய்கிறார்களா?'' என்று கேட்டேன், நம்பவே முடியாமல்.

''அந்தக் குடியானவத் தெரு ஏர்கள் முழுதும் என் வயலில்தான் உழுது கொண்டிருக்கின்றன!'' என்று விம்மினாள் அந்தப் பெண்.

ஓடிச் சென்று பார்த்தேன்; அந்தப் பெண் சொன்னது அத்தனையும் உண்மை; அரை ஏக்கர் விஸ்தீரணமுள்ள நாற்றங்காலில் ஏறக்குறைய இருபது ஏர்கள் உழுது கொண்டிருந்தன. சாதாரணமாக உழவு நாட்களில் உழுவதற்காகக் கூலியாட்கள் அமர்த்தினால்



நிந்தனையா?



விட்டிருக்கிறார். அந்தப் பண்ணைக்காரனோ ஓர் உதவாக்கரை; மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இல்லாதவன்.

குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுத்த நண்பர் என் பக்கத்து வீட்டுக்காரராகவும், என்னிடம் மிகுந்த மதிப்பு உள்ளவராகவும் இருக்கவே, அந்தப் பெண்களின் அவல நிலையை அவரிடம் எடுத்துச் சொல்லி, அவரை வற்புறுத்தி, நிலத்தை மீண்டும் சொந்தக்காரரிடமே ஒப்படைத்து விட்டதாகக் குத்தகைச் சீட்டிலேயே அவரிடம் ஓர் ஒப்பந்தத்தையும் பெற்று அந்தப் பெண்களிடம் கொடுத்து விட்டேன். மேற்படி நண்பரிடம் மேற்படி நிலத்தை, உள் குத்தகைக்கு, வாய் மொழியாக, ஏற்றுக் கொண்ட அந்த மூன்றாவது பேர்வழியான குடியானவன், என்னிடம் வந்து ஏதேதோ சொல்லித் தான் நட்ட நிலத்தைத் தன்னிடமிருந்து நான் வந்து பிடுங்கித் தருவதைப் பலமாக ஆட்சேபித்தான். நான் அவனை எச்சரித்து அனுப்பி விட்டேன். இத்துடன், அந்தத் தகராறு தீர்ந்து விட்டதாகக் கருதினேன். ஆனால் விஷயம் என்னவோ முடியவே இல்லை.

மறு தினம் அதிகாலையில் நான் தூங்கி விழிக்கு முன்னரே நிலச் சொந்தக்காரியான அந்தப் பெண் வந்து என்னைப் படுக்கையில் எழுப்பினாள்; கவலையும் துக்கமும் அவள் நெஞ்சைப் பிழிய, 'ஹோ' என்று கதறி விட்டாள் கதறி!

ஓர் ஏக்கருக்குப் பத்து ஏர்கள்கூட ஓட்டி வர மாட்டார்கள்; அங்கங்கே நான்கும், இரண்டுமாகச் சிதறிக் கூலிக்கு ஓடுவார்கள். பத்து ஏர்கள் சேர்ந்தாற்போல் வந்தே தீரவேண்டுமென்ற நிலையில் அந்தக் குடியானவர்களைத் தழுவிக் கட்டிப்பிடி நல்வார்த்தைகள் பல சொல்ல வேண்டும். காப்பி சப்ளையும் செய்ய வேண்டும், வழக்கத்துக்கு மாறாக அதிகக் கூலியும் கொடுத்து, லஞ்சமும் கொடுக்க வேண்டும்! இப்போது பாருங்கள், அவர்களுடைய ஒற்றுமையை! தம்மைச் சேர்ந்த குடியானவன் நட்டுக் கொண்டிருந்த வயல் அதன் சொந்தக்காரருக்கு மறுபடியும் கைமாறக் கூடாதாம்! எத்தகைய நல்ல எண்ணம்! எப்படிப்பட்ட ஒற்றுமை உணர்ச்சி!

பிராது கொடுக்க அந்தப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு நேரே சப்—மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்குச் சென்றேன். அவ்வளவுதான்! அங்கும் என்னை விரட்டிக் கொண்டு அத்தனை குடியானவர்களும் வந்து விட்டனர். பிராது கொடுக்க வேண்டாம் என்று மன்றாடினார்கள்; அந்த ஒரு வருடத்துக்கு மட்டும் விட்டுக் கொடுக்கும்படியும், குடியானவத் தெருவிலேயே மிகுந்த நாணயஸ்தரும், பேச்சுக்குக் கட்டுப்பட்டவரும், மதிப்புக் கொடுக்கத் தகுந்தவருமான வேறொருவரைக்

ஜி. எஸ். மணி

> கங்கை இருக்கும்போது, அதன் கரையில் எதற்குக் கிணறு வெட்டுகிறாய்? கடவுளை அடைவதற்கு நீ ஏன் எதையோ தேடிப் போகிறாய்? இதோ இந்த ஏழைகள், துயருற்றவர்கள், பலவீனர்கள் இருக்கிறார்களே—இவர்களெல்லாம் தெய்வங்களில்லையா?
>
> — ஸ்வாமி விவேகானந்தர்

கொண்டு குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுப்பதாகவும், மறு வருஷம் நிலச் சொந்தக்காரரே யாருடைய அனுமதியும் இல்லாமல், தங்கள் நிலத்தில் பிரவேசித்துக் கொள்ளலாம் என்றும் என்னிடம் சத்தியம் செய்து கொடுத்து விட்டனர்.

நானும் நம்பினேன்; அப்படியே ஏற்பாடும் செய்து கொள்ளப்பட்டது; வயல் வேலைகள் யாதொரு இடையூறும் இல்லாமல் சேர்ந்துகொண்டு செவ்வனே நடைபெற்றன.

ஃ ஃ ஃ

வருஷ இறுதியில், மத்தியஸ்தக்காரராகப் புதிதாக வந்து நிலத்தை உழுது நட்டவர் என்னிடம் வந்து தாம் எழுதிக் கொடுத்த குத்தகைச் சீட்டைச் செல்லு வைத்துத் திரும்பி வாங்கித் தரும்படி கேட்டார். அவருடைய நாணயத்திலும், யோக்கியதன்மையிலும் முழு நம்பிக்கை வைத்த நானும், அவர் கோரியபடியே, அவர் எழுதிக் கொடுத்த குத்தகைச் சீட்டில் செல்லு எழுதி வாங்கிக் கொடுத்து விட்டேன்.

நிலத்தைச் சொந்தக்காரரிடம் மீண்டும் ஒப்படைத்து விட்டதாக அவரிடம் பதிலுக்கு எதுவும் எழுதி வாங்கிக் கொடுக்கவில்லை நான்; அந்த மீறி அவர் எதுவும் செய்ய மாட்டார் என்ற முழு நம்பிக்கை எனக்கு! அந்த நம்பிக்கையே மீண்டும் எனக்குப் பெரும் சத்துருவாகப் பின்னால் வந்து முளைத்து விட்டது!

நாற்றங்கால் செப்பனிட வேண்டிய காலத்தில் மறுபடியும் தகராறு எழுந்து விட்டது. நான் நம்பி நடந்து கொண்ட குடியானவரே எல்லா நம்பிக்கை மோசம் செய்து விட்டார். ஏற்கனவே நட்டு வந்த போக்கிரியை மறுபடியும் தூண்டி விட்டு வயலை உழுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த நல்ல மனிதரை நான் மறுபடியும் கூப்பிட்டு வைத்துக்கொண்டு இது விஷயமாகக் கேட்ட போது அவர் தமக்கும் அதற்கும் யாதொருவிதமான சம்பந்தமும் இல்லவே இல்லை என்று சொல்லி மெதுவாக நழுவிச் சென்றுவிட்டார்.

எதிர்த்தரப்பில் தொடர்ந்து மறுபடியும் வயல் உழப்பட்டது: இம்முறை பல ஏர்கள் வரவில்லை; ஒரே ஏர் மட்டும் உழுதது: அதுவும் அந்தப் போக்கிரி மட்டும்தான் உழுது கொண்டிருந்தான்.

மறு நாள் இரண்டொரு ஏர்கள் அமர்த்திக் கொண்டு போய்ப் பதிலுக்கு எங்கள் சார்பில் உழச் செய்தேன். அந்தச் சந்தர்ப்பத்தில் மறுபடியும் தகராறோ அல்லது அடிதடிகளோ நடைபெறுமென எதிர்பார்த்து ஏமாந்து போனேன். நான் எதிர் உழவு அடித்ததை எதிர்த்தரப்பில் எவரும் ஆட்சேபிக்கவில்லை; தடுக்கவும் இல்லை.

கிராமத்தில் யாரும் இந்த விவகாரம் பற்றிக் காதில் போட்டுக் கொள்வதாகவே தெரியவில்லை. ஒன்றுமே நடைபெறாதது போலவே அவரவர் தத்தம் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

சில நாட்கள் சென்ற பிறகு, மறுபடியும் எதிர்த்தரப்பில், குப்பை அடிப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாக எனக்குத் தகவல் வந்தது.

நான் சில ஆட்களுடன் சென்று எதிர்த்தரப்பின் குப்பை வண்டியை மறித்தேன். அதைத் தொடர்ந்து சிறு சச்சரவு மூண்டது. என்னுடைய ஆட்கள் எதிர்த்தரப்பை அடித்து நொறுக்குவதற்குத் தயாராகி விட்டதையும் அறிந்து கொண்டு சச்சரவை முற்ற விடாமல், வெற்றிகரமாக வாபஸாகி விட்டேன்!

மறுபடியும் கோர்ட்டுக்குச் சம்பந்தமில்லாத எதிரியின் மீது தடை மனுவுக்கு விண்ணப்பித்துக் கொண்டு 'ஸ்டே ஆர்டர்' வாங்கியும் விட்டேன். அவனும் தனக்கும் வயலுக்கும் சம்பந்தமில்லை என்று நீதி ஸ்தலத்திலேயே எழுதிக் கொடுத்து விட்டுக் காட்சியிலிருந்து ஒழிந்தே போனான்.

ஆனால் நல்லவர் மாதிரி வேஷம் போட்ட நயவஞ்சகரை மட்டும் இன்னும் வயலிலிருந்து அப்புறப்படுத்த முடியவில்லை. காரணம், அந்த நயவஞ்சகரிடம், அவருடைய குத்தகைச் சீட்டு, சரியான செல்லுடன் சாட்சியம் சொல்லிக் கொண்டிருந்தது: எங்கள் தரப்பில் அவர் வயலை எங்களிடம் ஒப்படைத்து விட்டார் என்பதற்கு எத்தகைய ஆதாரமோ, அல்லது சாட்சியங்களோ இடையிலே கிடையாது. எழுத்து மூலமான ஆதாரமின்றி, இந்த விஷயத்தில் மட்டும், வழக்காடவே முடியாதாம்!

தொடர்ந்து நல்ல மனிதரான நயவஞ்சகரே இப்போது குறிப்பிட்ட வயலைக் குத்தகைக்குச் சாகுபடி செய்து கொண்டுதான் வருகிறார். முன் பணமும் கட்டவில்லை; புதிதாகக் குத்தகைச் சீட்டு எழுதிக் கொடுக்கவில்லை! காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனானாம் என்கிற கதையாகி விட்டது நிலைமை!

பொதுவாகக் குத்தகைக்குச் சாகுபடி செய்பவருக்கும் விவசாயத்தில் ஊக்கமில்லை; கிடைத்த மட்டிலும் லாபம் என்ற பேராசை தான் பெருகியிருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கும் விவசாயத்தில் ஊக்கமில்லை. சர்வ சுதந்திரத்தையும் இழந்து நிற்கும் அடிமை வாழ்வில் உற்சாகம் எங்கிருந்து பிறக்கும்?

'பாரதியார் கண்ட நிலை மீண்டும் பிறக்குமா?' என்று எண்ணி ஏங்கத்தான் வேண்டியிருக்கிறது. நம்பிக்கையில்தான் மனிதன் உயிர் வாழ்கிறான் என்பது எத்தகைய அற்புதமான பேருண்மை!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

சிறந்த அமிலநாசினியும், மலமிளக்கியும்



நம்பிக்கை

ஒவ்வொரு துறையிலும சில தயாரிப்புகள்தான்
சிறந்த குணமும். பல வருடங்களாக நம்
பிக்கையானதாகவும் பெயர் பெற்று உயர்ந்த இடம்
பெற்றிருக்கின்றன. இந்த நம்பிக்கையான தன்
மைதான் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா உலகில்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டும் 75
வருடங்களுக்கு மேலாக சிபார்சு
செய்யப்பட்ட உலகமறிந்த
தாயரிப்பும் ஆகும்.

அதிகாரம் பெற்ற தயாரிப்பாளர்கள் :
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் (மான்யுபாக்சரிங்) பிரைவேட் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

